கலாநிதி ஜயாநந்தசர்மா சரவணபவன்
இலங்கை வங்கி நிர்வாக சபை
ஸ்ரீலக்ஷ்மி உபாஸகர் ஒழுங்கை
கொக்குவில்



# வாழ்க்கைக்கு அருணகிரி

இறைபணியில் பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ஐயாத்துரை சரவணபவன்
இலங்கை கல்வி நிருவாக சேவை
[illegible] ஒழுங்கை
கோக்குவில்

சிவமயம்

ஓம் முருகா ஓம் முருகா

# வாழ்க்கைக்கு அருணகிரி



## அருணகிரிநாத சுவாமிகள் வரலாறும், பாராயணத் திருப்புகழும்.

இறைபணியில்:
**பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜசர்மா.**
பால் பண்ணை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

கரணவாய் தெற்கு , கப்புது
நுணுப்பாவளை கந்தசுவாமி தேவஸ்தான வெளியீடு
வெளியீடு- 3 ( முதற்பதிப்பு )

01.07.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ பொன்.குமாரசாமிக்குருக்கள் அவர்களின் ஆசியுரை.

சைவசமயம் மிகத் தொன்மையான தமிழர் சமயமாகும். உலகில் உள்ள பல சமயங்கட்கும் வழிகாட்டியான முதற்சமயம். சமயம், பாஷை விருத்தியின் பொருட்டு பல்லாண்டு பல பெரியார்கள் தொண்டாற்றியுள்ளார்கள். அம்மரபு வழியில் தொண்டாற்றிவரும் பெருமை எனது மருமகர் காரை பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மாவுக்கு அமையும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற திருநாவுக்கரசர் திருவாக்குப்படி தமிழும் சைவமும் நிலை பெற்று ஓங்க எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி சொற்பொழிவாற்றி வருகிறார். தமிழும், சைவமும், ஒழுக்கமும் அபிவிருத்தியடைய வேண்டும் என்ற உயர்ந்த கருத்துடன் அறப்பணிபுரிந்து வரும் இவர் முருகன் அடியார்களில் ஒருவரான பக்த அருணகிரியின் வரலாற்றை சிறப்பாகத் தொகுத்து ஆக்கி எங்களுக்குத் தந்துள்ளார். இவர் தொண்டு அளப்பரியது இவருக்கு இப்பணி மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல ஸ்ரீமுருகப்பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசிகள் கூறி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

சிவஸ்ரீ பொன். குமாரசாமிக்குருக்கள்.
முத்துவினாயகர் கோவில்,
2/2 கண்டிறோட்,
பெலியாகொடை,
கொழும்பு.

☆

### தர்மம்

எந்தவித எதிர்பார்ப்புமின்றி ஏழைகளுக்கு உதவிசெய்தலே தர்மம் எனப்படும். அதாவது ஏழைகளுக்கு உதவிசெய்தல் தர்மம் , யோகிகள், ஞானிகள், குரு போன்றவர்களுக்குப் பொருள்கொடுத்து அவர்களின் வாழ்த்தைப் ( ஆசீர்வாதத்தைப்) பெறுதல் **தானம்** எனப்படும்.

☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

"ஸ்கந்தஸ்ய அதுலாம் கீர்த்கலிகல்மஷ நாசினீம்"

(கந்தனை வணங்குவோர்க்குக் கலியின் கொடுமையும் காலன் படிமும் வராது) என்பது ஸ்கந்தபுராணத்தின் மகா வாக்கியமாகும்.

இதற்கேற்ப இக்கலியுகத்தில் முருகவழிபாடு சிறப்பு அடைந்துள்ளது. அருளாரமுகத்தை அள்ளி அள்ளி வழங்கும் வள்ளலான முருகன் புகழை அருணகிரிநாதர் சந்தக்கவியில், செந்தமிழில் வடித்துத் தந்துள்ளார். அவர் பெற்ற அனுப ஞானங்கள் அனுபூதியாகவும் அலங்காரமாகவும் அந்தாதியாகவும், வேல்விருத்தம், மயில்விருத்தம் திருவகுப்பு ஆகவும் நமக்குக் கிடைத்துள்ளன.

சிவம் பொலியும் கரணவாய் தெற்கு நுணுப்பாவளைக் கந்த சாமி கோவில் உரிமையாளரில் ஒருவரான திரு.கதிர்ப்பிள்ளை தம்பி அவர்கள் அருணகிரிநாதர் அவர்களின் வரலாற்றை நூல்வடிவில் வெளியிடவேண்டும் என ஆவல் கொண்டிருந்தார். அவரது ஆவல் நிறைவேற முருகன் அருள் வண்ணமும் கைகூடியது. இவ்வருட ஆனி உத்தரப் பெருவிழாவில் "அருணகிரிநாதர் வரலாறு" வெளி வரும் என்பதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

ஆலயத்தின் பரிவாரத்தில் அருணகிரிநாதர் எழுந்தருளி இருப்பதும் இந்நூல் வெளியிடுவதற்கும் பொருத்தப்பாடு உடையதே "செயற்கரிய செய்வார் பெரியார்" என்பது வாய்மொழி . இவ்வரிய செயலை வாழ்த்துவதுடன் இந்நூல் வெளிவருவதற்குத் துணை போந்த அத்தனை அடியார்க்கும் ஆசிவேண்டி முருகனைப் பிரார்த் திக்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக
மெல்லாம்"

பண்டிதர் கை.நமசிவாயக்குருக்கள்

கரணவாய்கிழக்கு
கரவெட்டி
21.5.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

பேராசிரியர் கலாநிதி பு.கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

முருகப்பெருமானின் அருள்பெற்றவர்கள் பலராயினும் பிரணவ உபதேசம் பெற்றவர்களில் அருணகிரிநாதர் குறிப்பிடத்தக்கவர். நரசிரேட்டர் என்ற நிலையில் மனிதருள் சிறந்ததோர் மேன்மைநிலையை அடைந்தவர். உலகில் வாழும் மக்களது சிந்தை குளிர, செவிகுளிர, உயிர்குளிர, ஊன்குளிர, திருப்புகழ் என்ற அமுத மழையைப் பொழிந்தவர் அருணகிரி. வாக்கிற்கு அருணகிரி; கருணைக்கு அருணகிரி என்ற சிறப்புப் பெயர்கள் பெற்றவர். இக்காரணத்தினால்தான் அநுபூதிமானாகிய தாயுமானவர் அருண கிரியின் பெருமையைப் பாராட்டுகிறார்.

கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதி சொன்ன எந்தையருள்
நாடி யிருக்கு நாள் எந்நாளோ ?

---

ஐயா அருணகிரி அப்பா உன்னைப் போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினரார் -- வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னையாய் முக்கணெந்தை
நாற்றிசைக்குங் கை காட்டினான்.

எனத்துதிக்கின்றார் அருணகிரி முருகன் உபதேசம் பெற்றவர் 'சும்மா இரு' என்ற உபதேசத்துடன் 'ஓம்' என்ற பிரணவ உபதேசம் கிடைக்கப்பெற்றவர்.

'அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியென இளமைப் பொழுதில் வாழ்வித்த வேதியனும்'

என திருவகுப்பில் கூறிய அருணகிரியார் சகலகலா வல்லுனராகி, சிவஞானச் செம்மலாக அழகிய தமிழில் திருப்புகழ் பாடி சிறப்படைந்தவர்.

'திருப்புகழ் விருப்பமொடு செப்பென
எனக் கருள்கை மறவேனே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அருணகிரி நாதரே கூறுகின்றார். திருவண்ணாமலையில் அருணகிரி நாதரை 'திருப்புகழ் பாடுக' எனக் கட்டளையிட்டு அவருக்கு வாக்கு வன்மை தந்த கந்தவேள் வயலூரில் திருப்புகழ் பாடும் திறனையும் தந்தருளியவர் முருகன். திருப்புகழ் முருகனது திருமார்பில் விளங்கும் ஞான ஒளியுடன் கூடிய திரு ஆபரணமாக உள்ளது. இது தெய்வத்திறமையாகப் போற்றப் படுவது முருகனை நினைந்துருகிப் பாடவும் பக்தியை வளர்க்கவும் பெரிதும் துணைபுரிய வல்லது. திருப்புகழில் ஓதி ஓதி உயரத்தக்க பாடல்கள் அனேகம் உண்டு.

பல்வேறு தலங்களை தரிசித்து பேறு பெற்றவர் அருணகிரி. திருச்செந்தூரில் நடனதரிசனம் பெற்றார். பழநியில் ஜபமாலை பெற்றார். திருவேரகத்தில் பிரணவ மந்திர உபதேசம் பெற்றார். விராலி மலையில் அஷ்டமா சித்திகளையும் பெற்றார். வயலூரில் சிறந்த வாக்குவளம் பெற்றார். வில்லி புத்தூராருடன் வாதிட்டுப் புலவர்களின் காதுகளை அறுக்கும் வன்மையை அகற்றி நன்மை புரிந்தார். இத் தெய்வீக நிகழ்ச்சிகள் அவரது வாழ்வில் அவரது பக்தித்திறனை வெளிப்படுத்தின.

இத்தகைய பக்தி நலனும் அனுபூதிச்சிறப்பும் கொண்ட பாடல்களைப் பாடிய அருணகிரியார் வரலாற்றையும் அவரது திருப்புகழ் பாடற் தொகுப்பையும் கொண்டு 'வாழ்க்கைக்கு அருணகிரி' என்ற தலைப்பில் காரை பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா இந்நூலை ஆக்கியுள்ளார். பிரம்ஸ்ரீ கு.சிவராஜசர்மா "அறிவியல் நோக்கில் ஆன்மீகம்" என்ற தலைப்பில் அண்மைக் காலமாக ஆலயங்களில் சொற்பொழிவுகள் மூலம் அன்பர்களின் சிந்தனைக்கு விருந்தளிக்கத்தக்க கருத்துக்களை வழங்கி வருகின்றார். இவ்வகையில் இவர் பெற்ற அனுபவக் கருத்துக்களைக் கொண்டு கன்னி முயற்சியாக இந்நூலை உருவாக்கியுள்ளார். இவரது இந்நூலை கரணவாய் தெற்கு கப்புது நுணப்பாவளைக் கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையினர் வெளியிட முன்வந்துள்ளனர். இவரது இம்முயற்சியை சைவ உலகம் உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலில் அருணகிரிநாதரின் வரலாறு பல்வேறு நூல்களின் துணைகொண்டு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் சிறப்பாக "வாழ்க்கைப்பயன்பாட்டில் திருப்புகழ்" என்ற தலைப்பிலும் "பாராயணத்திற்குத் திருப்புகழ்" என்ற தலைப்பிலும் திருப்புகழின் பெருமை பேசப்படுகின்றது. இந்நூல் உலகியல் இன்பங்களில் மயங்குபவர் அடையும் இன்னல்களையும் தெய்வபக்தி உள்ளவர்கள் அடையும் மேன்மையையும் சித்திரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா இந்நூலின் வழிபெற்ற அனுபவத்தின் பயனாய் மேலும் சிறந்த சிந்தனைகளை உள்ளடக்கிய நூலாக்கத்தில் ஈடுபட்டு சைவ உலகுக்கு உதவ வேண்டும். என வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். அவரது சகல முயற்சிகளும் வெற்றி பெற முருகப்பெருமானின் திருவருளும் அருணகிரிநாதரின் குருவருளும் குறைவின்றி பொலிவதாகுக!

27.04.1998 ப.கோபாலகிருஷ்ணஐயர்.

### பிரதட்சணம்

விநாயகரை ஒருதரம், சிவன், அம்மன் மூன்றுதரம், சூரியன் இரண்டுதரம், விஷ்ணு , லக்ஷ்மியை நான்குதரம், அரச மரத்தை ஏழுதரமும், அமாவாசை திங்கட்கிழமை இரண்டும் சேர்ந்து வந்தால் ஆயிரத்து எட்டுத்தரம் வலம் வருதல் வேண்டும். கணவன் முன்னே மனைவி பின்னர் அதன் பின்னர் பிள்ளைகள் செல்லல் வேண்டும். இப்படியாகப் பிரதட்சணம்(வலம்வரல்) செய்தால் பூரணபலனைப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா அவர்களின் வாழ்த்துரை.

---

இக்காலத்தில் மக்கள் மனப்போக்கு இருக்கின்ற நிலையிற் சமயத்தொண்டு புரிவதென்பது இலகுவான காரியமன்று. சிக்கலானது எதிர் நீச்சல் போன்றது. அத்தகைய கடினமான கைங்கரியத்தை மிகச் சிறந்த முறையில் ஆற்றி வருகின்ற காரை பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா அவர்கள் சைவப்பெருலகில் பாராட்டுக் குரியவர். இவருடைய சொற்பொழிவுகள் மெஞ்ஞான, விஞ்ஞான தத்துவங்களாக மிளிர்வதைக் காணலாம். நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சர்மா அவர்கள் முருக பக்தரான அருணகிரிநாதரின் வரலாற்றை விரிவாகத் தெளிவாகத் தொகுத்து அரிய நூலாக அமைந்துள்ளதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இது வரவேற்கத் தக்கது. இப்பணியை நான் பாராட்டி நல்வாழ்த்துக்கூறி அமைக்கின்றேன்.

சுபமஸ்து!

"திருவேரகம்"
48, 2வது லேன்,
பிரவுண்றோட்,
கந்தர்மடம்


காணகதாவாரிதி
பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ம.கதிரிப்பிள்ளை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## வாழ்த்துரை

மானிட வாழ்வை உணர்ந்து, அனுபவித்து இறைவனைப் பற்றிப்பிடித்தவர் அருணகிரிநாதர். அவரது பாடல்கள் வாழ்வியல்அனுபூதி மிக்கவை. நான் தீய வாழ்வை அனுபவித்து விட்டேன். எனிமேல் நான் தீயவன் தானே. என எண்ணும் ஆத்மாவுக்கு, வாழ்வுகாட்டும் அருட்பாடல்கள்தான் அருண கிரிநாதர் சுவாமிகள் பாடிய பாடல்கள். அவரது வரலாறு மற்றயவர் புனிதமாக உதவும்அருந்தீர்த்தம். சைவசமயத்தவர்கள் எந்நாளும் போற்றிப் பேண வேண்டிய நூல்களைத்தந்த அருணகிரியார் வரலாற்றை நூலாக்கும் முயற்சியில் முனைந்து பணியாற்றும் பெரும் புரவலர் என் மதிப்புக்குரிய மகதிரிப்பிள்ளை ஐயா அவர்களின் கருத்துடைய பணியை பணிந்து வாழ்த்துகிறேன். நூலாக்கித் தொண்டாற்றும் பிரமஸ்ரீ சிவராஜசர்மா ஐயா அவர்களின் அரிய தொண்டைப் போற்றி வணங்குகிறேன். எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருளால் இம்மலர் பிரகாசிக்க பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

செஞ்சொற் செல்வர் – ஆறு. திருமுருகன்.B.A

### பக்தியால் விளையும் நன்மைகள்

பூஜை, ஜபம் ஆகியவைகை விட்டில் நடப்பதால் வீட்டின் சூழ்நிலையே மேன்மையடைகிறது. அவர்களை ஒட்டியுள்ள குடும்பத்தர் அனைவருமே அந்த நற்பலனைப் பெறுகின்றார்கள். இதில் மனம் ஊன்றி ஈடுபட்டால் அறிவுக் கூர்மையும், சிந்தனை ஆழமும் கிடைக்கின்றது. இதனால் குழந்தைகள் படிக்க கட்டாயமாக உட்கார்வது போல நாமும் நேரத்தை ஒதுக்கி கட்டாயமாக உட்கார வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களின் அறிமுக உரை

மூவர் பெருமக்கள் ஊர்தோறும் சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானைப் போற்றிப்பாடினார். அது தேவாரம் ஆயிற்று. ஆழ்வார்கள் திருமால் எழுந்தருளியிருக்கும் தலங்களை மங்கள சாஸனம் செய்தனர். அது திவ்விய பிரபந்தம் ஆயிற்று. அருணகிரிநாதர் முருகப்பெருமான் உவந்துறையும் திருத்தலங்களை, சந்த நலங்கனிந்த பாக்களால் சிறப்பித்துப் பாடினார். அது திருப்புகழ் ஆயிற்று.

"......நமக்கு அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்பாடு;"

–இது சுந்தரமூர்த்திநாயனாருக்கு இறைவன் இட்ட கட்டளை. "மயிலையும், கடப்பமாலையையும், வேலையும், சேவலையும் நம்மையெல்லாம் ரட்சிக்கின்ற திருவடியையும், பன்னிரு தோளையும், வயலூரையும் பாடு;" என்பது அருணகிரியாருக்கு முருகன் இட்ட கட்டளை.

"பக்கரைவி சித்திரமணி பொற்கலணை யிட்டநடை
பகஷி யெனும் முக்ரதுர கமுநீப
பக்குவ மலர்த்தொடையும் அக்குவடு பட்டழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரகைஷ தரு
சிற்றடியும் முற்றியபன் னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே"

திருப்புகழ் மட்டுமன்றி கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம், திருவகுப்பு முதலிய பனுவல்களையும் அருணகிரிநாதர் பாடியுள்ளார். திருப்புகழ் செவிக்கின்பம் தரும் ஒருவகைப் பாவகை. தமிழிலக்கியப் பரப்பில் அதைப்போல ஓசையினிமை குலவும் கவிதை பிறிதில்லையெனலாம். திருப்புகழின் லயம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வது. இதனால் முருக பக்தர்கள் திருமுறைக்கு ஒப்பாக இதைக் கொண்டாடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ் பாடல்கள் நீளமானவைகளாய் இருப்பதால், எல்லோராலும் அவற்றைப் பாராயணம் செய்ய முடிவதில்லை.

வடசொல் விரவிவரும் சில பாக்கள் பொருள் காண அரியவை. இந்நிலையில், எளிதில் பாராயணம் செய்யக்கூடிய பாக்களைத் தேர்ந்து தொகுத்திருக்கிறார் சிவராஜசர்மா அவர்கள்.

குறித்த இகபர நலன்களை வேண்டி ஓதக்கூடிய பாக்களை வகைப்படுத்தித் தந்துள்ளார். அத்துடன் அருணகிரிநாதர் பெருமையை அன்பர்கள் உரைக்கத்தக்க வகையில், வரலாற்றுச் சுருக்கமும் தரப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல பணி.

பிரம்மஸ்ரீ சிவராஜசர்மாவையும் இந் நூலை வெளியிட்ட கப்பூது முருகன் ஆலய நிர்வாகத்தையும் பாராட்டுகிறேன்.

வேலும் மயிலும் துணை.

சோ.பத்மநாதன்
(அதிபர்),
பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி,
14.05. 1998.

திருநீறு

சாணத்தால் திருநீற்றைச் செய்தல் வேண்டும் என்று உபதேச காண்டமும், பிரமோத்ர காண்டமும் விளக்கமாக விளம்பியிருக்கின்றன.

வெண்நிற விபூதி – போக மோக்ஷங்களைக் கொடுக்கும்.
கருநிற விபூதி – வியாதியை உண்டாக்கும்.
செந்நிற விபூதி – கீர்த்தியைக் குறைக்கும்
புகைநிற விபூதி – ஆயுளைக் குறைக்கும்
பொன்நிற விபூதி – செல்வத்தைக் கெடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வங்கி பிரதேசமுகாமையாளர்
## உயர்திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களின்
## வாழ்த்துரை

தமிழ்க் கடவுள் என்று குமரனைக் குறிப்பிடுவார்கள். அவர்தம் பார்வை பெற்ற பக்தர்களில் பலர் தமிழிலே சாகாவரம் பெற்ற நூல்களையும், பாக்களையும் அருளிச் சென்றுள்ளதை நாம் அறிவோம்.

முருகன் திருவருள் பெற்ற மனிதப்பிறவிகளிலே அருணகிரிநாதர் நட்சத்திரக் கூட்டத்திலே ஒரு முழு நிலவைப் போன்றவர்.

கிளியின் வடிவிலே முருகனின் தோளில் அமர்ந்து கந்தர் அநுபூதியை ஓதும் பேறுபெற்ற மகான்.

இத்தகைய புண்ணிய ஆத்மாக்களின் சரித்திரம் மனித குலம் இவ் வையகத்தில் இருக்கும் வரை வாசித்துப், பூசித்துக் காக்க வேண்டிய ஒரு பொக்கிஷம்.

சமூகத்தில் பல சீர்கேடுகள் மலிந்து நமது இளைய சந்ததியினரும் வழிமாறிப் போய்க்கொண்டிருக்கும் இவ்வேளையில் மகான்களின் வழிகாட்டல் அவர்களின் வாழ்க்கை முறை, இறைவனின் அருள் பெற்று முத்தியடைந்தமை என்பன அவர்களை நேர்வழியில் திருப்ப உதவும் என்பது எனது பணிவான அபிப்பிராயம்.

இத்தகைய ஒரு முயற்சியைத்தான் நோக்காகக் கொண்டு எமது இலங்கை வங்கியின் உத்தியோகத்தர் பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா அவர்கள் இந்நூலை ஆக்கியிருக்கிறார் என எண்ணுகிறேன். இன்றைய இளைய சமுதாயத்தினரில் எண்ணற்றோருக்கு அருணகிரிநாதர் யார் என்றுகூடத் தெரியாதஒரு நிலைதான் நிலவுகிறது. ஆகவே இந்நூல் இவ்வேளையில் ஆக்கப்படுவது பலருக்கும் உபயோகப்படும். அதேவேளையில் இதை வாசிப்பதன் மூலம் ஆத்ம சுத்தியையும் இறையருளையும் பெறவும் உதவும் என எண்ணி இந்நூல் ஆக்கியோனுக்கு என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. பாலசுப்பிரமணியம்,
பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வங்கி 2ம் கிளை முகாமையாளர் உயர்திரு. வே. இராமபெருமாள் அவர்களின் வாழ்த்துரை.

இந்நூலைச் சிறப்புற ஆக்கிய பிரம்மஸ்ரீ சிவராஜசர்மா அவர்கள் தலைசிறந்த சைவத்திருத்தலங்கள் பல அமைந்துள்ள காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிகளில் தமது கல்வியைப் பெற்ற இவர் 1976ம் ஆண்டில் இலங்கை வங்கியுடன் தனது வாழ்வை இணைத்துக்கொண்டவர். கடந்த 22 வருடங்களாக இலங்கை வங்கியில் பலவகை வங்கிச்சேவைகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு எமது மக்களுக்கு சேவையாற்றுவதில் இன்புற்றுவருகிறார். இலங்கை வங்கியின் உத்தியோகத்தரான இவர் தானே முன்வந்து இன்முகத்துடன் வாடிக்கையாளருக்கு உதவும் இயல்பான அன்புள்ளம் கொண்டவர். எத்தகைய அழுத்தமான வேலைப்பழு இருந்தபோதும் உணர்ச்சிவசப்படாது அறிவுபூர்வமாக வாடிக்கையாளர்களின் பிரச்சினைகளை அணுகுபவர். இதனால் இயல்பாகவே இவரை நாடிய ஒரு வாடிக்கையாளர் கூட்டம் இருக்கும். வங்கியின் பல்வேறு வேலைத்திட்டங்களில் அக்கறையுடன் பங்கேற்பவர். குறிப்பாக சேமிப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் கணிசமான பங்களிப்பு செய்துள்ளார்.

பொதுவாகவே வங்கி உத்தியோகத்தர்களுக்கு நேரம் பற்றாமை என ஒரு குறையுண்டு. ஆனால் சர்மா அவர்கள் தமது வங்கி உத்தியோகக் கடமை நேரத்திற்குப் புறம்பாக, சமய சமூக முன்னேற்றத்துக்காக மிக்க ஈடுபாட்டுடன் அவற்றுக்கெனவும் தமது நேரத்தினை ஒதுக்கியுள்ளார்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலை ஆகியவற்றின் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களில் கௌரவ கணக்காய்வாளராகப் பல வருடங்கள் பணியாற்றி உள்ளார். யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் அபிவிருத்திச்சபைகள், சைவவித்தியா விருத்திச் சங்கம் என்பவற்றின் செயற்குழு உறுப்பினராகவும் கடமை புரிந்துள்ளார். நல்ல அனுபவம் வாய்ந்த புகைப்படக் கலைஞரான இவர் வடமாகாண புகைப்படப்பிடிப்பாளர் சங்கத்தில் கணக்காய்வாளராகவும் ஆலோசகராகவும் இருக்கிறார். வண்ணார்பண்ணை சாந்தையார்மடம் கற்பகவிநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் உபதலைவர் பதவியையும் ஏற்றுள்ளார். சிறந்த விவசாயியான இவர் இரசாயன மருந்துப் பாவனையில்லாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறி வகைகளின் நோய் பீடைகளை இயற்கை வழியில் ஈடுபட்டுள்ளார். சில வெற்றிகண்ட முடிவுகளை தமது அன்பர்கள் சிலருக்கு தெரிவித்து! அவர்களும் இம்முறையை நாடியுள்ளனர்.

பிரம்மஸ்ரீ சிவராஜசர்மா அவர்கள் சிறந்த சமய விரிவுரைகள் நிகழ்த்துவதில் வல்லவராக வளர்ந்து வருகிறார். கோவில்கள், சமயமன்றங்கள் பலவற்றில் அரியபல சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். குறிப்பாக சமயநிகழ்ச்சிகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவற்றினை அறிவியல் பூர்வமாக யாவரும் ஏற்கும் வகையிலும் விளங்கிக்கொள்ளும் வகையிலும் உரையாற்றுவார். உதாரணங்களுடனும் அனுபவ உண்மைகளுடனும் ஆன்மீகச் சிந்தனைகளை விளக்கி வருகிறார். கடந்த மூன்று வருடங்களாக நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில் திருவிழாக் காலத்தில் தொடர்ந்து இருபத்தைந்து நாளும் தொடர் விரிவுரைகள் ஆற்றிவருகிறார்.

இத்தகைய சித்தம் அழகிய சர்மா அவர்கள் "வாழ்க்கைக்கு அருணகிரி" என்ற நூலை எழுத முன்வந்தமை ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இவரது சமய சொற்பொழிவுகளின் ஈடுபாடும், சமய அன்பர்களின் பெரியார்களின் ஊக்குவிப்பும் உறுதுணைபுரிய இவருக்கு இம்முயற்சியில் வெற்றி கிட்டியுள்ளது. இது இவரது கன்னி முயற்சியாயினும் நூல் சிறப்பாக வர திருவருள் கூடியுள்ளது. கரணவாய் தெற்கு கப்புதூ நுணுப்பாவளைக் கந்தசாமி கோவில் தேவஸ்தானத்தினர் இவரது திறமைகளை சரிவர இனங்கண்டு அவரை ஊக்குவித்து இந்நூலைத் தமது வெளியீடாக கொணர முன்வந்தமை பாராட்டுதற்குரியது. இந்த முயற்சியில் இவர்களுடன் இணைந்து பணியாற்றிய அனைவரும் முருகனின் அன்பிற்கும் அருளுக்கும் பாத்திரமானவர்களே.

சர்மா அவர்கள் அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாற்றை இயன்றளவு சுருக்கமாக தமது சொந்த கருத்துக்களால் கறைப்படுத்தப்படாமல் எழுதியிருக்கிறார். அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளுடன் திருப்புகழ், கந்தரலங்காரம், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரனுபூதி, வேல்மயில், சேவல் விருத்தம் போன்ற நூல்களில் பரவியுள்ள சமயவாழ்வுக்கு ஆதாரமான அமுதமொழிகளை அவ்வப்போது தக்க உதாரணங்களோடு விளக்கமுயன்றுள்ளார். இப்பணித்திட்டம் விரிவடையுமாயின் இக்கால சூழலில் சிரமம் பலவற்றுக்கு உள்ளாக நேரும். ஆதலால் சுருக்கமாக எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை யாவரும் கருத்தூன்றிப் படித்து பயனடைய வேண்டும் என்று விரும்புகின்றேன். இந்நூலாசிரியரின் இத்துறை சார்ந்த முயற்சி மேலும் மேலோங்கி பல அரிய நூல்களை எமது சமூகத்திற்கு வழங்க எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருவருள் புரிய வேண்டும் என வணங்குகின்றேன் வாழ்த்துகின்றேன்.

நன்றி

வே.ஐயம்பெருமாள்
முகாமையாளர்

கந்தரலங்காரம்

காப்பு

கட்டளைக் கலித்துறை

அடலரு ணைத்திருக் கோபுரத்
தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண்
டேன்வரு வார்தலையிற்
றடப டெனப்படு குட்டுடன்
சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக்
கிளைய களிற்றினையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுரை
## திரு.ம.கதிர்ப்பிள்ளை அவர்கள்

எல்லாம் வல்ல தும்பிக்கையான் துணைநிற்க கலியுக முருகரன் திருப்புகழைப்பாடிப் புகழ்ந்த அருணகிரிநாதரின் வாழ்க்கைச் சுருக்கத்தையும் திருப்புகள் சிலவற்றையும் உள்ளடக்கிய இவ்நூலை வெளியாக்கி, மக்களின் மனதில் பதியவைக்க வேண்டும் என பலகாலமாக எடுத்த முயற்சி அது இன்று (01.07.1998) வெளியானவையை இட்டு பெரும் மகிழ்ச்சியடைவது ஒரு முருகன் கடாச்சம் யாவற்கும் திருவருள் பாலிப்பாராக.

"வாக்கிற் கருணகிரி என்பது மல்லாமல்"

வாழ்க்கைக்கு அருணகிரி என்னும் அரிய இவ் நூலை வெளியாக்கித் தலைமை தாங்கி முன்வந்திருக்கும் வைத்தியக்கலாநிதி திரு.கதிரவேற்பிள்ளை ஐயா அவர்கட்கு எமது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டு

மற்றும் இவ்வாலயச் சிவாச்சாரியப் பெருமைக்குரிய குருக்கள் யாவர்க்கும் மற்றும் உதவியாயுள்ளவர்கட்கும் கரம் கூப்பி வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு

மற்றும் ஆலய நிர்வாகிகட்கும் ஆசியுரை பாராட்டுரைகள் வாழ்த்துரைகள் வழங்கிய ஆச்சாரியப் பெருமக்களுக்கம் அறிஞர் பெருமக்களுக்கும்

இவ்நூலை சிறப்புரைதந்த பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா அவர்கள் அயராது விடாமுயற்சியால் இவ்நூல் இவ்வளவிற்கு சிறப்பித்தமைத்துத் தரப்பெற்ற அவர்கட்கும் நமது பாராட்டையும் எமது மனமுவந்து நன்றியைத் தெரிவித்துக்கொண்டு

இவ் நூல் சிறப்பாக அமைவதற்கு அன்றும் இன்றும் எம்முடன் உதவிய அன்பர்கு

திருப்புகளின் விநாயகர் துதியை பாடி
மருவு மலர்புனை தோத்திர சொற்கொடு வளர்கை
குழைபிடி தொப்பன் குட்டொடு வனசபரிப்புர
பொற்பத அர்ச்சனை மறவேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காப்புடன் என்றும் இப்பெரும் பணிகளில் சிறந்து விளங்கி வரும் எமது அன்புக்குரிய திரு.சிநாகலிங்கம் அவர்கள் ஆற்றிவரும்பல திருப்பணிகளிலும் பல சைவத் தொண்டுகளிலும் பணியாற்றும் இவர் வாழ்க்கைக்கு அருணகிரி என்னும் இவ்நூலை உருவாக்க முழுமையாக எம்முடன் ஒத்துழைத்தது மட்டுமல்ல சகலவிதமான போக்குவரத்து உதவிகளைத் தந்துள்ளார்.

இதுமட்டுமல்ல இவ்நூலாசிரியர் அவர்களின் நல்லாசி களையும் முன்வைத்தவர் சிநாகலிங்கம் ஆவார். அவர்க்கும் அவர் குடும்பத்தினர் அனைவர்க்கும் அருணகிரிநாதப்பெருமான் கடாச்சம் பாலிக்க வேண்டி எமது மனமகிழ்ச்சியான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இவ்விழாவிற்கு வருகைதந்துதவிய முருகன் அடியார்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து வாழ்த்துகின்றேன்.

குறிப்பு:-

இந்நூலால்வரும் பணம்பொருள் யாவும் இவ் ஆலயத்திற்கே உரியது.

நன்றி

ம.கதிரிப்பிள்ளை,
காரணவாய்.

**வேல்**

கருணை வடிவமாகிய முருகன் வாழ், வேல் முதலிய ஆயுதங்கள் ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அன்று வேல் என்பது ஞானம். அறிவுக்கு மூன்று இலக்கணம் உண்டு. 1)ஆழம் 2) அகலம் 3)கூர்மை வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கின்றது நடுப்பகுதி விசாலமாக இருக்கின்றது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கின்றது. **“ஆழ்ந்தகன்ற நுண்ணியனே”** என்றார் மணிவாசகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே.ஐயம்பெருமான்,
முகாமையாளர்.

## தெய்வச் செயல்

தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள கலை பண்பாட்டு பேரவையில் "அறிவியல் நோக்கில் ஆன்மீகம் " என்னும் பொருளில் 19.09.1997 ஆம் திகதி விரிவுரை நடாத்தும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பும் ஒரு விரிவுரை நடாத்தியிருந்தோம். இரு உரைகளையும் மிகுந்த உணர்வு பூர்வமாக திரு மயில்வாகனம் கதிரிப்பிள்ளை கேட்டு பயனடைந்தார்.

19.09.1997 ஆம் திகதி அன்று மேடையால் இறங்கி வர ஐயா, நீங்கள் நிரம்ப கருத்தாழமாகப் பேசுகின்றீர்கள். தற்காலத்திற்கு ஏற்ற முறையில் விஞ்ஞானக் கருத்துக்களை இணைத்து ஆற்றும் உரையைப் பொறுத்தவரை நீங்கள் தனித்துவமாக இருக்கின்றீர்கள். எனவே எமக்கு நீங்கள் அருணகிரிநாதர் வரலாற்றை எழுதித்தர வேண்டும் என அன்புக் கட்டளை விடுத்தார் திரு. கதிரிப்பிள்ளை அவர்கள்.

எமக்கு சிந்திப்பதற்குக்கூட அவகாசம் தராமல் ஐயா நாங்கள் வீட்டிற்கு வருகின்றோம். ஆகவேண்டியவைகளை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என எனக்குப் பதில் சொல்வதற்கே சந்தர்ப்பம் தரவில்லை. இதனை **முருகனே** இவர் வடிவில் வந்ததாக கருதுகின்றேன். ஏன் எனில் நீண்ட நாட்களாக **"அறிவியல் நோக்கில் ஆன்மீகம்"** என்னும் நூலை வெளியிட வேண்டும் என்ற அவா எமக்கிருந்தது. ஆனால் அருணகிரி நாதரைப் பற்றிய நூல் எழுதும் நோக்கம் எம் சிந்தையில் அமைந்து இருக்கவில்லை முருகனின் திருவிளையாடலே எம்மை இந்நூலை எழுதத் தூண்டுதலாக அமைந்தது. முருகன் தனது பக்தனாகிய அருணகிரியைப் பற்றி எம்மூலம் எழுதுவிக்கின்றார் என எண்ணி திருப்தியடைந்தோம். கரணவாய் எமது தகப்பனாரின் ஊர் எனவே எல்லாத் தொடர்புகளும் ஒன்று சேர்த்து உந்தித்தள்ள இந் நூலை எழுதுவதற்கு முன்வந்தேன்.

முருகன் திருவருளே எம்மை எழுத வைத்துள்ளது. அருணகிரி பற்றி எழுதிய பின்னர் தொடர்ந்து எழுத நேரம் இருக்கவில்லை. என்னே முருகனின் சோதனை என எண்ணி சற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுந்தளர்ந்திருந்தேன். ஒரு நாள் யாழ் நகரிலுள்ள கதிரேசன் கோவில் முருகனை வணங்கி நூலை கூடிய விரைவில் எழுதுவதற்கு அருளும் வண்ணம் மனமுருக வேண்டினேன். பின்னர் அருகிலிருந்த ஸ்ரீலங்கா புத்தக சாலைக்குச் சென்று அருணகிரி நாதரைப் பற்றிய நூல் யாதாவது இருக்குமோ எனக் கேட்டோம்.

அங்கு **"அருணகிரிநாத புராணம்"** என்னும் நூல் என்கென இருந்தது போன்று இரு அட்டைகளும் அற்ற நிலையில் காணப்பட்டது. இது முருகன் திருவருளே என ஏற்று அந்நூலைப் பெற்று அதனை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றை எழுத முயன்றுள்ளேன். வாசகர்களும் இதனை உணரவேண்டும் என்ற நோக்கில் இதனை இங்கு குறிப்பிட வேண்டியதாயிற்று.

உண்மையே உள்ளத்தில் விளங்கும் வண்ணம் முருக பிரானைப் பிரார்த்தித்து அவன் திருவருளையே துணையாகக் கொண்டு இந் நூலினை எழுதியுள்ளேன். அருணகிரிநாதர் வரலாறு இருவிதமாகக் கூறப்பட்டுள்ளது. இதனை அன்பர்கள் அமைதியு டன் சிந்தித்து உண்மையை அறிதல் கடனாகும். "வாழ்க்கைக்கு அருணகிரி" என்ற தலைப்பில் ஏன் எழுதினோம் என்பதும் சிந்திப்பதற்குரியது. வெறும் வரலாற்றைப் படிப்பதால் யாது பயன் ?

ஒன்றைப்படிப்பதால் அது வாழ்க்கைக்கு உதவ வேண்டும். வளமுடன் மனிதன் வாழ்வதற்கு உதவாது எனில் எந்த சாத்திரமும் மனிதனுக்கு தேவையில்லை. வாழ வழிகாட்ட முடியாததை சாத்திரமாக இந்து தருமம் மனிதனை பின்பற்றச் சொல்லவில்லை. உயர்ந்த கருத்துக்களை உபகதைகளின் மூலம் தான் மக்கள் மனதில் நன்கு பதியச் செய்ய முடியும் என்ற உண்மையை நம்முன்னோர் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். எனவே எமது வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டியவை பற்றி இங்கு நாம் சிந்தித்துள்ளோம். எனவே இதனை முருகனின் தெய்வீகக் கட்டளையாக ஏற்று இயன்றளவு கருத்துக்களைக் கூற முற்பட் டுள்ளோம். இதில் உள்ள குற்றங்களை நீக்கி குணங்களை கொள்ளுமாறு அன்பர்களைப் பணிவாக வேண்டுகின்றோம். இம்மலரை முருகப்பெருமானின் பாதத் தாமரையில் பக்தி பூர்வமாக சமர்ப்பிக்கின்றோம்.

**நன்றிகள் பல :**

இந்நூல் சிறப்புற வருவதற்கு முதற்காரணகர்த்தராக விளங்கியவர் யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேராசிரியர், கலாநிதி ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர்களாவார். அவரிடம் எந்நேரம் சென்றாலும் அவருக்குள்ள பல பொறுப்பான வேலைகளுக்கு மத்தியிலும் இந்நூல் தொடர்பாக என்னை உற்சாகப்படுத்தி வேண்டிய ஆலோசனைகள் தந்து என்னை ஊக்குவித்து வேண்டிய நூல்களும் தந்துதவினார். பேராசிரியர்கள் அவர்கள் மேலும் இந்நூலுக்கு சிறப்பான அணிந்துரையுந் தந்து எனது நூலின் மதிப்பினை உயர்த்தியுள்ளார். முதற்கண் எமது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் இந்நூலுக்கு அறிமுக உரை வழங்கியதோடு மட்டுமின்றி தேவையான நூல்களை எனது வீட்டிற்கே அனுப்பி, என்னை உற்சாகப்படுத்திய பெருந்தகையாளர் கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களுக்கும் நன்றிகள் பல. கையெழுத்துப் பிரதியைப் பரிசீலனை செய்து உரை வழங்கிய நித்தியானந்தசர்மாவுக்கும் நன்றிகள். பல வேலைகளுக்கு மத்தியிலும் எனது கையெழுத்துப் பிரதியைப்பார்வையிட்டு அழகான வாழ்த்துரை கூறிய இலங்கை வங்கி முகாமையாளர் திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்கட்கும் இலங்கை வங்கி 2ம் கிளை முகாமையாளர் வே.ஐயம்பெருமாள் அவர்கட்கும் மனப்பூர்வமான நன்றிகள் பல. ஆசியுரை வழங்கிய டொன் குமாரசாமிக்குருக்கள் அவர்கட்கும் நன்றிகள் பல. இந்நூலுக்கு வேண்டிய பல புகைப்படங்களைப் பிடித்து உதவிய செல்வன் சி.திசாகர், செல்வன்.சி.சிவாகர் அவர்கட்கும் கையெழுத்துப்பிரதியை உடனுக்குடன் பிரதிபண்ணி உதவிய செல்வி சி.சசீந்திராவுக்கும் நன்றிகள் பல. என்னையும் ஒரு பொருட்டாக மதித்து என்னை தூண்டி இப்பணியில் ஈடுபடுத்திய கப்பூது கந்தசாமி தேவஸ்தானத்தினருக்கும், குறிப்பாக பொருள் உதவி புரிந்த திரு.மயில்வாகனம் கதிர்ப்பிள்ளைக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள். திரு.கதிர்ப்பிள்ளை அவர்களுக்கு முருகப்பெருமானின் பூரண அருட்கடாட்ஷமும் அருணகிரிநாதரின் குரு அருளும் பொலிவதாகுக. இக்கைங்கரியம் எம்மை கருவியாக பாவித்து செய்விக்கின்ற முருகனின் அருட்செயலே.

ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும் – மாதேவா
நின் செயலே என்று நினதருளாலேயுணரின்
என் செயலே காண்கிலேனே.

தொண்டர்களுக்கு தொண்டன்
காரை, பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01) கப்பூது நுணுப்பாவளை கந்த சுவாமி கோயில் தல வரலாறு. 22
02) பிறப்பு வரலாறு 25
03) முற்பிறப்பு 29
04) பிறவி ஞாபகம் 36
05) வரலாற்றுத்தொடர் 37
06) இளமைப்பொழுதில் 43
07) தடுத்தாட்கொள்ளல் 45
08) அருணகிரிநாதர் ஸ்தல தரிசனம் 48
09) ஈழயாத்திரை 50
10) வில்லி புத்தூராரின் தோல்வி 50
11) சம்பந்தாண்டாள் பகைமை 53
12) பாரிசாதமலர் 60
13) அநுபூதியை அருளுதல் 61
14) வாழ்க்கைப் பயன்பாட்டில் திருப்புகழ் 63
15) நூற்சிறப்பு 66
16) பாராயணத்திருப்புகழ் 66
- 01) திருநீறு இடும்பொழுது 68
- 02) அருள்வேண்டல் 68
- 03) புகழ் பெற, பகையற 69
- 04) உடல் ஊனம் ஒழிய 70
- 05) யமபயம் ஒழிய 71
  - 1) பாதிமதி
  - 2) காலனிடத்
  - 3) ஒரு பொழுது
- 06) முருகன் காட்சி கொடுத்தது. 72
- 07) முக்திவாய்க்க 72
- 08) நிலையாமை உணர 73
- 09) கழல்பெற 73
- 10) திருவடி பெற 73
  - 1) எழுகடல்
  - 2) ஏலமறை
- 11) திருவடிசூட 74
- 12) வினைகெட 74


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) உடல்தளர்ந்த வேளை 75
14) இடர் தொலைய 76
1) அதிருங்
2) சிவனார்
15) திருவருள் கிடைக்க 77
16) முருகன் காட்சிதர 78
1) அகரமுமாகி
2) சுடரணைய
3) வந்து வந்து
4) அதலசேட
17) பெருவாழ்வு பெற 79
18) உள்ளொளி பெருக 79
19) அடியார் இணங்க வைக்க 80
20) 'யான்' எனது அற 80
21) யோகநிலை சேர 81
22) பற்றுக்கள் விலக 81
23) ஓங்காரத்தின் மேல் அன்பு மேலிட 82
24) அநுபூதி பெற 82
25) முருகன் தரிசனம் தர:- எந்த, காலனார், முந்து 82
26) மெய்ப்பொருள் வாய்க்க 84
27) நற்கதி பெற 85
28) இகபர நலன்கள் வாய்க்க 85
29) வாக்கு வன்மை பெற 86
30) திருவடியைப் பாடும் ஆற்றல் 86
31) செந்தமிழால் முருகனைப் பாட 86
32) அறிவால் இறைவனை அறிய 87
33) ஞான ஒளிகாண 88
34) மெஞ்ஞான உபதேசம் வேண்டுதல் 88
35) இம்மை மறுமை இரண்டிலும் சுகம் பெறும் 89
1) உறவின்
2) இருவினை
36) திருமணம் நடைபெற 90
37) கரு சிறப்பாக வளர 91
38) முருகன் திருவடி சேர 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39) உயிர்போகும் பொழுது
1) தொந்தி சரிய 91
2) தந்தபசி
40) இறுதி வேளையில் முருகன் பெயர் சொல்ல 93
41) மரணம் நெருங்கும் போது 93
1) உறவின் முறை
2) எழுவாய்
42) முருக நாமங்கள் ஓதும்போது 95
43) முருக நாமங்கள் ஓதும் பேறு கோர 95
44) பிறவி வேரற 96
1) அப்படி
2) நிலையாத
கந்தரலங்காரம் 97
1) ஆபத்துக்கள் வரினும், பயணம் புறப்படும்பொழுது
2) தனிவழி நடக்கும் பொழுது
3) காலையும் மாலையும்
4) உண்பதற்கு முன்

### தானம்

ஒன்றைத் தர்மமாகக் கொடுத்து அதற்குப் பிரதியாக நம்மை அறியாமல் வேறு ஒரு பலனை உடனே பெற்றுக் கொள்ளுதல் தானமாகும். தவசீலனுக்கு பசுவைக் கொடுக்கின்றோம் அவர் பிரதியாக "நீ பல்லாண்டு வாழ்க" எனத் தவப்பயனைத் தந்து வாழ்த்திச் செல்கின்றார். இங்கே நாம் செய்தது தானமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்புதூ நுணுப்பகவளை கந்தசாமி கோவில் தலவரலாறு

இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தின் முன் இருந்ததாகவும் பழமையும் பெருமையும் உடைய வழிபாட்டுத் தலமாகவும் விளங்கியும் வருங்காலத்தில், யாழ்ப்பாண வாசியாகிய சின்னத்தம்பிப் புலவர் கரவெட்டிப்பகுதியை நாடிச்சென்று வரும் வழியில் இவ்வாலயத்தின் பக்கலில் அமைக்கப்பட்ட எழில்மிகு பந்தலில் தங்கியிருந்து "கரவை வேலன்" கோவை என்னும் இலக்கியத்தைப் பாடியும் வேலாயுதமுதலியாரையும் வாழ்த்தியுமுள்ளார். இக்கால கட்டத்தில் அக்கோயிலை ஒல்லாந்தர் சேதப்படுத்தியும், அவற்றுள் அமைந்திருந்த விக்கிரகங்கள் அனைத்தையும் அருகாமையில் இருந்த குளத்தில் புதைத்தும் மறைத்தும் வைத்துச் சென்றனர். சிலகாலங்கட்குப்பின் பிரிட்டிஷ் ஆட்சி நிலைகொண்டு சிறப்புறும் காலத்தில் கோணர், முருகர், சுப்பர் இவர்கள் பரம்பரையைச் சேர்ந்த கருணைவாய் தெற்கு வாசியாகிய முருகன் வேலுப்பிள்ளை கப்புதூ என்னும் இடத்தில் குடியேறி இருந்தனர். இவர் மாடு, ஆடு போன்ற விலங்குகளுக்கு குடிதண்ணீர் வசதியில்லாக் கவலையினால் மிகமிக வருந்தி தனது சந்ததியில் வரப்பெற்ற உறவினரின் உதவிகளையும்பெற்று எல்லோருடைய மனோபரிபக்குவ நிலையையும் முன்வைத்து ஓர் குளம் அமைக்கும் பணியில் ஈடுபட வேலைகள் தொடர்ந்தன. தொடர்ந்த மூன்றாம் நாள் வேலையிலீடுபட்டு மண் அகற்றி வேலை செய்யும் போது அப்போது கணீர் என்ற நாதம் ஒலித்தது. வேலையாட்கள் திடுக்கிட்டனர். பயத்தினால் தூர ஓடிச்சென்றனர். மீண்டும் மன உறுதியுடன் சென்று தீர ஆராய்ந்து பார்த்தபொழுது அவற்றுள் பல விக்கிரகங்கள் இருந்தன. இதில் ஒரு விக்கிரகத்தின் "காது" சிறிதளவு மண்வெட்டிய ஆயுதம் பட்டதால் உடைந்ததும் அல்லாமல் அந்த இடத்தில் செந்நீர் பொசிவதைக் கண்டு, வடபகுதி கப்புதூவில் வசித்திருந்த கந்தையா ஐயரவர்களையும் உடனடியாக அழைத்து வந்து அவற்றுள் அமைந்திருந்த விக்கிரகங்கள் அனைத்தும் எடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்கள் விபரம் பின்வருமாறு:

விநாயகர், சுப்பிரமணியர், வேல், மயில், வள்ளி, தெய்வயானை, பலிபீடம், வைரவர், நாகதம்பிரான், கண்ணகை, அம்மாள் சிலை என்பனவாகும். அக்குளத்தின் வடமேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] ஐயாத்துரை [illegible]
[illegible] கல்வி [illegible]
ஸ்ரீலக்ஷ்மி உடையார் ஒழுங்கை
கொக்குவில

# கப்பூது நுணுப்பாவளை கந்தசாமிகோவில் மூலமூர்த்திகளின் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையில் ஒரு ஓலைக் கொட்டிலமைத்து விக்கிரகங்களையும் அவற்றுள் அமைத்தனர். வேலை வைத்து பூசை நடத்தி வருங்காலத்தில் முன்மேல் கண்டிருக்கும் புத்திரர்கள் அறுவரும் புத்திரியும். சைவாகம விதிமுறைகளை கவனித்த வண்ணம் இருந்தனர். மூத்த புதல்வனின் திருநாமம் சின்னர் , தக்கர் (இடைக்காலப் பெயர்) இவர் தனது தம்பிமார்கள் ஐவரும் தனது கையாளராகவும் ஏவலாளர்களாகவும் ஆலயப்பணி புரிவதில் சிறந்து விளங்கினர் அல்லாமல் மூதாதை வழித் தோன்றலாகிய தனது உறவினர்களையும் வேறுபாடில்லாமல் தமக்கு பக்கபலமாகத் திரட்டி 1914ம் ஆண்டு கற்கோயில் அமைத்து1926ம் ஆண்டு புனருத்தாபனம் செய்து மிகு சிறப்புடன் கும்பாபிஷேகமும் இவர்களின் பின்சந்ததியினர் நடாத்தினர். இப்பரம்பரையின் உரிமையாளர்களின் பணிகள் இன்றும் பெருமைக்குரியன. வாயிலிருந்து வருவதும் போற்றத்தகும் செயல்களாகும். இவ்வாலயத்திற்குரிய காணி நிலமனைத் தையும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்த தருணத்தில் வேண்டப் பெற்று முடிக்குரிய நிலமாகவும் அழியர் நன்கொடையாகவும் வாசகம் எழுதி வகுத்திருக்கின்றனர். கந்தையா ஐயரவர்கள் வயது தளர்ந்த நிலையின்பின் மகன் அருணாசல ஐயரவர்கள் பூசை வழிபாடு யாவும் நடாத்தி வந்தனர். பின் சில காலம் வைத்தியநாதக் குருக்கள் ஆகம விதிமுறைகளை நிலை கொண்டும் எல்லாம் வல்ல இறைவனிடத்தில் மிக பெரும் பணிகளிலும் அன்னதானத்திலும் அதிக ஈடுபட்டவராகவும் இருந்து வந்தார்கள். பின்பு இவர்களின் நெருங்கிய உறவின ராகிய கனகசபைக் குருக்களிடம் தங்கள் நம் பெரும் பணியையும் ஒப்படைத்திருந்தும் சிவபதம் அடைந்தார்கள். இடைக்காலத்தில் வேலுப்பிள்ளையின் இளைய மகனாகிய குமாரசாமியின் அருந்தவப் புதல்வன் ஏரம்பு ஐயரவர்கள் சிலகாலம் பூசைப்பணி புரிந்தனர். பின் சிலகாலம் பிச்சிஐயர் அவர்கள் சேவை செய்தார்கள். பின் தொடர்ந்து கனகசபைக் குருக்களின் தவத்திரு மைந்தர் தியாகராஜாக் குருக்கள் நித்திய பூசை செய்து வருகிறார்கள். ஆருணாசல ஐயரவர் களின் வழித்தோன்றலாகியவர்களும் விஷேடகால நித்திய பணிகளிலும் பங்குபற்றி நற்பலன் காண்கின்றனர் அதில் ஐயமில்லை. 1938ம் ஆண்டு ஆலயத்திருத்தலங்கள் செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றுமதல் தமிழுக்கு வைகாசி மாதம் அமாவாசையை அடுத்துவரும் சஷ்டி திதியில் அலங்கார உற்சவம் ஆரம்பித்து பூரணை விசாகத்தில் தீர்த்தோற்ஸவத் துடன் முடிவு பெறும் பத்து நாட்களும் அன்னதானமும் மற்றும் விஷேச காலங்களில் விஷேச பூசை நடைபெறுகின்றது. ஆனி உத்திரத்தன்று பக்தர்கள் காவடி சம்பு தாங்குவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதுடன் அன்று அன்னதானமும் நடைபெறும். ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, பாதாந்தக் கார்த்திகை, தைப்பூசம், வருடப்பிறப்பு இவ்விஷேச நாட்களில் விஷேச தீபாராதனை நடைபெறும். கப்புதூ வடபகுதியில் வசிக்கும் அத்தனை மக்களும் அயராது அரும்பெரும் பணிசெய்து வருபவர்கட்கும் எங்கள் தேவஸ்தான சார்பில் நன்றி கூறி இறையருள் சேரவேண்டும் எனவும் வேண்டுகின்றோம். பெரும் குளத்தின் அருகாமையில் தென்மேல் திசையில் பாதுகாவலராகிய பாதாள வைரவர் இடம் பெற்றிருக்கின்றார். கோயிலைச் சார்ந்த இடங்களிலதிக ஈச்சமரங்கள் உண்டு. கட்டடம் வேறு எதுவுமில்லை. ஒரு சூலாயுதத்தை வைத்து தீபாராதனை செய்து வருவதும் வழக்கம். இவ்வாறிருக்க கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லி என்பவர் தனது தொழிலின் தேவைக்கான ஈச்சோலை வெட்டிவரவும் கப்புதூ சென்று பல இடங்களிலும் ஓலை வெட்டிப் பற்றாக்குறையில் மேல்கண்ட கோயிலின் பின்புறமாகிய கிழக்குப்பக்கமாக ஈஞ்சுகள் வளர்ச்சியாகவும் செளிப்பாகவும் கண்டு ஓலை வெட்டினார். அதே சமயம் பொன் பொருள் கண்டு வியந்து பேராசையின் காரணமாகவும் ஆவலோடு பொன்னைக் கைவைத்து அள்ள கையை நீட்டவும் கை வழங்கவில்லை. களை , மயக்கம் யாவும் சூழ்ந்து கொண்டன. இதை அறிந்த கோயில் பூசகராகியிருந்து பணியாற்றிய அருணாசலஐயரவர்கள் விபூதியின் மகிமையினால் களை மயக்கத்தை தெளிவித்தார். கைமுடங்கலாயினவாம். அத்துடன் ஆலயத்திருத்தம் 4, 5 தலைமுறைகளின் பின் வந்தவர்களின் பெரும் பெரும் நன்கொடைகள் காணிக்கை களின் உதவியுடன் இவ்வாலயம் மிகு சிறப்புடன் விளங்கி வருகிறது ... 1972ம் ஆண்டு அருணகிரிநாதசுவாமிகளுக்கோர் ஆலயம் அமைத்தும் அருணகிரிநாதர் சிலை ஒன்று இந்தியாவி லிருந்து தருவிக்கப்பெற்றும் கும்பாவிஷேகம் ஆகமவிதிமுறைப் படியாகவும் பூர்த்தியாகின. மறுதம்ப விக்கிரகம் மகாமண்ட பத்தில் ஆறுமுகசாமிக்கருகாமையில் வைத்துப் பூசை தீபாரா தனை வழங்கி வருவதும் வழக்கம். இவ்வருடம் ஆனிஉத்திர விழா தினத்தில் அருணகிரிநாதசுவாமிகள் சரித்திரம்வெளி யீடாகும். மெய்ப்பொருள் இறைவன் திருவருளே ஆகும்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

"சரவணபவ"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

முருகபக்தர்.
மயில்வாகனம் கதிரிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் பிறப்பு வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா நின்வேலும் மயிலும் உறுதுணையாய் முன்னிற்க வேண்டுவதுடன் இப்பெரும் அறிவுக்களஞ்சியத்தின் குட்பெருஞ்ஜோதியாய் விளங்கும் அரிய தமிழ் வாசகத்தை அள்ளி பருகி பிறவிப் பெருங்கடலை தாண்டி மேல் நிலை அடைந்துய்யும் பொருட்டு அருணகிரிநாத சுவாமிகள் சரித்திரம் வெளிவரும் பணிக்கு முன்வந்து நன்கொடை தந்துதவிய பெருமையும் மகிழ்ச்சியும் தாமோதரம்பிள்ளையின் புண்ணிய சீலர்களாகிய புத்திரர்களில் ஒருவரான பாஸ்கரன் குடும்பத்தினர்கட்கும் திருவருள் நற்பணி மேலோங்கி விளங்குக.

முருகனின் திருவடி சரணம் சரணம்.

## 01 பிறப்புவரலாறு

சிவன் அக்கினிப்பிழம்பாக அயனுக்கும் அரிக்கும் காட்சி கொடுத்த இடம் திருவண்ணா மலையாகும். சிவபிரானே நெருப்புமலையாய் விளங்கினார் என்றால் இம்மலையிற்கு எவ்வளவு சிறப்புண்டு. இந்தப்புண்ணிய ஸ்தலத்தில் இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன் அதாவது கி.பி 15 நூற்றாண்டில் பிரபுடதேவமாராஜா் ஆண்டுவந்த காலத்தில் அருணகிரிநாதர் வாழ்ந்துள்ளார். 1

முருகப்பெருமானது பொருள் என் புகழை போற்றிப் பரவுதலையே நோக்காகக் கொண்ட (அருணகிரிநாதரின் தாய் தந்தை விபரம் சரியாகத் தெரியவில்லை) மஹான் ஒருவர் இருந்தார். அவருக்கு கற்புக்கு அருந்ததி போன்ற மனைவி வாய்ந்தார். இவர் பின்தூங்கி முன்னெழும் பேதையாவார். தன்னைக்காத்து தன்னைக்கொண்டவளை தெய்வமாகப் போற்றி பெருமை நிறைந்த புகழையும் காத்து சோர்வில்லாத புண்ணியவதியாக விளங்கினார்.

---

1. அருணகிரிநாதர் பிறந்த ஊர் "முள்ளன்றம்" இது திருவண்ணாமலையில் இருந்து 40 மைல் தொலைவில் உள்ளது.
முருகதரிசனம் பக்கம் 91
..........................
கி.பி 1450ல் பிரபுடதேவராஜர் அரசாண்டார்.
"அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் திருவண்ணாமலையில் கோயில் கொண்டருளி யிருக்கும் முருகப்பெருமானை அனுதினமும் தவறாது வழிபாடு இயற்றிவருவார். இறைவன் கருணையினால் இவர்களுக்கு ஓர் பெண்குழந்தை பிறந்தது. ஆண்குழந்தை இல்லையே என்ற குறை இவர்களை வாட்டியது. வழக்கம் போல மனைவியார் திருக்கோயிலை வலம்வரும் போது வானிலிருந்து ஒரு ஜோதி கீழ் இறங்கி அவருடைய உடலில் கலந்தது. இதனைப் பார்த்து மிகமகிழ்ச்சி அடைந்தார். அன்றே அவர் கற்பதியானார். அவரின் உடல் ஒளிமயமானது அவரின் முகத்தில் தெய்வீக ஒளி (தேஜஸ்) தோன்றியது. குழந்தை வெகுநிதானமாக வளர்ந்து பத்துத் திங்கள் கழிந்ததும் சுபயோக, சுபமுகூர்த்த வேளையில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. குழந்தை கம்பீரமான பொன்நிறமான தேகத்தையுடையதாகவும் வாயால் வர்ணிக்க இயலாத அழகுவாய்ந்ததாகவும் இருந்தது. இப்படியாக குழந்தை நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக சீரும் சிறப்புமாக யாது ஒரு குறைவும் இல்லாமல் வளர்ந்தது. இப்படியாக அருணகிரிநாதர் பிறப்பை அநேகமான நூல்கள் கூறுகின்றன. ஆனால் "அருணகிரிநாத அடிகள் புராணம்" என்னும் நூல் சற்று வித்தியாசமாகக் கூறுகின்றது.

அருணகிரிநாதர் புராண ஆசிரியர் திருநெல்வேலியில் 28.11.1839 ல் சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். வண்ணச் சரபம் தண்டபாணியடிகள் இவர் இளமையிலேயே ஆறெழு த்தருமறை உருவேற்றல், வேல்வழிபாடு செய்தல் போன்ற தெய்வீகத்தில் திகழ்ந்திருந்தார். இதனால் செந்தமிழ்க் கவிகள் பாடுந்திறன் வாய்க்கப்பெற்றார். இவருக்கு முருகதாச சுவா மிகள், தண்டபாணிசுவாமிகள், திருப்புகழ்ச்சுவாமிகள் என்னும் திருப்பெயர்களும் உண்டு. இவர் அருணகிரியாரைப் போல

"கந்தர் அநுபூதி" அருணகிரிநாதர் திவ்விய சரிதம் பக் 3

புத்தகம் எழுதத்தொடங்கி இதுவரை எழுதிய பிற்பாடு தொடர்வதற்கு அவகாசம் இல்லாமல் நீண்ட இடைவேளை ஏற்பட்டது. திடீர் என்று ஒரு நாள் அருணகிரிநாத புராணம் கிடைக்கப்பெற்றேன் முருகனின் விருப்பம் அருணகிரிநாத புராணம் கூறும் வண்ணம் பிறப்பை எழுதவேண்டும் என்பதே அதனால் அதன்படி பின் தொடர்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தமமைத்து ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடியவர் இவர் பாட்டில் வடமொழிக்கலப்பு பெரும்பான்மையும் இன்றி இருக்கின்றது. வடமொழிக்கலப்பின்றி சந்தமமையாது என்பவர் களின் கூற்றை மறுப்பதற்கு இவர் பாடல் தக்க ஆதாரமாக உள்ளது. இருந்த போதும் இவர் பாட்டுக்கும் உள்ள வேற்றுமையை நோக்கின் அஜகஜாந்திரமாகும் ஆதலின் அருணகிரியாரைப் போல பல சந்தங்களை அமைத்துப் பாடிய புலவர் ஒருவருமிலர் என்பது துணிவு.

சரபம் தண்டபாணியடிகள் சருவ சாதாரணி என்ற எழுத்தாணி கொண்டு நூறாயிரம் பாடல்களை இயற்றியதுடன் அவற்றைத் தானே ஓலைச்சுவடியிலும் எழுதியுள்ளார். சமய வேறுபாடு இன்றி ஆறு சமயக்கடவுள் மீதும் அளவற்ற பனுவல் களை இயற்றியுள்ளார். பொது நூல்களாக புலவர் புராணம், தமிழலங்காரம், ஆறுவகை இலக்கணம் போன்றவை களைத் தந்துள்ளார். இறைவனுடன் ஊடல்காரணமாக சிலநூல்களை அனலில் புனலிட்டுச் சிதைத்தார். மிகுதியாக தற்போது ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள் உண்டு.இவர் வடலூர் இராமலிங்க வள்ளலாருடன் பலமுறை கலந்து பேசி மகிழ்ந்த பண்பினர் "அருணகிரிநாதருடைய அம்சமாகத் தோன்றியுள்ளாய்" எனப் பன்முறை முருகப் பெருமான் அருளக்கேட்டவர். சிவப்பதிகளின் சிறந்த திருவா மாத்தூரில் பத்து ஆண்டு காலம் தவம் இயற்றியவர். அருள்மிகு அபிராமேசுரப் பெரமான் மீது அளவற்ற நூல்களும் தலபுராணமும் அருளி 05.07.1898 ல் ஞான சமாதி கொண்டார். இவரால் நிறுவப் பெற்ற கௌமார மடாலயமும் இவரது ஞானசமாதிக் கோயிலும், ஏட்டுச்சுவடிகளும், நூல்களும் இப்பெருமகனார் மரபினரால் பாதுகாக்கப்பெற்று வருகின்றன.

வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் ஆறாவது அகவை யிலேயே முருகக்கடவுளின் ஆறெழுத்து மந்திர உபதேசம் பெற்று, வேல் வழிபாடு செய்து, எட்டரையாண்டிலேயே புதுக் கவி பாடியருளினார். எதுவும் தம்முறையின்றி அவனருள் தூண்ட தாம் கருவியாய் இருந்து ஓலை ஏட்டில் எழுதுவார். அறியாததொன்றைக் கற்பனையாகக் கூறத்துணியார். இவர் தம் பாடல்களில் தாமே பாடியதாக அன்றி முருகப்பெருமான் உள்நின்று கூறியதாகக் கூறியுள்ளார். இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்பாட லேயென யான்பாடும் பாடல்கள் யாவையும் சேய் தன்பாட லேயெனச் சாற்றுகின் றாரெனுந்தத் தன்மை கொண்டோ" என்பர்.

புலவர் புராணம் பாடத் தொடங்கிய பொதுப்பாயிரம் பாடினார். அடுத்து என்ன பாடுவது என்று வரையறை செய்யா மல் திருவருள் தூண்டுவது கொண்டே பாடலானார். இச் செயலை

" பொதுப்பா யிரத்தைப் பேசியமட் டடக்கி வரு
சிறப்புப்பா யிரமென் றுன்னுகின்றேன்
கவிதை வந்தபின் பார்த்துவப் பதென்றன்
வளக்கம் உலகீரே"

என்று கூறுகின்றார். மேலும் " என்மனதில் ஒன்றென்னை என்கை மற்றொரு வண்ணம் எழுதிடும்"

என்று விளம்புவதால் தம்முரிமையில்லாமையை அறிகி றோம். இப்படியே இவர் எல்லா நூல்களையும் பாடியுள்ளார். இந்நூலைப் பாடும் பொழுது உலகோர் கூறும் வரலாற்று க்கு மாறுபட்ட கருத்தினை அறிந்தேயிருந்தார். முறையாகப் பாட வேண்டிய ஆசிரியர் அருணகிரிநாதருக்கான துதிப்பாடல் பாயிரத்தில்

உன் சரிதந் தனைப்பலவா றுலகத்தார்
பகர்வது கேட் டுளம் பொறாமல்
முன்சரிதம் தனைக் கூட்டிச் சொலப்புகுந்தேன்
ஆலையாவும் முறையிற் றந்தாள்
எனவேண்டுகின்றனர்.

யானிதிற் பகர்ந்த வாற்றுக்
கிசைந்திடா விதமும் சில்லோர்
நானிலத் துரைப்ப துண்டு
நலந்திகழ் அருணை நாதன்
காணிடக் குறத்தி கோன்றன்
கழல்பணிந் துய்ந்த வாற்றை
வாளின் மென் மலர் கொண் டுற்ற
வண்மையை மறுத்தி டாரே

என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலைப் பார்த்தவர்கள் புகழ்ந்தாலும் அன்றி இகழ்ந்தாலும் எனக்கு இழிவோ மகிழ்வோ இல்லை. என்னை இந்த விதம் உள்ளிருந்து இயக்குபவன் ஒருவன் உளன் அவனுக்கே அவ்விரண்டும் உரியன என்கின்றார் பாயிரக் கவியில்

"எனைநீ அன்பாற் கூறுகெனச் சொன்ன
படிநின் அருணகிரி சரிநம் குலவச் செய்"

என்று முருகப்பெருமானையும்

சாமியாம் தந்தை மாற்றம் தவறிடா துரைக்க ஒற்ற
தமிழிற் பிழைவ ராமல் அருள்வதுன் கடன் கண் டாயே

என்று கலைமகளையும் வேண்டுவதாய் அறியலாம்.

இத்தனை சிறப்புகளையும் உள்ளடக்கியது தான் அருணகிரி நாதர் புராணம். எனவே இந் நூல் கருத்தை புறந்தே ஒதுக்கித்தள்ளவும் முடியாது. இந்த வரலாற்று நூலை முருகப் பெருமான் மொழிப்படி பாடிமுடித்த போது முருகப்பெருமான் இவர்முன் தோன்றி சரியென்று ஒப்பியதாக ஒரு கவி இறுதியிற் பாடியுள்ளார். **எனவே நாமும் ஒப்பவேண்டும் என்பது கருத்தாகின்றது.**

பத்தியினால் இப்படி நான் பாடுமிந்தக் காவியத்தைச்
சத்தியமாய்ச் செய்வேன் சரியென்றான்ட புத்தியுள்ளீர்
ஐயமுறவேண்டாம் அருணகிரிநாதன் பால்
மெய்யடிமை யாகிமகிழ் வீர்.

எனவே மற்றபடி நூல் அருணகிரிநாதர் வரலாற்றை எப்படிக் கூறுகின்றது என்பதைப் பார்க்கலாம்.

## (02) முற்பிறப்பு

உயிர்கட்கு பிறப்பு நிகழ்வது வினை காரணம். அது நல்வினை, தீவினை என இருவகைப்படும். அவ்வினைக்கு ஏற்ப நல்லதும், தீயதும் என உடல் அமையும். அருணகிரிநாதரது முன்னைய பிறவிகள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திய மாமுனிவர் வழியில் செல்லும் பொழுது ஓர் அழகிய நாய்க் குட்டியைக் காண்கிறார். அதன் முற்பிறப்பின் தவம் போலும்.

கண்டு மாமுனி கருதுமுன் கடுகென அணுகிப்
பண்டு செய்தவப் பயன்கொடு பணிந்துவா லசைத்து
கொண்டு மோந்தருள் பொழிமுகம் நோக்கியே கூவித்
தொண்டு நாடிய சீடரிற் றொடர்ந்தது மன்னே.

அகத்திய முனிவரைக் கண்டு வாலை அசைத்து அவருடைய காலை வணங்கி முகர்ந்து சீடர்கள் போல அவரைப் பின்தொடர்ந்தது. அகத்தியர் மிகச்சிறந்த முனிவர் முன்பொரு காலத்தில் விந்திய மலை வான்வரை உயர்ந்து இவரை செல்லவிடாமல் தடுத்தது. அதனை பூமி மட்டத்திற்கு அழுத்தியவர். மிகுந்த தவவலிமை மிக்கவர். முருகப்பெருமான் அருள் பெற்றவர். அப்படியான சிறப்புடைய முனிவர் சிறு நாய்க்குட்டியின் பிரிவு கண்டு தூக்கி அணைத்தார். அதனை பொதிகை மலைக்கு எடுத்துச் சென்றார். அங்கிருந்த துறவிகள் யாவரும், அகத்தியர் எடுத்துவந்த சிறப்பு, குட்டியின் புண்ணியம் இவற்றைக் கருதி உபசரித்து வளர்த்தனர்.

இவ்வுலகத்திற்கு, இதுபோல உள்ள வேறு ஓர் அண்டத்தில் இருந்து ஒரு சித்தன் பொதிகைக்கு வந்தான். தான் பெற்ற சித்தியே பெரிதென்ற ஆணவமுடையவன். உண்மை அறிவில் லாமல் வான்வழியே வந்து சேர்ந்தான். இதனை அறிந்த முனிவர், நாய் பக்கமாக கடைக்கண் பார்வை புரிந்து வெண்ணீறு இட்டார். அந்த நாய் அரிய தமிழ் பாடல் பாடியது. விருத்திராசுரன் கடலுள் மறைந்த பொழுது அவனை வெளிப் படுத்த வேண்டி அகத்தியர் கடல் நீரை குறுக்கி உண்டார் என்பது வரலாறு. அப்படியான சிறப்புடையவர் அல்லவா. இதனைப் பார்த்ததும் சித்தன் வாயடைத்து நின்றார். நோய் பல உண்டு அவை எல்லாம் உடலைப் பற்றியன அவற்றிற்கெல்லாம் தீர்ப்பதற்கு மருத்துவ நூலில் வழியுண்டு. ஆனால் ஆணவம் என்னும் நோய் உயிரைப் பற்றியது. ஆணவம் தீர்வதற்கு வழியில்லையோ எனில், ஆறுமுகப் பெருமானான, குருநாதன் திருவடி பேணும் தொண்டர்களுக்கல்லாது, மற்றவர்க்கு மாற்றலரிது. எத்தகைய மேலான அனுபவம் பெற்றிருந்தாலும், நான் பெரியவன் என்னும் இறுமாப்பு அடைவது அறியாமை. பெரியோர் முன் அடக்க முடனே நடப்பது அறிவாகும். என்கின்ற பாடத்தை சித்தனும், யாமும் கற்றுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக நாய் அகத்திய முனிவருடன் சில நாட்கள் கழித்தது. தன்னுடைய பிள்ளை மாதிரி வளர்த்த நாயை நற்பேறு பெறச் செய்ய திருவுளம் கொண்டார். வெள்ளை நாயை அழைத்து உன் விருப்பம் என்ன என்று வினாவினார். நாய் விரும்பியது ஐம்புலன் நுகர்வுக்கான ஆசை. இந்திரப் பதவி கேட்டது. முன்பொரு காலத்தில் நகுடன் என்ற அரசன் நூறு அசுவமேத யாகம் செய்து இந்திரப் பதவியை அடைந்தான். அகத்தியர் முதலான ஏழு முனிவர்கள் நகுட இந்திரனை பல்லக்கில் சுமந்து சென்று விட்ட பின்னர் தான் இந்திரப்பதவி கிடைக்கும். அப்படி பல்லக்கில் செல்லும் பொழுது இந்திராணி மேலே உள்ள ஆசையினால் "விரைந்து செல்க" என்ற கருத்தையுடைய "சர்ப்ப" என்றான். உடனே அகத்தியர் "சர்ப்ப" என்று சொல்லி சிவிகையை விட்டார். உடனே பாம்பாகினான். இதில் இருந்து நாம் வாழ்க்கைக்கு கற்றுக்கொள்வது என்னவெனில் பெரியோரை மதிக்கவேண்டும். காமவயப்படக்கூடாது இதனைக் கம்பர்

"வாம மேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லையே கடும் கேடு என்னும்
நாமமும் இல்லை நரகமும் இல்லையே"

என்று அழகாகக் கூறியுள்ளார். இதனை வாழ்க்கையில் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். இல்லை எனில் "எயிட்ஸ்" வருத்தத்திலிருந்து தப்பிக்க முடியாது. தற்காலத்தில் பெரிய தலைவர்களே அரச மந்திரிப் பதவிகளை இழப்பதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். காமவயப்பட்டவர்கள் அது ஏழையாக இருந்தால் என்ன? அரச கட்டில்களை அலங்கரிப்பவர்களாக இருந்தால் என்ன? அதனால் ஏற்படும் தீங்கில் இருந்து தப்பிக்க மடியாது.

இந்திரப்பதவி புண்ணியம் உள்ளவரை பதவி. அது தீரும் பொழுது மற்றொருவன் அதற்குரியவனாவான் இதுவே அரசியற் பண்பு. புதிய இந்திரன் பதவிக்கு வந்தபின் முன்பிருந்தவனைச் சிறைப்படுத்தினார். முனிவரின் அனுக்கிரகத்தால் நாயாக இருந்தவர் இந்திரப்பதவியை ஏற்றார். தனது பதவிக்காலம் முடிய ஏற்கனவே பதவி இழந்த இந்திரருடன் மேரு மலைக் குகையில் அடைபட்டு இருந்தார்கள். எல்லாமாக ஐந்து இந்திரர்கள் சேர்ந்தவுடன் பாண்டவர்களாக அவதரித்தார்கள். அதில் காண்டீபனே நாயாக இருந்த இந்திரன் ஆகும். இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்தி இந்திரனைத் தென்றல் வரைமுனி அருளால்வந்தோன் அஞ்திறத் தடற் காண்டீபன் ஆகினன்." என்று கூறுகிறார். ஆண்மை அழகனாக வாழ்ந்த அருச்சுனன் மறுபிறவியில் கண்ணப்பனாக பிறந்தார். அப்பிறப்பிற் கண்ணைப் பறித்து சிவனுக்கு கனிந்து கைலையிற் சிவகணத்தோடு இருந்தான். சிவனைத் தவிர வேறு இறைவனை வணங்க மறுத்தார். இதனை,

வெண்ணகை மடவார் தாமே
விரும்பிடும் வியன்தோட் பார்த்தன்
திண்ணனென் றுருவம் கொண்டு
சிறந்துயர் திருக்கா ளத்தி
அண்ணலுக் கன்ப னாகி
அடிபணிந் தாறு நாளிற்
கண்ணதப் பறித்து வெள்ளிக்
கயிலைமா மலையிற் சேர்ந்தான்.

பின்னர் கிரன் என்ற பெயரில் புலவராகப் பிறந்தார். இவர் மாதர் கூந்தலுக்கு இயல்பில் மணம் இல்லை என்று சிவபெருமான் புலவராக தோன்றிய பொழுது எதிர்வாதம் செய்தார். நக்கீரர் அகத்தியரிடம்இலக்கணம் கற்றார். கற்கிமுகி என்ற பேயாற் சிறைபிடிக்கப்பட்டு துயருற்றார். பின்னர் திருமுருகாற்றுப் படை பாடினார். இப்படியாக சிந்தனை செய்து பல பாடல்கள் பாடியுள்ளார். மற்றவர்கள் பின்பற்றக் கூடிய நல்வாழ்வு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். பின்னர்

முதிர் தமிழ்க் கவிதைப் பொய்யா
மொழி யென வந்து தோன்றி
அதிர் தொனி கடகச் செங்கை
அணங்கெனோர் அரிவை தன்னை
விதிமுறை மணந்து ரோமம்
வெளிறு மட்டின்பத் தோடு
மதியினைச் சுடுவதாய்
வறுமையும் துய்த்தான் மன்னே.

பொய்யா மொழி என்ற பெயரில் வந்து பிறந்தார். இவர் திருவள்ளுவர் அல்ல சிறந்த மனைவியைப் பெற்று உரோமம் வெள்ளை வெளேர் ஆகுமட்டும் வாழ்ந்தார். ஆனால் அவர் சிலகாலம் வறுமையிலும் வாழ்ந்தார்.இருந்த பொழுதும் சிவனைத்தவிர வேறு இறைவனை வணங்க மறுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகைத் துயருற் றாலும்
ஈசனை அன்றி மற்றோர்
தெய்வமும் துதியென் என்றும்
திடத்தினிற் சிறந்தான் செவ்வேள்
கைலயின் வேலும் தோன்றக்
கனவினிற் பலகால் வந்து
செவ்வனப் புறுபாட் டென்மேற்
செப்பென இரக்கம் கண்டாள்.

முருகப் பெருமான் கனவினில் பலதரம் சென்று தன்புகழ் பாடும்படி கேட்டார். நக்கீரர் பூதத்தினால் அடைக்கப் பெற்று ஆற்றுப் படை பாடியது எனது செயல்.

" பாழி தோய் மனத்துக் கீரன் பட்ட பாடறிதி "
என்று கூறி உள்ளார். பின்னர் இறைவனை அன்பினால் வேண்டுதல் செய்தார்.

பின்னர் ஒருநாள் வாளனன் என்பவரை புகழ்ந்து பாடிப் பரிசில்கள் பெற்றார். வரும்வழியில் தன்னிடம் இரப்பவர்க்கு யாவற்றையும் தானமாகக் கொடுத்தார். அன்று உண்பதற்கு கம்பு என்கின்ற தானியத்தை பெற்றுக்கொண்டு பசித்து இருக்கும் மனைவியிடம் சென்றார். இடையில் பாலை நிலம் குறுக்கிட்டது. அங்கு ஓர் கொடிய வேடன் கையில் வாள், வேல் கொண்டு சிவந்த கண்ணும் முறுக்கேறிய உடம்புடன் வந்தான். யார் நீ ? என்றான்.

புலவர் அச்சமிகுதியால், வியர்ந்து விறுவிறுத்துப் போனார். நாக்கு வரண்டு விட்டது. இதனை
" அரியவாய் உலர மெய்வேர்த் தச்சமிக் குரைக்க லுற்று "
என்று புராணம் குறிப்பிட்டுள்ளது. புலவர் என்று கூறினார். வேடன் புன்னகை புரிந்தான் சரி ஓர் சிறந்த பாடல் பாடும் வண்ணம் பணித்தான் உடனே புலவர்

பொன் போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானகத்தே
என்பேதை செல்லற் கிசைந்தாளே — மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர் போம்
கானவேல் முட்டைக்கும் காடு.

என்று பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாலைவனத்தில் மழை பெய்யாமல் வெப்பமிகுதியினால், கள்ளியினுடைய பால் வற்றி வறண்டு தாமே தீப்பொறி பறக்க எரியும். இக்கொடிய பாலைவனத்தின் வழியாக எனது பருவ மகள் சென்றாள், காட்டுவேல முள் தைக்குமே என்றுள்ளது. உடனே வேடகுமாரன் மறுத்து உங்களுடைய பாட்டில் பொருட் குற்றம் உள்ளது என்று கூறினார்.

கள்ளியிற் பிடித்து வேவும்
  கனல்படு கானில் வேல
முள்ளிருந் திடுமென் றோதல்
  முறைப்பிழை யன்றோ? என்ன
வெள்ளிலை வேற்கை வேடன்
  விளம்பிநா னுறச் செய் தப்பால்
தெள்ளிமைப் புலவா நின்பேர்
  செப்பெனச் சிரித்துக் கேட்டான்

திடமான பால் தன்மையுள்ள கள்ளி, வற்றி வறண்டு காய்ந்து தீப்பிடித்தெரியும். அப்படியான பாலைவனத்தில், வேல முள் மரம் இருக்குமா? கள்ளிக்கு முன்பே காய்ந்து சாம்பராய் விடும். எனவே உங்களுடைய பாட்டில் பொருட்குற்றம் உள்ளது. என்று கூறி கேலி செய்தார். புலவரே உமது பெயர் என்ன என்று கேட்டார். "பொய்யாமொழி" நாணிக்கோணி நின்றார். உடனே வேடவேலன்

விழுந்ததுளி அம்பரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடவரும் மென் றேங்கிச் • செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தென் பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப் பகைஞர் போல்.

மேகங்கள் பாலைவனப் பக்கம் வருவதே இல்லை. மழைத்துளிகள் கீழே வரமுன்பே ஆவியாகிவிடும். ஓரளவு பெய்தாலும் கீழே உள்ள உஷ்ணம் மேலே வந்து தாக்கும் என்று பயந்து மேகங்கள் விலகதியே செல்லும். அப்படியான வெப்பம் கூடிய பாலைவனத்தில் எனது மகள் சென்றாள். புலவரின் எதிரிகள்செல்ல உள்ளது பாலை என்பது கருத்து.
இப்பாடலைக் கேட்டதும் புலவர் நடுங்கினார். ஓர் வேடன் இப்படிப் பாடுகின்றாரே என்று திகைத்து நின்றார். திடீர் என வேடனைக் காணவில்லை ஆறுமுகங்களுடனும் வள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வயானையுடனும் மயில் மீதினில் தேவர்கள் புடைசூழ காட்சி கொடுத்தார். கண்டதும் புலவர் வணங்கினார். கைசோர மெய்சோர கண்ணீர் சொரிய வீழ்ந்து வணங்கினார்.

ஐயா, இதுவரையும் உங்கள் பெருமைகளை கூறாமல் வீண் காலத்தை விரயமாக்கி விட்டேனே என்று வேண்டுதல் செய்தார். முருகன் மறைந்தருளினார். புலவர் வறுமையில் வாடியமையை மிக அழகாக " பூண் தவிந்து அழகே பூணப் பொற்கொடி "

ஆதாவது புலவருடைய மனைவிக்கு சாப்பாட்டிற்கே கஷ்டம் ஆபரணங்களுக்கு என்ன செய்ய முடியும். அதனை அழகாக இயல்பான அழகே அவளிடம் மிகுந்து இருந்தது என்று கூறுகிறார். இப்படியாக புலவர் வாழ்ந்து வரும் வேளையில், ஒருமுறை பாண்டிய மன்னனை புலவர் சந்திக்கச் சென்றார். பாண்டியன் முன்பு உள்ள புலவர்கள் மாதிரி தற்போது இல்லை என்று குறைவாகப் பேசினார்.

அஞ்சுறா தடுக்கக் கண்டவ்
    வரையளந் நாளில் உள்ள
விஞ்சுபா பலர்போல் இருந்தாள்
    விளங்குநர் உளரோ என்றான்
செஞ்சுவைக்கழகத் துள்ளார்
    திருவுருச் சிலைக ளெல்லாம்
கொஞ்சுசொற் கவிகேட் டொப்புக்
    கொடுதலை யசைக்கச் செய்தான்

தமிழ் புலவர்கள் எப்பொழுதும் இருக்கின்றார்கள். ஆனால் முன் உள்ளவர்கள் மாதிரி தற்பொழுது இல்லை. இந்த உண்மையை பாண்டியன் பார்க்கச் செய்யுங்கள் என்று, ஓர் பாடலை சங்கப் புலவர்களின் சிலைகளின் முன் வந்து நின்று பாடினார். அவை யாவும் தலை அசைத்து ஏற்றுக் கொண்டன. இதனாலும் அரசன் திருப்திப்படவில்லை. உடனே புலவர்கள் கஷ்டப்பட்டாலும் கெட்டுப்போக மாட்டார்கள் என்று கூறி

" பூவேந்தர் முன்பொற் பரப்பதில்லை எந்நாளும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையை – மாவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தனியில்
வீறனையே சற்றே மித "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலைப் புலவர் பாடினார். உடனே பொற்றாமரை வாவியுள் மூழ்கியிருந்த சங்கப் பலகை மேலெழுந்தது. அரசன் கண்டு பயந்தான். தான் வந்த சிவிகையில் புலவரை இருத்தி தானும் தன் பரிவாரங்களும் சூழ்ந்து வர மதுரை நகரை சுற்றி வந்தான். இதன் பின்னர் புலவரின் துன்பங்கள் நீங்கிவிட்டன. பலகாலம் சந்தோஷமாக புலவரும் மனைவியும் வாழ்ந்தார்கள். இறுதியில் வேலன் பாதங்களை அடைந்தார்.

## பிறவி ஞாபகம்

அறுவகைப் பிறவி சொற்றாம்
அவற்றின் முற் பிறவி யாதோ
குறுமுனி வளர்த்த நாயின்
குலவுசீர்ச் சரிதம் ஒன்றும்
இறுதியிற் பகரும் ஒன்றும்
இகத்தில்நன் கிலங்கா வாற்றால்
சிறுகலும் விரிதல் தானும்
தீர்தரச் செப்பினே மால்

சுருக்கிடில் விளங்கி டாது
துணிவொடு சொல்லு மட்டும்
பெருக்கிடில் இன்நூல் கூடும்
பெயரினுக் கிசைவு றாதாங்கு
இருக்கவு மிடையிற் காதை
ஈரிரண் டடக்கிச் சொற்றேம்
செருக்குறு புலவர் பல்லோர்
தெளிவுறச் செப்ப லாலே.

முற்பிறப்பு வரலாற்றை முழுவதும் இங்கு கூறுவது பெயருக்குப் பொருந்தாது. சுருக்கமாகக் கூறினால் மற்றவர்களுக்குப் புரியமாட்டாது. இரண்டுக்கும் பதிலாக நடுத்தரமாகக் கூறியுள்ளேன். நக்கீரர், கண்ணப்பநாயனார் வரலாறு சுலபமாக நீங்கள் அறியக்கூடிய வாய்ப்பு உண்டு எனவே முற்பிறப்பாகிய குறுமுனி வளர்த்த நாய், தேவேந்திரன், அருச்சுனன், கண்ணப்பநாயனார், நக்கீரர், பொய்யாமொழிப் புலவர் (திருவள்ளுவர் அல்ல) ஏழாவது பிறப்பு அருணகிரிநாதர் இவருடைய இறுதி (7) பிறப்பு இதையுடையதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதாவது மிகுந்த பக்தியுடன் பாடிய பாடல்கள் உலகில் எப்பொழுதும் பிரபல்யம் வாய்ந்தவை. உயிரோட்டம் உள்ளவை என்றும் அழியாதவை. சிரஞ்சீவியானவை.

தற்காலத்தில் விஞ்ஞானிகள் சூரியனுக்கும் அப்பால் சென்று விட்டார்கள். ஏன் இந்த மூடநம்பிக்கைக் கதைகள் என சிலர் நினைக்கலாம் ஆனால் இந்துமதம் கூறுபவை அத்தனையும் உண்மை இதனைக் கொழும்புத்துறையில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் "முழுவதும் உண்மை" என்று அடித்துச் சொல்லி உள்ளார்.

இதனை வலியுறுத்துவதற்கு " இன்று ஒரு தகவல் " தென்கச்சி கோ.சுவாமிநாதன் அவர்களின் நான்காவது பகுதியில் பக்கம் 45ல் பின்வருமாறு கூறுகின்றார்.

இங்கிலாந்தில் (JOAN GRANT) ஜோான் கிரான் 1907 ஏப்பிரல் 12ல் பிறந்தார். சின்ன வயதில் முந்திய பிறவி ஞாபகம் வந்துவிட்டது. ஏழு ஏழு ஜென்மம் என்பார்கள் அதாவது நாற்பத்தி ஒன்பது பிறவி. அதில் நாற்பது பிறவி ஞாபகம் வந்தவிட்டது. ஒன்றில் ஆண், ஒன்றில் பெண் இத்தாலியில் ஒரு பிறவி பெண், பிரான்சில் ஒரு பிறவி சூனியக்காரியாக, சிவப்பு இந்தியராக ஒரு பிறவி இப்படியாக ஆதார பூர்வமாக விபரித்துள்ளார். இனைப் பற்றி பன்னிரண்டு புத்தகங்கள் பதினாறு மொழியில் வெளிவந்துள்ளது. இவரின் பேட்டி B.B.C தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது. இதனைப் பார்க்கும் பொழுது **இந்துமதம் மறு பிறப்பை வலியுறுத்தி நிற்பதன் உண்மை பிரத்தியட்சமாகத் தெரிகின்றது.**

**வரலாற்றுத் தொடர் :-**

உலகத்தை உருவாக்கிய பிரமதேவனும் காத்தல் கடவுளாகிய திருமாலுக்கும் இடையில் யார் பெரியவர் என்கின்ற தர்க்கம் ஏற்பட்டது அது யுத்தமாக மாறியது. யுத்தத்தினால் உயிர்கள் துன்புற்றன. சிவபெருமான் மனமிரங்கி இருவருக்கும் நடுவில் ஜோதி உருவாகத் தோன்றினார். இதன் அடிமுடியைக் கண்டு சொல்லும் வண்ணம் கேட்டார். அவரே பெரியவர் என்றார். திருமால் பன்றி உரு எடுத்து அடியைத் தேடிக் கண்டுகொள்ளாமல் திரும்பினார். இதனால் அவரின் அகந்தை அழிந்தது. இறைவனிடம் **உண்மையைக் கூறி** மன்னிப்பு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமதேவர் அன்னப்பட்சியாக மேலே பறந்து களைத்து, முடியில் இருந்து விழுந்த தாளம் பூவை பொய்சாட்சி கூறும்படி அழைத்துவந்தார். இதனால் பூவுலகில் பிரமதேவனுக்கு கோயில் இல்லாமல் சாபம் கொடுத்தார். தாளம் பூவை பூசைக்கு பயன் படுத்தக் கூடாது என்று சாபம் கொடுத்தார். இதில் இருந்து பொய் சொன்ன வாய்க்குபோசனமும் கிடையாது என்பது பழமொழி. இதனை மேற்கூறிய சம்பவம் உறுதிப்படுத்துகின்றது. திருவண்ணாமலையில் சிவபெருமானே நெருப்பு மலையாய் விளங்கினாரென்றால் இவ்விடத்திற்கு எவ்வளவு சிறப்புண்டு, மலைகள் யாவும் முருகப்பெருமானுக்குரியன கயிலையை இறைவன் இருப்பதற்கும் மேருவை வில்லாகக் கொள்வதற்கும் முருகப்பெருமான் உதவி செய்தார். இதற்கு ஈடாக அருணாசலமாக இறைவன் இருந்தபொழுதும் முருகனுடைய திருவிளையாடலுக் குகந்ததாக தனது உச்சியைக் கொடுத்துள் ளது, குன்று தோறும் உறைபவன் முருகன் என்பதாம் உச்சியில் சோண நதி இருக்கின்றது இது மிக வரட்சி நேர்ந்த போதும் கூட நீர் வழங்குவதை விடாமல் மக்கட்குத் தரும். இவ்வளவு சிறப்புள்ள திருவண்ணாமலை சிவபிரானின் தோழராகிய குபேரன் திருவெண்காடராக அவதரித்தார். இவர் துறவொழுக்கம் உடையவரில் சிறந்தவர். சிவபெருமானைக் குறித்து கடும் தவம் செய்தவர் ஒருவன் பெண் மோகத்தால் இறந்தது கண்டு " எருவாய் " என்று தொடங்கும் பாடலை எழுதினார். உடனே அவர் உயிர் பெற்று எழுந்தார் இச்சிறப்புக்களை உடைய திருவெண்காடர் திருவண்ணா மலையை அடைந்தார். அங்கு கண்ணீர் சொரியும் படி துதித்தார். பெண்ணாசையின்றி சிபத்தியானமே மிகுந்து இருந்தது. திருவெண்காடர் மனம் மதன் கணை பயந்திடாது புகுந்தது என்பதால் சிவனால் எரிக்கப் பட்டவன். பரமனே திருவெண்காடர் உள்ளத்தில் நிறைந்துள்ளான். அப்படியான யோகியின் உள்ளத்தில் மதன் கணையால் அருணகிரிநாதரது அவதாரத்திற்கு காரணமாயிற்று. வெறும் காம நிகழ்ச்சியென்று மதனும் கணை ஏவான் அடிகளும் மயங்கார் சிவச் செயலல்ல சிவச் செயலென்று கொள்க.

காசிப முனிவர் பிரமன் புதல்வன் தவஞானி இவரே மாயையின் மூலம் மூன்று அசுரர்களைப் பிறக்கச் செய்யவும், தேவர்களைத் துன்பப்படச் செய்யவும் இறைவன் சம்மதித்தவர். வருங்காலத்தில் திருப்புகழ் என்ற துதிப்பாடல்களைப் பொழியும் மேகமாகிய அருணகிரிநாதர் தோன்ற, அடிகளை மையலுறச் செய்தது தவறல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலையில் பட்டினத்தடிகள் இறைவனை வணங்கி இருக்கின்ற பொழுது முத்தம்மா என்கின்ற தேவதாசி செல்கின்றார். காம வயப்பட்டவராக முத்தம்மாவை நெருங்கினார். மாது மகிழ்ந்தார். அ்.து இச்சையல்ல பழைய காலத்தில் ஒவ்வொரு கோயில்களிலும் தேவதாசிகள் பாரம்பரியமாக தொண்டு செய்வது வழக்கம் அவர்கள் சமூகத்திற்கு சேவை செய்வதே நோக்கம் கோயிலுக்கு தொண்டு செய்தலும், ஆடல் பாடல் மூலம் மக்களை மகிழ்வித்தலுமே தற்காலத்தில் இந்தமுறை ஒழிக்கப்பட்டுவிட்டது.

இதனால் நாட்டில் முன்பில்லாத அழிவுக்கு விபசாரம் கூடிவிட்டது. குடும்பப் பெண்கள் கற்பில்லாமற் போவதற்கு இது முக்கிய காரணமாகின்றது. அதாவது காம உணர்வு கூடியவர்கள் தங்கள் உணர்வைத் தீர்ப்பதற்கு தேவதாசிகளிடம் செல்வார்கள். இதனால் சம்பந்தப்பட்டவருக்கு அவருடைய பணம், பொருளுக்கு மட்டும் நட்டம் ஆனால் இப்பொழுது குடும்பப் பெண்களிடம் செல்வதனால் அவர் குடும்பம், மற்றக்குடும்பம், இரண்டுக்கும் கஷ்டநஷ்டம் இதனால் சமூகசீர்கேடு ஏற்படுகின்றது. குடும்பங்களுக்கிடையில் ஒற்றுமை யீனம், இதனால் நாட்டில் ஒற்றுமையீனம் ஏற்பட்டு நாடே குட்டிச்சுவர் ஆகின்ற சீர்கேடுகளைக் கண்கூடாகக் காணக்கூடிய தாக உள்ளது. உதாரணமாக பாலர்கள் பாலியல் துஷ் பிரயோகம் அன்றாடப் பத்திரிகைச் செய்திகள் சிறுமிகள் கற்பழிக்கப்பட்டு வைத்தியசாலையில் அநுமதி போன்றவையும், இளைஞர் ஒருவர் மூன்று பிள்ளைகளின் தாயுடன் தலை மறைவு, ஐந்து பிள்ளைகளின் தந்தை மருமகளுடன் தலைமறைவு என்பது போன்ற அசாதாரண நிகழ்வுகள் தற்பொ ழுது சகஜமாக நடைபெறுகின்றன.

அன்னமிட் டடியார் தம்மொடு பழகும்
அகத்தினிற் பிறந்தவா றதனால்
சின்ன-மென் முலையாள் சிரித்தமா முகமும்
சிந்தையுள் அன்புமெற் சிறக்க
என்னகா ரணமெம் அடிகளே எனக்கேட்
டிருகரம் குவித்தனள் இனைதீர்
உன்னது மயலாம் கடலிடைத் தளர்வேற்
கொருகைதந் தருளெனப் பிடித்தான்.

தனது வீட்டில் அடியார்களுக்கு அமுது படைப்பது வழக்கம் அதனால் அடிகளைக் கண்டு மகிழ்ந்தாள் என்ன சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைக்கேட்டு கைகூப்பி வணங்கினாள். இவர் கையைப் பற்றியதும், பயமும் வெட்கமும் அடைந்தாள் கணிகையே யாயினும் நடுவீதியில் கைபிடித்தால் நாணம் வருவது இயற்கை. நடனம் ஆடியபின் வியர்வை வருதல் போல, அச்சம் காரணமாக உடலில் மிக வியர்வை உண்டாகி உடையும் நனைந்தது. இதனால் கோயிலுக்கு செல்லாது வீட்டிற்க திரும்பிச் சென்றாள்.

அம்மகள் கரம்தொட் டவனுடற் பரிசம்
ஆகுமுன் சூக்குமம் புணர்ந்து
மும்மலத் தொன்றாய் முடிந்தமெய்ப் பொருளாய்
முளைக்கும் வித்தாயசுக் கிலநீர்
செம்மவா இருந்த மனத்தினைக் கழுவும்
திறத்தினில் வெளிப்படத் தனது
கைமல ரதனில் ஏந்தியாங் குதிர்ந்த
கவினர சிலையின்மேல் வைத்தாள்.

முத்தம்மாவின் கரம் தொட்டவுடனே தன் உள்ளத்தின் உணர்வைப் பிரதிபலிப்பதுபோல சுக்கிலநீர் சுரந்தது. அதனைக் கையில் ஏந்தினார், அதனை அங்குள்ள ஆலம் இலையை தொன்னைபோல ஆக்கி அதனில் இட்டார்.

வைத்தலும் அவளைத் தாய்கொடு வந்தாள்
மலரடி பணிந்தனள் எழுந்தும்
மூத்தலாள் நகையும் பதந்தொழப் புரிந்தாள்
முன்றிய வாறருள் புரியச்
சித்த டிரங்க வேண்டுமென் றிரந்தாள்
சிறந்தபே ரறிவினை மதித்துக்
கைத்தல மதனாற் சுட்டிஓர் வெண்பாக்
கழறினன் களங்கமில் கருத்தோன்.

முத்தம்மா வீதியில் நடந்தவற்றை தாயிடம் சென்று கூறினார் உடனே என்ன காரியம் செய்தாய். வா துறவியைச் சென்று பணி என்று கூட்டி வந்தாள். தாய் கூட்டி வந்து முன்பு போல அருள் புரிய வேண்டும் என்று பணிந்து வணங்கி நின்றாள் உடனே ஓர் வெண்பா பாடினார்.

தோடவிழும் பூங்கோதைத் தோகை! வினையிப்போது
தேடியவர் போய்விட்டார் தேறியிரு — நாடி நீ
என்னை நினைத்தால் இடுப்பில் உதைப்பேன் நான்
உன்னை நினைத்தால் உதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியவர் சென்றுவிட்டார். என்னைத் தேடி நீ வரக்கூடாது வந்தால் அடிப்பேன். நான் உன்னிடம் வந்தால் அடி என்னும் பொருள் படக்கூறினார்.

தோடவிழ் மலர்மெல் அளகமா மயிலே
தொடர்ந்துனை விரும்பினர் போனார்
நீடறிவ தனால் நினைத்துநீ என்னை
நினைத்திடில் இடுப்பினில் உதைப்பேன்
கூடநான் விரும்பில் உதையெனும் பொருள்உட்
கொண்டனள் குறிப்பினால் அதைக் கண்(டு)
ஆடகப் பணிதோய் மகள் உனக் கொடுத்தாள்
அது முதற் கருப்பமே யானாள்.

இந்த நிகழ்வில் கருத்து வேறுபாடு ஏற்படுவதுண்டு. இயற்கைக்கு மாறாகஅடிகள் விழுந்து சாப்பிட்ட பொழுது உணவுப் பாதையில் செல்லுமேயன்றி கருவாகாது. உலகியல்புக்கு மாறுபட்டதே அருளியற்கை. வியாசரது வீரியத்தைக் கிளி உண்டதனால் சுகப்பிரம முனிவர் பிறந்ததும், மீன் வயிற்றில் மச்சகந்தை பிறந்தது போன்று பழமை வரலாறுகளும் உலகியல்புகளுக்குமிக மாறுபட்ட செயலாகும். மனிதவிந்து மனித உருவானது வியப்பாயின் பறவையும், நீர் வாழ்வதுமான உடலில் மனித உருவேற்பட்டது, மிக வியப்பாகுமன்றோ இயல்புக்கு மாறாக நேர்ந்த அருளியலாக கொள்ள வேண்டும். பட்டினத்தார் காலத்திற்கும் அருணகிரியார் காலத்திற்கும் இடைவெளி நானூறு ஆண்டுகள் என்பர். திருவெண்காடர், பட்டினத்தார் என்ற பெயரில் ஒருவரே இருந்தார் என்று கொள்வதால் ஏற்பட்டது. திருவள்ளுவரில் இருவர், பட்டினத்தாரில் இருவர், ஔவையார் மூவர், பிரபுடதேவனென்ற அரசன் பெயர் முன்னும் பின்னும் அரச குடும்பத்தில் வரலாம்.

கரு உருவாகும் பொழுது ஆணின் எண்ணம் எப்படி இருக்குமோ அப்படியே பிள்ளை பிறக்குமென்பர். "தந்தை எவ்வழி மைந்தர் அவ்வழி " என்ற பழமொழிக்கிணங்க, திருவெண்காடர் மகளிர் இச்சையால் வெளிப்பட்ட விந்து ஆதலின் அருணகிரி நாதரும் மாதர் இச்சையில் ஈடுபட்டார். அடிகளின் தூய்மையான தவப் பயனின் காரணத்தால், "பண்ணிய பாவம் செய்யும் பயிரில் தெரியும்" என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனின் அனுக்கிரகத்தால் தமிழ் பாடல் இயற்றும் நிலையும் துறவு நெறியும் அருணகிரிநாதர் பெற்றார் என்பதில் பொருத்தமும் உண்டு அவதாரம் என்றால் மேல் நிலையில் இருந்து இறங்கி வருதல் ஆகும். முறைப்படி உரிய முற்பிறவியில் உள்ளவர் இறங்கிவருதல் அதுமட்டும் அல்லாமல் இவரின் முற்பிறப்பில் இவர் படிப்படியாக இறைவனின் அருள் பெற்றதையும் இறைவன் புகழ் பாடியமையும் உண்டு. எனவே இறுதியில் மிகப்பெரிய அருளாளராக இருந்து மிக அரிய திருப்புகழ் பாடுவதற்கு இவரின் பிறப்பும் ஓர் காரணமாகும். முறைப்படி **உயரிய முற்பிறவியிலிருந்தவர்** என்பது முற்பிறப்பு வரலாற்றால் அறியலாம்.

ஆறாம் திங்கள் மூன்றதாம் கிழமை
அரியநாள் பன்னிரண் டாகும்
ஊறணு கரிதாம் இலக்கினம் ஒன்பா
னாமவன் உதித்தபோ தென்கை
கோறல்உண் டுவப்பார் குலமறக் களைந்து
குலவும்வேற் குருபரன் றனக்கும்
நீறணி தகையால் தவம்முதிர்ந் தவர்போல்
நிலவும்-என் றணக்கும்நிச் சயமே.

ஆறாவது மாதம் (தமிழ் கணக்கு சித்திரை முதல்) புரட்டாதி மூன்றாம் கிழமை, செவ்வாய் நாளில் உத்தர நட்சத்திரம் இலக்கினம் ஒன்பது தனுசு என்ற தினம் அருணகிரிநாதருடைய அவதார தினமாகும். இது நான் கற்பனையாகக் கூறவில்லை முருகன் கூறியது. ஆனால் தன்னிடம் போதிய அருள் ஆற்றல் இல்லாத காரணத்தால் எல்லோரும் ஒப்பும்படி விளக்க முடியவில்லை என்று வெளிப்படுத்தினார்.

முருகப்பெருமானின் அருளினால் மேற்குறித்த தினத்தில் ஓர் ஆண் மகவை பெற்று எடுத்தார். பொன்னிறமாக குழந்தை இருந்தது. வர்ணிக்க முடியாத அழகுடன் கம்பீரமான தோற்றத் துடன் காட்சியளித்தது. குழந்தைக்கு அருணகிரிநாதர் எனப் பெயரிட்டார்கள். ஐந்து வருடங்கள் பூர்த்தியானதும் தாயார் இவரை ஓர் ஆசிரியரிடம் (குரு) கல்வி கற்க அனுப்பினார்.

இவர் இளமையிலேயே தேவாரம், திருமந்திரம் போன்ற அரிய பாடல்களைப் பாடிவருவார். இனிமையான இவரின் குரல்கேட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் மகிழ்வார்கள். இவருக்கு ஏழு ஆண்டுகள் பூர்த்தியானதும் இவரது அன்னையார் காலமாகிவிட்டார். தாயின் பிரிவைத் தாங்கமாட்டாது அம்மா! எங்கே போய்விட்டாய் எங்களைத் தன்னந்தனியாகத் தவிக்கவிட்டுப் போய்விட்டாயே! நான் உன்னை மீண்டும் காண முடியுமா பேசமுடியுமா ? அம்மா நீ இல்லாமல் நான் எப்படி இருப்பேன் என்று பலவாறு புலம்பித் தாயின்மேல் விழுந்து புரண்டு அழுதார்.

அலறும் அருணகிரியின் துக்கத்திற்கு எல்லையே இல்லை. தமக்கையார் எவ்வளவோ சமாதானம் சொன்னார். இருந்த பொழுதும் தாயின் பிரிவு அவரை வாட்டியது. தமக்கையார் தம்பி அருணகிரி அனாதையாக இருக்கும் எங்களை முருகப் பெருமான் கைவிடமாட்டார் என்று தேற்றினார். தாயில்லாத குறை தெரியாமல் தம்பியாரைக் கண்ணும் கருத்துமாக காத்து வந்தார்.

## இளமைப் பொழுதில்

சில ஆண்டுகள் சென்றன. அருணகிரிநாதர் இளைஞர் ஆனார். அகன்ற நெற்றியும், நீண்ட புருவங்களும், தாமரை இதழ் போன்ற பெரிய கண்களும் அழகான மூக்கும், கொவைப்பழம் போன்ற உதடுகளும், முத்துப்போன்ற பற்களும் உடைய அழகே வடிவானவர் ஆனார்.

"யாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் " பிராரப்த கர்மாவை அனுபவித்தே தீரவேண்டும், என்று இருப்பதால் முருகப்பெரமான் அருணகிரிநாதரை அவருடைய பிராரப்தத்தை அனுபவிக்குமாறு செய்தார். ஒருவன் கெடுவதற்கு சூழ்நிலை காரணமானாற் போல, தமக்கையின் பாசமும் அவர் உதவும் பொருளும் துணையாய் இருந்தன.

முருகப்பெருமான் திருவருள் அருணகிரிநாதரில் விழத்தொடங்கியது. முதலில் கோயிலில் நடனம் ஆடுகின்ற தாசியைக் கண்டார். அவளது பேரழகில் மயங்கினார். அவளிடத்தில் காதல் வளர்ந்தது. இதனால் அவர் பலநாள் துயில் கொள்ளவில்லை. காமவேதனையில் மீள்கினார். சில நாட்கள் செல்ல அவளைச் சந்தித்து தன் மனோநிலையைத் தெரிவித்தார். அவளும் இவரடைய அழகில் மயங்கி மேலும் மேலும் பெண்ணாசையை உண்டுபண்ணினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பயனாக பல்வேறு தாசிகளின் அழகில் மயங்கி தன் புத்தியை இழந்தார். சரியான வேளைக்கு வீடு திரும்புவதில்லை. விரும்பிய பொழுது வருவதும் போவதுமாக இருந்தார். வீட்டிலுள்ள பொருட்களை எல்லாம் வேசியர்க்கே கொடுத்து வந்தார். தன் சகோதரியிடம் பேசக்கூட நேரம் இல்லாமல் காம சுகத்தில் திளைத்திருந்தார். ஆனால் இவருடைய நடத்தையில் மாறுதலைக் கண்ட தமக்கையார் மனம் நொந்து வாடினார்.

ஒரு நாள் அப்பா அருணகிரி வேசியரிடத்தில் உள்ள பொருட்களைக் கொடுத்து ஒளிக்கின்றாய். அன்னையார் என்னிடத்து உன்னை ஒப்படைத்து சென்றுள்ளார் உன்னை நல்ல வழியில் கொண்டு போக வேண்டியது என்கடமை.

> "பிறந்திடத்தை தேடுதே பேதை மட நெஞ்சம்
> கறந்த இடத்தை நாடுதே கண்"

என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். நீ பரத்தையர் மோகத்தில் உன் புத்தியை இழந்து வந்த வழியை நினைத்து அலைகின்றாய் இப்படிச் செய்வது தகுமா? என்று பலவாறு புத்திமதி கூறினார்.

"கெடுகுடி சொற்கேளாது" என்பர். ஆனால் இவை யாவற்றையும் செவிமடுத்தார் இல்லை. காம சுகத்தைத் தரும் தாசிகளையே அவர் தெய்வமாகக் கருதினார். அவர்களின் அன்பு போன்ற பார்வை மையில் மயங்கினார். குடம் போன்ற தனங்களின் ஸ்பரிசத்தாலுண்டாகும் சுகம் அவரை ஆட்டி வைத்தன. அவர் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் பரத்தையர்க்கே அர்ப்பணம் செய்தார். தமக்கையார் அருணகிரி திருந்த வேண்டும் என்று அல்லும் பகலும் முருகப் பெருமானை வணங்கிவந்தார். தமக்கையார் என்ன கூறியும் கேட்டார் இல்லை. " அவன் இச்சை இன்றி அணுவும் அசையாது" எங்களுடைய செயலால் ஒன்றும் இல்லை. என்கின்ற பாடத்தை கற்றுத் தருகின்றார்.

பெரிய செல்வந்தராக இருந்தாலும் நாள் செல்ல செல்ல அவர் சகலதையும் இழந்தார் எனினும் அவரின் எண்ணம் வேசியரிடத் தேயே நாடிச் சென்றது. பொருள் இல்லாமல் வெறுங்கையுடன் வரக்கூடாதென்று தாசிகள் கூறிவிட்டார்கள் மாயையில் சிக்குண்ட அருணகிரி தமக்கையின் நகையை திருடி எடுத்துச் செல்ல முயன்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையடுத்து தமக்கையார் இவரை அழைத்து என்னைக் கேட்டிருந்தால் தந்திருப்பேனே என்று நகைப் பெட்டியை தூக்கிக் கொடுத்தார். மறுதினமே அவை முழுவதையும் தாசிகளிடத்தில் இழந்தார் மீண்டும் பொருள் கொண்டு வருமாறு வற்புறுத்தினார்கள். தமக்கை அணிந்துள்ள நகைகளைப் பெற்று வந்து வேசியார்க்கு அடிமையானார். இப்படியாக அருணகிரிநாதர் பொருளை மட்டும் இழக்கவில்லை, உடல் சுகத்தையும் இழந்தார். அதாவது ஒவ்வொரு முறையும் இழக்கப்படும் விந்தில் உடலில் உள்ள இரத்தத்தை இழந்தார். இரத்தம் சுண்டக் காச்சியே சுக்கில நீர் ஆகின்றது என்பர் இதனால் இரத்தம் நீர்த்து உடல் முழுவதும் வெளிறியது. உடல் பலம் குன்றியது ஆனாலும் அவரின் தாசி மோகம் குறையவில்லை.

## தடுத்தாட் கொள்ளல்

"எதற்கும் காலம் வரவேண்டும்" என்பார்கள் அருணகிரிநாதரைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டிய நேரம் நெருங்கியது. நாதர் தீராத நோய்க்கு ஆட்பட்டார். "விந்து விட்ட வர் நொந்து கெட்டார்" என்பார்கள் பெரியோர்கள். இன்றைய காலகட்டத்தைப் பார்க்கின்ற பொழுது பெண் பித்தில் மயங்கியோர் மாற்முடியாத பயங்கர எயிற்ஸ் வருத்தத்திற்கு ஆழாவதைப் பார்க்கலாம். போகத்தின் பொழுது ஒவ்வொரு முறையும் அதிக அழவான இரத்தம் வீணாகின்றது. இறுதியில் இரத்தம் செத்து விடும் என்பார்கள். உடல் பெலயீனப்பட்டு விடும் இதனால் நோய்த்தாக்கம் கூடுகின்றது. இறுதியில் மாற்றமுடியாத நோயாளி ஆகிவிடுகின்றார்கள். இதனை நம்முன்னோர்கள் அருணகிரிநாதர் சரித்திரமூலம் உறுதிப்படுத்தி யுள்ளார்கள்.

நோயுற்ற அருணகிரிநாதரை வேசியர் போ என்று அனுப்பி விட்டார்கள். சிலர் மிகக் கடும் வார்த்தைகளினால் பேசினார்கள். உன் உடம்பை நாய்கூடத் தீண்டமாட்டாது என்றார்கள். தீராத நோய் துன்பத்தை தாங்க முடியாது தவித்தார் ஒரு பக்கம் நோய் வாட்டியது. மற்றொரு பக்கம் அவரைக் காமம் வாட்டியது. மீண்டும் பரத்தையர் பால் சென்று அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் பிறந்தது.

அன்புச் சகோதரியே, நான் காமப்பரவசனாகி அன்புக்குரிய வேசியர்களைப் புணர்ந்து சுகமனுபவிப்பதற்கு என்மனம் துடிக்கின்றது. அவர்கள் என்னைப் பார்த்து தீண்ட மறுக்கின்றனர் ஏன் என்னிடம் பணம் இல்லை அல்லவா இல்லை என்றல்லவா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆதலால் நீ எங்கிருந்தாவது பணம் கொண்டுவா அதை அவர்களிடம் கொடுத்து ஆசையைப் பூர்த்தி செய்கின்றேன் என்றார்.

அருணகிரி இருந்த செல்வங்கள் எல்லாம் அழிந்து ஒரு வேளை உண்ண வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கும் யாம் பணத்திற்கு எங்கே செல்வது. உனக்காக என்உயிர் உடலில் ஒட்டியுள்ளது. உனக்காக எதுவும் செய்யத் தயாராக உள்ளேன். உன் உடம்பு உள்ள நிலைக்கு வெளியே செல்வது ஏன் என்னிடமே நடந்துகொள். மனம் வருந்தாதே என்று கூறினாள்.

அருணகிரி நெஞ்சில் இருந்த காம வேட்கைக்குப் போட்ட அறுக்குண்டு போல காதில் புகுந்த்து தமக்கையின் மொழி காம எண்ணமுள்ள அடிகளாரைப் பொசுக்கியது. வீட்டைவிட்டு வெளியில் வந்தார். அருணகிரியார் உயிரை விடும் எண்ணத்துடன் வல்லாளன் கோபுரத்தின் 2வது கோபுரம் மீதேறினார் எல்லா உயிர்களையும் காப்பவன் என்பது உண்மையானால், என்னை இவ்வளவுக்கு ஆளாக்கி துன்புறுத்தியதால் இன்று என் உடலை இழப்பேன் என்று எண்ணி கோபுரத்தில் இருந்து குதித்தார்.

முழுநீற்றுப் பொலிவு கோவண உடை கையில் தண்டாயுதம் உடையவனாகி முருகன் தோன்றினார். விழுகின்ற அருணகிரிநாதரை இரு கையையும் நீட்டி ஏந்தியருளினார். அந்தக் கோபுரத்தின் வடபுறம் மாடத்துள் இருக்கும் முருகப் பெருமானே காத்தருளினார். இப்படி உயிரை வெறுத்து விழலாமா? நான் சொல்வதைக் கருத்தில் கொள் ஒரு சொல் ஆறு எழுத்து மந்திரம் " கௌமார சடாக்கரம்" 108, 1008 என்று எண்ணிக் கணக்கு செய்யாமல் எப்போதும் கூறுக. "சும்மா இரு" என்று அருளினார். " உரு ஏற திரு ஏறும்" என்பது பழமொழி. அதுபோல சும்மா இருந்து தவம் செய்ய ஆறு எழுத்தின் மகிமையால் உலகெல்லாம் வியக்கும் வண்ணம் முருகன் புகழ்பாடல்களை பாடினார். முருகனே சந்தப் பாடல்களைப் பாடச்சொல்லி "முத்தைத் தரு பத்தித் திருநகை" என அடியெடுத்துக் கொடுத்தார்.

தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன தனதான

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேனைப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரிமத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத்தி கிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப்பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை.

கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

இதுதான் அவரின் முதற் பாடல் ஆகும். இவரைக் காணாது தமக்கையார் எல்லா இடமும் தேடி இறுதியில் கோயில் மரத்தின் கீழ் கண்டார். தம்பியார்க்கு இறை அருள் கிடைத்ததை இட்டு மனமகிழ்ந்தார். சில நாட்கள் செல்ல தமக்கையார் இறைவனடி சேர்ந்தார். இதனை அறிந்த அருணகிரியார்ஆயிரம் அன்னையும் உனக்கு ஒப்பாகார் என்று புலம்பி வருந்தினார்.

அருணகிரிநாதர் முருகன் அருள் பெற்றதை யாவரும் அறிந்து மகிழ்ந்தனர். "மரம் பழுத்தால் வெளவாலை வா என்று கூறி இரந்து அழைப்பார் யாரும் அங்கில்லை" என்பது போல ஏழை, பணக்காரர், உயர்வு, தாழ்வு இன்றி எல்லோரும் சென்று வணங்கி மகிழ்ந்தார்கள் பழைய நிலையை எண்ணி அவமதிப்பவரும் சிலர் இருக்கவே செய்தார்கள் இது உலகநியதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனின் பூரணமான அருள் பெற்ற அருணகிரிநாதர் ஒரே ஜோதி மயமாகவும், தபோ மயமாகவும், ஞான மயமாகவும், அருள் மயமாகவும் விளங்கினார். பக்தியும் சாந்தமும் அவர் முகத்தில் தாண்டவமாடின.

## அருணகிரிநாதர் ஸ்தல தரிசனம்

அருணகிரிநாதர் ஸ்தல யாத்திரை செய்து கொண்டு தில்லை நடராசரை தர்சனம் செய்யச் சென்றார். பேரானந்தம் கொண்டார். நடராசப் பெருமானே முருகப்பெருமானாயும் இவருக்குக் காட்சி கொடுத்தார்கள். அக்காட்சியைக் கண்ட மாத்திரத்தே " அவகுண விரகனை" என்ற ஒரே திருப்புகழில்.

"மலைகள் உமைதரு வாழ்வே நமோநம."
என முருகனையும்
"திரிபுரமெரி செய்த கோவே நமோநம"

என சிவனையும், ஒரே மூர்த்தியாக வைத்துப் பாடியருளினார் கள். அவர் அந்தக் காலத்திலேயே மத ஒற்றுமைக்கு அத்திவாரம் இட்டுள்ளார். என்றே அவர் தம் பெருமை. இப்படியே திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்ட தோணியப்பரை சென்று வணங்கி, திருஞானசம்பந்தர் முருகனின் அவதாரமே என்று தமது திருப்புகளில் பாடியுள்ளார். அங்கிருந்து வயலூருக்குச் சென்றார். அங்கிருந்து வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சென்று வழிபட்டு சுவாமிமலைக்கு (திருஏரகம்) வந்தடைந்தார். ஏரகம் ஆறுபடை விடுகளில் நான்காவது ஆகும். இங்குதான் முருகப்பெருமானின் பாத தரிசனம் கிடைத்தது. அந்த அற்புதக்காட்சியை

" தகையா தெனக்கு உன் அடிகாண
வைத்த தனியேரகத்தின் முருகோனே"

எனப் பாடினார் தஞ்சை மாநகர் வந்தார். ராஜ கோபுரத்தின் அழகு இவர் உள்ளத்தை இழுத்தது.

" வண்டுலாவிய நீப மாலை
சற்றிலங்க வருவாயே
தஞ்சை மானகர் ராஜ கோபுரத்தில்
அமர்ந்த பெருமானே. "

என அழகாகப் பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் திருச்செங்கோட்டினை அடைந்து மலைமீது குடி கொண்டுள்ள முருகப் பெருமானின் திவ்விய மங்கள ரூபத்தைக் கண்டு களிக்க இருகண்களும் போதாது என வருந்தினார்.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -
சென்று கண்டு தொழ நாலாயிரங் கண்
படைத்திலனே அந்த நாள் முருகனே.

நான் உன்னை எந்த இடத்தில் "முருகா" என அழைக்கின் றேனோ அங்கு வந்து என்னை ஆட்கொள்ள வேண்டும்.

செங் கோடமர்ந்த பெருமானே
சென்றே யிடங்கள் கந்தா எனும்
பொ செஞ்சேவல் கொண்டு
வரவேண்டும்.

எனக் கேட்டுள்ளார்.

அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள் சொல்வளம் பொருள் வளம் கண்டு ஞானிகளும், யோகிகளும் புலவர்களும் வியந்தனர். தான்தோன்றி மலையிலிருந்து ஞான மலையில் எழுந்தருளியுள்ள மயூரனை தரிசிப்பதற்காக ஒரு பெரிய அடர்ந்த காட்டைக்கடந்து செல்லும் போது வழிதப்பி அருணகிரியார் திகைத்து செங்கோட்டு முருகனை நினைந்தார். முருகனின் வேல் அவருக்கு இரவும் பகலும் துணையாக வந்து வழிகாட்டியது. இத்தகைய வேலின் மகிமையை

தனித்து வழிநடக்கும் எனது
இடத்தும் ஒரு வலத்தும் – இருபுறத்தும்
அருகு அடுத்து இரவு பகல்
துணை ய தாகும்.

என்று வேல் வகுப்பில் கூறுகிறார். செங்கோட்டிலிருந்து புறப்பட்டு பழனியை அடைந்தார். ஆறுபடை வீடுகளில் மூன்றாவதே பழனிமலையாகும். "ஆனா அமுதே" என்று கந்தர் அனுபூதியில் மெய்சிலிர்க்கப் பாடுகிறார். அங்கிருந்து மதுரையை அடைந்து இறைவனின் திருப்பாடல்களையும் மாநகரில் நடந்த அற்புத நிகழ்ச்சிகளையும் பற்றிப் பல பாடல்கள் பாடினார். பின்னர் திருப்பரங்குன்றத்திற்குச் சென்று தேவசேனையை திருக்கலியாணம் செய்து கொண்ட மகோறாத்ஸவத்தை புகழ்ந்து பாடினார். திருப்பரங்குன்றமே ஆறுபடை வீடுகளில் முதலாவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாவது படைவீடாகிய பழமுதிர்ச்சோலை மலையை வந்து அடைந்தார். ஆடும் மயில் மந்திர ரூபங் கொண்டது எனப் புகழ்ந்து பாடினார். ஆறுபடை வீடுகளில் இரண்டாவது வீடே மஹா சக்திவாய்ந்த திருச்செந்தூர் சேஷத்திரமாகும். வேதங்கள் ஐயா என ஓங்கி அழைக்கும் புண்ணியனே; கலைஞானக்கடலே என்று செந்தூர் வேலனை வணங்கி எழுந்தார். பழனிக்கு அடுத்தபடியாக செந்தூர் வேலனையே போற்றி அதிகம் பாடியுள்ளார்.

## ஈழ யாத்திரை

திருச்செந்தூர் வேலனை விட்டுப்பிரிய மனமில்லாமல் பிரிந்து கடல் தாண்டி ஈழ நாட்டை அடைந்தார். அங்கு கதிர்காமத்திற்குச் சென்று, முருகனைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடினார்.

இதமொழி பகரினும் மதமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமானே.

என்று கூறியுள்ளார். கதிர்காமத்தில் கொஞ்சநாள் தங்கி உள்ளார். திருகோணமலை போன்ற தலங்கள்களையும் தரிசித்துக் கொண்டு பிறந்த ஊராகிய திருவண்ணாமலையை அடைந்தார். அந்தக்கால கட்டத்தில் பிரபுடதேவ மஹாராஜா ஆண்டு வந்தார். அவர் அருணகிரியார்மேல் மிக்க அன்பும், பக்தியும் கொண்டவர். அவர் அருணகிரியாரை அரச மரியாதைகளுடன் வரவேற்றார். திருவண்ணாமலையிலிருந்து கொண்டே உலகிலுள்ள முருகப்பெருமானின் ஆலயம் ஒன்று கூட விடுபடக் கூடாதென்று எண்ணித் தொகைத்தலங்களாகச் சேர்த்துப் பாடினார்.

## வில்லி புத்தூரரின் தோல்வி :-

அருணகிரிநாதரின் திருப்புகழ் யாவரும் புகழ்ந்து பாடிக்கொண்டு இருந்தார்கள். இவரின் பெருமை நாடெங்கும் பரவியது.

மஹா பாரதத்தை அருந்தமிழில் பாடியவருமான வில்லி புத்தூரர், அருணகிரிநாதர் பெருமையைக் கேட்டு மிகுந்த பொறாமை அடைந்தார். தனது கல்விச் செருக்கால் அகம்பாகம் கொண்டு தன்னுடன் வாது செய்து தோற்றுப் போகின்ற புலவர்மாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைத் குறடு கொண்டு அறுத்துத் தள்ளுபவருமான வில்லி புத்தூரர் அருணகிரிநாதரை வாதத்தில் வெல்ல வேண்டும் என்று எண்ணம் கொண்டார். வில்லிபுத்தூரர் அரசன் பிரபுடதேவனை சந்தித்து அருணகிரி நாதருடன் வாதத்திற்கு ஒழுங்கு செய்து கொண்டார். வாதில் தோற்பவர் காது குறடு கொண்டு அறுக்கப்படும் என்ற நிபந்தனையையும் ஏற்படுத்திக் கொண்டார்.

இருவருக்கும் வெகு நேரம் வாதம் நடைபெற்றது. ஒரவருக்கு ஒருவர் சலித்தார் இல்லை. ஆள்வார் பல அபூர்வமான கேள்விகள் கேட்டார். அனைத்திற்கும் முருகப்பெருமான் அருளினால் விடையளித்தார். பின்னர் அருணகிரிநாதர் அந்தாதி பாடினார். அதற்கு வில்லிபுத்தூரர் விளக்கம் சொல்ல வேண்டும் "திதத் தத்தத்" என்னும் கவிதைக்குப் பொருள் சொல்ல முடியாமல் திகைத்து நின்றார். எவ்வளவு சிந்தித்தும் பொருள் விளங்கவில்லை அவருடைய மமதை அடங்கியது.

தமக்கு நிகரான புலவர் உலகத்தில் இல்லை என்ற தலைக்கனம் அடங்கியது. அழிவுக்கு முன் அகந்தை என்பார்கள். அதேமாதிரி மற்றவர்களை மதிக்காது இருந்தால் நாம் இறுதியில் வில்லிபுத்தூரரின் நிலைக்கு வருவோம என்கிற வாழ்க்கைப் பாடத்தையும் இதில் கற்றுக்கொள்ளுகின்றோம்.

முருகப் பெருமானின் திருவருளைப் பெற்ற உங்களுடன் வாது செய்து வெற்றிபெற முடியுமா? நான் பூரண மனத்துடன் தோல்வியை ஒப்புக் கொள்ளுகிறேன். இருவரும் செய்துகொண்ட நிபந்தனைப்படி எனது காதை நீங்கள் அறுத்து வீழ்த்தலாம். என்று பணிந்து நின்றார். வில்லிபுத்தூர் ஆழ்வார் தோல்வியை ஒப்புக்கொண்டு தண்டனையை ஏற்க முன் வந்தது அவரின் சிறப் பைக் காட்டுகின்றது.

"வில்லிபுத்தூரரே, இனியாவது இப்படியான செயலில் ஈடுபடாதீர்கள். இதனால் அடையப்போகும் பலன் யாது? உமக்கு மக்களிடம் பகையே உண்டாகும். ஆதலால் இனியாவது இறைவனைப் போற்றி அவர் நாமத்தை உச்சரியுங்கள். பிறரிடம் மதிப்பு மரியாதையை நாம் எதிர்பார்க்கும் பொழுது, நாம் பிறரை மதித்து மரியாதை செய்ய முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். இச்செயல் பாட்டின் மூலம், உங்களுக்கு உயர்வு தானேவரும். எனவே மீண்டும் இத்தீய செயலைச் செய்யாதீர்கள் என்று அவரை மன்னித்து உயர்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கையில் இருந்த வாளையும் குறட்டையும் வாங்கினார். வாளை அரசனிடம் கொடுத்தார், குறட்டை உடைத்தெறிந்தார். அரசன்கூட தண்டனை கொடுக்கும் படி பணிந்தும் அதனை மறந்து விட்டார். இதனால் பலரும் அவரைக் கருணைக்கு அருணகிரி என்று போற்றி மகிழ்ந்தனர். இதில் இருந்து மற்ற உயிர்களையும் தன்னுயிர்போல மதிக்கவேண்டும் என்ற படிப்பை அருணகிரியார் உணர்த்தியுள்ளார்.

அருணகிரிநாதரின் ஒப்பற்ற குணங்களைக் கண்ட வில்லிபுத்தூரர் அவரிடம் உங்களின் கருணையால் இந்தக்கணமே என்னுடைய தீய செயல்கள் எண்ணம் யாவும் அழிந்து விட்டது. என்றென்றும் அன்பும் பக்தியும் குறையாது இருக்க அருள் புரிய வேண்டும். என்று பணிந்தார். அன்புடையர் அன்பும் உரியர் பிறர்க்கு என்றும் வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாக திகழ்ந்து இறுதியில் இறைவனடி சேர்ந்தார்.

திதத்தத்தத் தித்தத் திதிதாதை
தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த
தேதுத்து தித்தி தத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி
தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ
திதிதுதி தீ தொத்ததே.

பதவுரை:- திதத்தத்தத்தித்த – திதத்தத்தத்தித்த என்னும் தாள பிரமாணங்களை, திதி – திரு நடனத்தினால் காப்பாற்றி வருகின்ற, தாதை – சிவபிரானும், தாத – நான்முகனும் துத்தி – படப்பொறியினையுடைய, தத்தி – பாம்பின், தா – இடத்தையும், தித – நிலைபெற்றுக்கொண்டு, தத்து – ததும்புகின்ற, அத்தி – சமுத்திரத்தை பாலாகக்கொண்டு, ததி– தயிரானது, தித்தித்ததே – தித்திக்கின்ற தென்று, து – உண்ட கண்ணபிரானும், துதித்து – துதி செய்து வணங்குகின்ற இதத்து – பேரின்ப சொருபியான, ஆதி – மூலப்பரம்பொருளே! தத்தத்து – தந்தத்தையுடைய, அத்தி– அயிராவதத்தால் வளர்க்கப்பட்ட, தத்தை – கிளியைப்போலுள்ள தெய்வயானைக்கு தாத – தொண்டனே! திதே – தீமையை துதை – நெருங்கிய தாது – சப்த்த தாதுக்களால் நிறைந்ததும் அதத்து –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தோடும், உதி – ஜனனத்தோடும் தத்து – பலதத்துகளோடும், அத்து – இசைவற்றதுமான அத்தி – என்புகளை மூடிய, தித்தி – பையாகிய இந்த உடல் தீ – நெருப்பினால், தீ – தகிக்கப்படுகின்ற திதி அந்த நாளிலே, துதி – உன்னைத் துதிக்கும், தீ – புத்தியானது தொத்தது – உனக்கே எந்நாளும் அடிமையாக இருக்க வேண்டும்.

இப்படி தகர இன எழுத்து மட்டும் வரும்படி மேற்கூறிய பாடலுக்கு அருணகிரிநாதரே பொருள் கூறினார். மிகவும் உயர்வான கருத்தினைக் கொண்ட அந்தாதியின் தத்துவத்தைக் கேட்ட வில்லிபுத்தூரார் மிக மகிழ்ந்தார். அருணகிரி நாதரை உளமாரப் புகழ்ந்து பாராட்டினார்.

இச்சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அரசன் பிரபுட தேவராஜன் எழுந்து வந்து அருணகிரி நாதரை வணங்கி போற்றி நின்றான். உலகம் முழுவதும் பாராட்டி நிற்கும். உங்களைப் பெற்ற நான் மிக மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். இன்று முதல் "கருணைக்கு அருணகிரி" என்று உலகம் உங்களைப் போற்றும் என்று கூறினார். வில்லிபுத்தூராரும் மகிழ்வுடன் இவர்களிடம் விடைபெற்றுச் சென்றார்.

## சம்பந்தாண்டான் பகைமை

திருவண்ணாமலையில் சம்பந்தாண்டான் என்கின்ற சக்தி உபாசகன் வாழ்ந்து வந்தான். அவர் சமணமதத்தை சேர்ந்தவர். இருந்த பொழுதும் உமையம்மையை வழிபட்டு சில சித்திகள் பெற்றவன். அதனால் மிகுந்த ஆணவமுடையவன். அம்பிகையை வழிபட்டாலும் வழிபாட்டுக்கு ஏற்றபடி நெற்றியில் திருநீறு குங்குமம் அணியாமல் பாழ் நெற்றியனாயிருப்பார். அப்படி வழிபட்டு இருந்தால் பல நன்மைகள் பெற்று இருப்பார். தியானமின்றி, அம்பிகையை மந்திர செபம் மட்டும் புரிந்தான். இதனால் நல்ல எண்ணம் பெறாமல், மந்திர செபமியற்றிய அளவுக்குச் சிறிய அளவு சித்தி பெற்றான். அழியாத காயசித்தி முதலிய பல நலமும் தருபவள் அம்பிகை அதனைப் பெறுவதற்கு நினைக்கவில்லை. இவ்வளவு தான் பயன் என்று எண்ணி இறுமாப்படைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிபுத்தூராழ்வார் மதிக்குமளவு வெற்றி பெற்ற வராக, கோபுர முகப்பிலிருந்த அருணகிரிநாதரை அவ்வூர் மக்கள் கூறும் புகழுரையைக் கேட்டுப்பொறாமை கொண்டான். தனக்கு அப்படி ஏதும் வரவில்லையே என்று கவலைப்பட்டான். அருணகிரிநாதரின் மேல் பொறாமைப்பட்டு அரசன் முன்பு சென்று அவரைப்பற்றி பலவாறு தூற்றினான். அரசன் ஏற்கவில்லைக் காரணம் என்னவெனில், வாதில் வென்ற வில்லி புத்தூராரின் காதை கொய்யும் வண்ணம் தாங்கள் தீர்ப்பு வழங்கியும் அதனை மறுத்து அவரின் காதைப் பரிசாக வழங்கிய சம்பவத்தை அரசன் நேரில் பார்த்தவன். அருணகிரியின் கருணையை கண்கூடாகக் கண்டு களித்தவர். எனவே சம்பந்தாண்டான் கூற்றை நம்பாமல் அவரிடமுள்ள அம்பிகையருளைக் கருதி பொதுபட இருந்தான்.

சில நாட்செல்ல திரும்பவும் அரசனிடம் சென்று, அருணகிரிநாதர் ஏதோ சித்தி கற்றறிந்தவர் தாம் கண் முன் காணுமாறு தெய்வத்தைக் காட்ட முடியுமா? என்றான். அரசன் நீங்கள் இருவரும்அருள் பெற்றவர்களே. உயர்வு தாழ்வு யாரைக் கூறுவேன். நன்மை தீமைகளை உயர்வு தாழ்வை அரசன் அறிந்து வைக்கவேண்டும். என்று ஆண்டான் கூறினார்.

யார் யாரிடம் எப்படி நடக்கவேண்டும் என்ற உபாயம், காலப்போக்கு, சமயம் என்பன உணர்ந்த மந்திரியை அழைத்து அருணகிரிநாதரிடம் அனுப்பினான். மந்திரி கோபுரவாயிலை அடைந்தார். அங்கு அடிகளை வணங்கினான். சம்பந்தாண்டான் கூற்றைக்கூறி அரசனின் வேண்டுதலையையும் பணிவாக விண்ணப்பித்தார். அடிகள் மனம் நொந்து முருகன் எங்கும் இருப்பான் இக்கோபுரத்தில் மட்டும் அல்ல உலகெங்கும் இருப்பார். நான் எங்கேனும் போயிருப்பேன். அன்பர் பலர் ஆதரவு எனக்குண்டு, எனக்கு ஏன் இந்தத்தொல்லையென்றார்.

அமைச்சன் கேட்டதும், அழுதான், கெஞ்சினான் இப்படிக் கூறிச்சென்றீராகில் வேறுவினை எனக்கு வேண்டாம், அரசன் என்னைக் கொல்லுவார் என்றார். சரி, அப்படியே முருகனைக் காட்டுவேன் என்று சொல் என்றார். கருணைக்கடலாகிய அருணகிரிநாதரின் வாயால் அருள் உரை பெற்ற அமைச்சர் வந்து அரசனிடம் நடந்தவைகளைக் கூறினான். அரசன் மகிழ்வுற்றான். உடனே சம்பந்தாண்டான் இறைவியைக் காட்டுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டான். அருணகிரிநாதர் பதினாறு தூண் அமைத்து மண்டபத்தின் வடகீழ்த் தூணினைக் காட்டினார். ஆண்டான் கூறிய இடம் வேறு ஒன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாத்துரை
இலவசக் கல்வி நிலையச் சேவை
ஸ்ரீலக்ஷ்மி உடையார் ஒழுங்கை
கொக்குவில

# கப்பூது நுணுப்பாவளை
# கந்தசாமிகோவில் மூலமூர்த்திகளின்
# தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரண்டு இடத்தும் வேள்விச்சாலை பந்தர் பீடம் ஆதியன மன்னன் அமைப்பித்தான். அருணகிரிநாதர் காட்டிய தூணில் முருகனின் திருவுருவம் அமைக்கப்பட்டது. வழிபாட்டுக்கான பொருட்களை அரசன் இருவருக்கும் அனுப்பினான். அன்றைய தினம் சம்பந்தாண்டான் அம்பிகையை மனதில் இருத்தி வேள்வி செய்து வழிபாடு செய்தான். கண்முன் அரசன் முதலானோர் காண்பதற்கு வருக வருக என மனம் ஒருவழிப்பட்டு அசைவில்லாமல் நின்றான். அதாவது ஐம்பொறிகளும் தன்வழி செல்லாமல் மனம் நிலைத்திருந்தான். இது பெரிய சாதனை என்று குறிப்பிடலாம்.

போருக்கு என்று வந்தபின் உறவுமுறை கருதமுடியுமா? சாந்தமாயிருந்த அடிகள், கீதையின் போதனை போல செயல்படத் தொடங்கினார். அம்பிகையை வராமல் தடைசெய்யும் வண்ணம் அருணகிரிநாதர் முருகனிடம் வேண்டுதல் செய்தார்.

தொண்டனின் வேண்டுதலை ஏற்று முருகப் பெருமான் அம்பிகையின் மீதமர்ந்து கொஞ்சலானார். அவள் மனம் மகிழும் திருவிளையாடல்கள் புரிந்தார். சம்பந்தாண்டான் மனதுள் அம்பிகை தோன்றி, 'சம்பந்தாண்டானே'. யாம் பக்திக்கு அடிமை. தூயமனம், அன்பு செய்கைகளுமே நம்மை மகிழவைக்கும். எண்ணங்களுக்குப் பெரும் சக்தியுண்டு. ஆனால் நீயோ தீய எண்ணங்களைக் கொண்டவனாக இருக்கின்றாய். அன்பே வடிவாயும், எல்லாம் முருகன் செயல் என நினைத்து இருப்பவரான, அருணகிரிநாதரிடம் பொறாமையும் பகையும் கொண்டாய். எனவே கெட்ட எண்ணம் கொண்டவர் வாக்கை நிலைநாட்ட யாம் வரம் என்றார். தாயே. முருகப்பெருமான் வந்து தரிசனம் தருவதையாதல் தடைசெய்ய வேண்டும். என்று வேண்டினான். அம்பிகை மறைந்தருளினார். சம்பந்தாண்டான் மனம் வருந்தினான். அரசர்முன் நாணத்துடன் வந்து அம்பிகை வராதவிதம் கூறினான். இன்று ஒன்று பொய்யாயிற்று. நாளைமுருகன் காட்சி எவ்வாறோ என்று எண்ணினான்.

மக்கள் பேச்சு பலவிதமாயிற்று. மறுநாள் அருணகிரிநாதர் முருகனைக்காட்டும் ஆவல் எல்லோரிடம் இருந்ததால், யாகசாலையை சூழ்ந்து நின்றார்கள். அருணகிரி நாதர் குறிப்பிட்ட மண்டபத்தை அடைந்தார். ஏழுதிரையிட்டனர். பூசையை முறைப்படி செய்தார். ஆனால் முருகனை விடாதபடி சம்பந்தாண்டான் அம்பிகையை வேண்டி இருந்தான். முதல் நாளில், தன்னை வராதபடி தடைசெய்த முருகனை அம்பிகை மடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து கொஞ்சலானாள். பால் அமுது ஊட்டினாள். அடிகள் ஆறெழுத்து உரு ஏற்றினார். தியானித்து வரவேண்டலானார். முருகன் அம்பிகையின் தடையில் இருப்பதை அறிவித்தார். உடனே மயிலை வேண்டினார். மயில் விருத்தம் பாடினார். வேலுடன் பெருமான் காட்சி தரும் படியும் இல்லாவிட்டால் உயிர் தரியேன் இது உண்மை என்று பாடினார். கயிலை மலைச் சாரலில் உலாவிய மயில் முருகனிடம் வந்து அகவியது நடனமியற்றியது. நீலநிறக் கழுத்து, நீண்ட பாம்பின் அணி, நடிப்பு இவற்றைக் கண்டதும் சிவபிரான் நினைவு வந்தது. உடல் அஞ்சி உமையம்மை எழுந்தனள். சம்பந்தாண்டான் வேண்டுதலை மறந்தாள். உண்மையான உழைப்பும், தொண்டுள்ளமும் உபாசனைக்கு முக்கியமாகும். அன்புள்ளோர் அருள் பெறுவர். முருகன் அருணகிரியின் அன்புக்குக் கட்டுப்பட்டார். ஏனோ சிறிது தாமதப் படுத்தினார். இதுதான் சமயம் என்று முருகர் மயில் மீது தாவி ஏறினார். அதே சமயம் திருவருணைக்கம்பத்தில் காட்சி தந்தனர்.

அப்பொழுது அருணகிரிநாதர் ஐயனே எப்பொழுதும் எளிதில் வரும் நீ, இன்று மிகவும் சோதனைக்குள்ளாக்கி விட்டீரென்றார். உடனே திரைதனை நீக்கிவெளியே வந்தார். அருணகிரிநாதர் வெளியே வந்த சமயம் பலர் அச்சமுற்றவராயும், சலித்தவர்களாயும், அவ்விடத்தை விட்டகன்றனர். அரசன் மட்டும் ஒளிகண்டு கைகுவித்தவாறு மகிழ்ந்து நின்றான். இவர் தவம் நன்று என்று கருதினர். ஒருசிலர் ஒளியினால் மயங்கினார்கள்.

அரசனே. இங்கு முருகப் பெருமான் திருமேனி ஒளி உன் கண்ணுக்குத் தாங்காது. ஒரு கண்ணை மூடிக்கொண்டு ஒரு கண்ணால் பார்ப்பாயாக என் பார்வைக்குத் தாங்குவதன் காரணம் சொல்லத்தக்கது அன்று என்றார். அரசன் மௌனமாகி உள்ளே போய் இரு கண்களாலும் கண்டான். ஆவல் மிகுதியினால் கண்பெற்ற பயன் பெற்றான். மன்னன் முருகன் ஒளி கண்ட அளவில் கண் பார்வை மங்கியது. அருளொளிக்கு தூலக்கண் தாங்கவில்லை. அடிகள் கண்டார் அரசனின் நிலையை அறிந்தார். அப்போதே பழிவரக்கூடாது என்று முருகனை வேண்டி இருகண்களிலும் பார்வைவரச் செய்தனர். ஒரு கண்ணால் கண்டிருந்தால் ஒரு கண் பார்வையை இழந்து பழி எய்தி இருப்பான். கம்பத்தில் காட்சி தந்த கந்தப்பெருமான் அவ்வளவில் மறைந்தான்.

அரசனுக்கு கண்பெற்ற சந்தோஷம், முருகன் அருட்காட்சி கண்ட மகிழ்ச்சி அளவிடற்கரியது. அடிகளையும் கோபுரத்து முருகனையும் பணிந்து "அடியேன்டி செய்யவேண்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதூ"என்று பணிந்து நின்றான். இத்தூணைச்சேர ஒரு கோயில் கோபுரம், மதில் ஆயிரங்கால் மண்டபம் முதலியன செய்க என்றனர். அருணகிரிநாதர் கூறிய திருப்பணியை நிறைவேற்ற பணம் மிகுதியாகச் செலவு ஆகுமே என்று கருதினன் அல்ல. உடனேயே நிறைவேற்றுவதற்கு ஆவன செய்தான். சம்பந்தர்ஆண்டானை அவமதிக்கக் கூடாது. அம்பிகைவழிபாட்டில் சீரியனேயாவான். அழுக்காறு காரணமாக அழிந்தான். (இதில் இருந்து நாம் பொறாமையால் மற்றவர்களுக்குக் கேடுநினைத்தால், இறைவன் நமக்கு துணைக்கு வரமாட்டான். எப்படிப் பக்தி செலுத்தினாலும் என்கின்ற உண்மையை நாம் கற்றுக்கொள்ளுகின்றோம்). அவன் இருந்த இடத்தில் திருக்குன்றம் ஒன்று கட்டும்படி பணித்தார்.

கோயில்பணி வெகு விமரிசையாக நடைபெற்று வந்தது. இதனைப் பார்க்க சம்பந்தாண்டானுக்கு மேலும் பொறாமை கூடியது. அரசனிடம் சென்றான் அருணகிரிஏதோ மாயம் செய்து விட்டான். உன் பொருளை இப்படி அழிப்பது முறையா? தூணுக்குக் கோயில் கட்டுவது எங்கேனும் உண்டா? என்று பலவாறு நிந்தித்தான்.

அரசன், அடிகளைப்பற்றி முழு நம்பிக்கை எனக்குண்டு ஐயம் இருந்தால் நேரே சென்று அறிதி என்றான். கோபுர முகப்புக்கு சென்றான் அடிகளைப் பற்றி பல நிந்தை கூறினான் அடிகள் வெளியே வந்தார். அந்தநேரம் அரசனும் வந்தான். பாரிசாத மலரைக் கொண்டு வர முடியுமா எனக்கேட்டான்.

அடிகளார் அரசனைப் பார்த்து உனக்கும் ஐயம் உண்டோ? மலர் கொண்டு வரச்சொல்லி நீயும் சொல்லுகிறாயா? அவன் கூறிய உறுதிமொழியை மறந்து போனீர்களா? ஏன் என்னிடம் அனுப்பினீர்கள் என்று வருத்தம் தோன்றக் கேட்டார்.

சுவாமி, தங்களின் அருட் பெருக்கை கண்ணாரக் கண்ட பின்னும் ஐயமேற்படுமா? என்றான் அரசன் வான் மலரைக் கொண்டு வந்து தருவேன். விரைவில் இவன் மனையில் குளமமைத்து அந்த நீர் கொண்டு இளைஞருக்கு (முருகனுக்கு) அபிடேகம் செய் என்றார் அடிகள் விரைவில் சம்பந்தாண்டானை வெளியேற்று அவன் இங்கு இருந்தால் ஏதாவது கலகம் செய்து கொண்டே இருப்பான் என்ற கருத்தில் கூறினார். உடனே அவன் நாகம்போல சீறி அரசன் ஆணையிடு முன்பே, நான் இங்கு இருக்கச் சொன்னாலும் இரேன். ஆனால் பரிசாதமலர் கொண்டு வரும் நாளில் வந்து காணும்படி சொன்னாற் போதுமென்றான். அரசன் அடிகளைப் பார்த்தான். அடிகள் அப்படியே ஆக என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமாத காலத்துக்குள் திருப்பணிகள் எல்லாம் நிறைவேறியது. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடலில் அரசனை பிரபுட தேவன்பேரை அமைத்துப் பாடினார். பாரிசாதம் கொண்டு வருவேன் என்ற வாக்குப்படி ஒரு நாள் குறிப்பிட்டார். இச்சொல் உலகம் முழுக்கப் பரவியது. அந்நாளை அனைவரும் எதிர் பார்த்திருந்தனர்.

பாரிசாத மலர்

"கந்தர் அனுபூதி" அருணகிரி ஹ்ருதயம் என்னும் நூல் சற்று மாறுபாடாக கூறுகின்றது. அருணகிரிநாதர் முருகனைப் புகழ்ந்து மனமுருகி வேண்டுதல் செய்தும் வரவில்லை. எனவே அருணகிரிநாதர், முருகனின் மயில், வேல், அவரின் கடைக்கண்ணின் மகிமை ஆகிய இம் மூன்றையும் அமைத்து கடைக்கண்ணியல் வகுப்பில் குமரனை நெஞ்சார நினைத்து புகழ்ந்து பாடியும் முருகப்பெருமான் தரிசனம் தரவில்லை. முருகா நின்னிலும் சிறந்தது நின் தாள் அல்லவா. இதனை அறியாமல் போய் விட்டேன். உனது அருளினால் உனது பாத மகிமையை வர்ணிக்கின்றேன் என்று மந்திரமயமானசீர் பாதவகுப்பில் துதி செய்தார். மிக சக்தி வாய்ந்த பாடல் சபையில் மன்னன் உட்படயாவர்க்கும் மெய் சிலிர்த்தது. எல்லோரும் அருணகிரிநாதரை நோக்கிய வண்ணமாக இருந்தார்கள். மெய்சிலிர்க்கப்

உததியிடை கடவுமர
    கதவருண குலதுரக
வுபலளித கனகர
    சத கோடி சூரியர்கள்
----------------

எனத்தொடர்ந்து பாடலானார்.

சம்பந்தாண்டான் இவர் அழைக்க இறைவன் வருவதா என்று இழிவாகப் பேசினான். அருணகிரிநாதர் உள்ளத்திலிருந்த எழும் தெய்வத்தன்மை பொருந்திய பாடல்கள் இது வரை யாம் எல்லோரும் கேட்டு மகிழ்ந்தோம். நம்மை பரவசம் படுத்தியதும் அல்லாமல் உள்ளத்தில் அன்பின் பெருக்கை வளரச் செய்கின்றது. எனவே பொறுமையாக இருந்து கவலிப்போம் என்றார் அரசன். அருணகிரிநாதர் மனம் தளராமல் மயில் மூலமாகத் தேவியைத் திருப்தி செய்யலாம் என்று மாபெரும் சக்தியுடன் கூடிய மயில் வகுப்பை எடுத்துப் பாடினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதல சேடனாராட அகிலமேரு மீதாட
அபின காளிதானாடா – அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு
வாராட அருகு பூத வேதாளம்– அவையாட
மதுர வாணி தானாட மலரில் வேதனாராட
மருவு வானுளோ ராட – மதியாட
வசன மாமியாராட நெடிய மாமனாராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்.

கார்த்திகை பாலனே, மன்ன பெருமாலின் உள்ளம் குளிரும் வண்ணம் நீ மாறாது தோகை மயில் மீதேறி இந்த சபையில் வந்து தரிசனம் தந்தருளவேண்டும். அதுவரையில் சஞ்சலமான மனதையுடையவனாக இருப்பேன் என்று கூறி வருந்தினார். அருணகிரி நாதரின் துயர மொழிகள் மயிலின் காதில் விழுந்ததும் தனது அழகான தோகையை விரித்து பார்வதிதேவி முன் நடனமாடியது. அந்த நடனத்தில் முருகனை அருணகிரி அழைக்கும் செய்தியை உணர்த்தியாடியது. இளம் தென்றல் காற்றும் மயிலின் அழகிய நடனமும் ஒரு கணம் பார்வதியை மெய்மறக்கச் செய்தது. உடனே முருகன் மயில் ஏறினார் அந்தக்கணமே மனோவேகத்தில் மன்னன் பிரவுடதேவராசனால் அமைக்கப்பட்ட தூணில் ஒரு நொடிப்பொழுது கோடி சூரியப் பிரகாசத்துடன் வேலைத்தாங்கிய வண்ணம் மயில்மீது காட்சி கொடுத்து மின்னல் போல மறைந்தருளினார்.

முருகனின் தரிசனமகிமையால் அரசபெருமான் கண்ணொளியினை இழந்தான். மன்னன் வள்ளலே இதென்ன அதிசயம் தங்களைக்காண பார்வையில்லாமல் விட்டேன். இழந்த பார்வையை மீண்டும் பெற முடியுமா? என்று பலவாறு மனம் நொந்து கூறினான்.

அருணகிரிநாதர், முருகனின் அருள் இருக்கும் பொழுது நீர் உமது இழந்த பார்வையை திரும்பப்பெறுவீர்கள். இது சத்தியம் என்றார். (அருணகிரிநாதர் புராணத்திற்கும் இதற்கும் சற்று வேறுபடுகின்றது.)

தன்தோல்வியை நினைத்துக்கவலை கொண்ட சம்பந்தாண்டான் சபையை விட்டு சென்றான். அருணகிரியார் இருக்கும் வரை தான் அரசன் அன்பை பெற முடியாது என்று எண்ணினான். சூழ்ச்சியின் மூலம் அவரை வெல்ல விரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அரசனைச் சந்தித்தான். முருகனின் தரிசனத்தினால் நீர் கண்ணை இழந்தீர் என்று என்னால் நம்ப முடியவில்லை. கருணைக்கடலாகிய முருகப்பெருமான் மன்னனாகிய உமது பார்வையை மங்கச் செய்வாரா? அருணகிரிநாதர் மாந்திரிக வித்தையில் கை தேர்ந்தவர். அவர் வேண்டுமென்றே இவ்விதம் செய்து இருக்க வேண்டும். இதை நான் அன்றைக்கே சபையில் கூறி இருக்க வேண்டும். இருந்தும் தனிமையில் கூற விருப்பப்பட்டு இங்கு வந்த கூறினோம். உமது விருப்பம்போல செய்யுங்கள் என்றான். 'கரைப்பார் கரைத்தால் கல்லும்' கரையும் என்பார்கள் காலத்திற்கு ஏற்ற சொல் அவனுடைய மனத்தையும் மாற்றிவிடும் என்று பெரியோர் கூறுவர். எனவே சம்பந்தாண்டானின் இனிய பேச்சில் மன்னன் மயங்கினான்.

அருணகிரிநாதரை ஒழித்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தைக் கொண்ட சம்பந்தாண்டான், திரும்பவும் அரசே! இழந்த பார்வையை திரும்பப் பெறுவதற்கு வழி ஒன்று கூறுகின்றேன். தேவலோகத்திலுள்ள கற்பகமலரைக் கொண்டுவந்து, பார்வை இழந்த கண்ணில் ஒத்திக் கொண்டால், இழந்த பார்வையை மீண்டும் பெறலாம். மலரைக்கொண்டு கொண்டு வருவது சுலபமான காரியமல்ல. இதனை என்னால் கொண்டுவர முடியும். ஆனால் நான் விரும்பவில்லை. அருணகிரி கொண்டு வரவேண்டும். அவர் கொண்டுவர மறுத்து விட்டால் மறு வினாடியே மலரையாம் கொண்டு வருவோம் இது சத்தியம் என்று கூறினார்.

மன்னன் கண் பார்வையை மீண்டும் பெறலாம்என்று எண்ணி அடிகளாரை வரவழைத்தான் அவரும் மன்னனைப் பார்க்க வந்தார். தபோ நிதியே உமது அருளை நாடி இங்கு அழைத்தோம். கண்ணொளி இழந்த யான் இருப்பினும் உயிர்துறப்பதுமேல், இருந்தும் உயிர் அற்றவன் அன்றோ.

அருந்தவத்தை உடைய தாங்கள் விண்ணுலகம் சென்று கற்பக மலரைக்கொண்ட வந்தால், அதன் மகிமையினால் யான் மீண்டும் கண்ணொளியைப் பெற முடியும். இதுவே எனது வேண்டுதல் என்றார்.

அரசே கவலையை விட்டு விடுங்கள் தேவலோகம் சென்று இணையற்ற கற்பக மலரைக் கொண்டு வருகின்றேன். அதன் சக்தியினால் மீண்டும் பார்வை பெறுவீர். இந்த விடயத்தில் உம்முடைய ஆசையும் என்னுடைய கடமையும் முன்நிற்கின்றன.

அரசே, இந்த உடலுடன் தேவலோகம் செல்ல முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்த உடலை அண்ணாமலைக் கோபுரத்தில் வைத்துவிட்டு போகின்றோம். யாம் திரும்பிவரும் வரை இவ்வுடல் இராஜ கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்றார். அண்ணலே கண் இமை காப்பது போல உமது உடலைக் காப்பாற்றுவேன் என்று உறுதி கூறினான்.

அருணகிரி நாதரும் தாம் கூறியபடி கூடுவிட்டு கூடுபாய்ந்து இறந்த கிடந்த கிளியின் உடலில் புகுந்து தேவலோகம் சென்றார். இது தான் தருணம் என்று சம்பந்தாண்டான், அருணகிரிநாதரின் உடலை அரசன் காப்பாற்றுவதால் அதனை சூழ்ச்சியால் அழிக்க வேண்டும் என்று நினைத்தான். ஒரு இறந்த கிளியின் உடலை அருணகிரிநாதர் உடல் இருந்த கோபுரத்திற்கு அண்மையில் இரகசியமாக வைத்தான். அரசனிடம் சென்று, அரசரே அருணகிரிநாதர் கிளி உருவத்தில் தேவலோகம் சென்றதைப் பார்த்தீர்கள் அல்லவா. அக்கிளி மலரைக்கொண்ட வர முடியாத துக்கத்தில் மௌனமாக இறந்து விட்டது என்று பக்கவமாக அரசனுக்கு கூறி, இறந்த கிளியின் உடல் விபரத்தையும் சேவகர்கள் மூலம் தெரியப்படுத்தினான். அரசன் அதனை உண்மையென்று நம்பினான். அரசனுக்கு அகக் கண்ணும் குருடாக அருணகிரியாரின் கோபுரத்தில் உள்ள சடலத்தை அகற்றி தக்க முறையில் தகனம் செய்யக்கட்டளையிட்டான். சம்பந்தாண்டானே முன் நின்று தகனக் கிரியைகளை நடத்தினான்.

கிளிரூபத்தில் தேவலோகம் சென்ற அருணகிரிநாதர் கற்பக மலருடன் திரும்பினார். நேரே அண்ணாமலைக் கோபுரத்தில் சென்று தனது உடலைத் தேடினார். உடலைக் காணாது அரசனிடம் சென்று, "அரசே கவலையை ஒழியுங்கள், அருணகிரி கற்பக மலருடன் வந்து இருக்கின்றேன்." என்று மலரை அரசனிடம் கொடுக்க அரசன் மலரை வாங்கி கண்ணில் ஒற்றினான். மறு விநாடியே கண்பார்வை பெற்றான்.

**அநுபூதியை அருளுதல்**

---

புத்துயிர் பெற்ற அரசனின் உள்ளம் துடித்தது. சொற்கள் தடுமாறியது. உடல் எல்லாம் வியர்த்தது உடல் நடுங்கியது. அருணகிரிநாதரே யான் என்ன காரியம் செய்தேன் என்று கத்திக்கொண்டு நிலத்தில் வீழ்ந்த புரண்டான் தன்னை மன்னிக்குமாறு பிரார்த்தனை செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் கண்டதும் கதறும் மன்னனை "அரசே ஆவதும் அழிவதும் முருகப் பெருமான் செயலே". இதில் யார் யாரை மன்னிப்பது? அன்பின் வடிவமும் என் ஆருயிர் தெய்வமே நீங்கள் என்ன கூறினாலும் எனக்கு மன நிம்மதி கிடைக்காது. தங்களின் திவ்விய உடலை தகனம் செய்வதற்கு அனுமதி வழங்கி நாயிற் கடையேனாகி தங்கள் முன்னிலையில் நிற்கின்றேன். விலை மதிக்கமுடியாத இருகண்களைத் தந்து அருளினார்கள். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன் என்று மனம் நொந்து துடித்தான் கருணைக்கடலே மீண்டும் அடைந்த கண்களினால் தங்களுடைய பழைய திருமேனியை ஒரு தரம் பார்க்க அருள்புரிய வேண்டும் என்று வேண்டி வணங்கி நின்றான். அருணகிரிநாதர் முருகனின் திருவருளினால் பழைய திவ்விய உருவத்தைக் காட்டியருளினார். அரசன் அருணகிரிநாதரின் திருவடிகளைப் பற்றி வணங்கினான். அடியேன் என்ன தவம் செய்தேன் மீண்டும்உங்களைப் பார்த்து வணங்க என்று இறைஞ்சி நின்றான்.

அரசெ இனி மனக்கவலையை விடுங்கள் ஏழு கோடி மந்திரங்களும் சரவணபவ என்னும் ஷடக்ஷரத்திற்குள் அடங்கிவிட்டன. இதுவே உமக்கு யாம் கடைசியாகக் கூறுகின்றேன் என்று கூறி கிளி ரூபத்தில் ஸ்கந்த லோகத்திற்கு செல்ல அருணையை விட்டு நிங்கினார்.

மன்னன் கண்பார்வை பெற்று விட்டான் என்பதை அறிந்த சம்பந்தாண்டான், மன்னன் மூலம் தமக்கு உயிராபத்து ஏற்படக்கூடும் என்று திருவண்ணாமலையை விட்டு நீங்கி வேறு நாட்டில் கரந்து வாழ்ந்தான்.

வானில் கிளி ரூபத்தில் பறந்துகொண்டுள்ள அருணகிரியையும் கீழே கதறிக்கொண்டு நிற்கும் மன்னனையும் மக்களையும் அண்ணாமலையான் பாாத்து ஒருகணம் மெய்மறந்து நின்றார்.

உடனே முருகன்; "அப்பா அருணகிரி முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் நெருப்பு பிளம்பாக இருக்கிறார். அடிமுடி தேடியவர்கள் இங்கே இருக்கிறார்கள். அன்னை பராசக்தி, இளங்குமரன் முருகன் இங்கு இருக்கின்றார்கள். அருள் எல்லாம் எண்ணமுடியாமல் அண்ணாமலையாகத் திகழ்கின்றது. அன்பின் வடிவே அடியார்கள் இருக்குமிடமே யாம் இருப்போம்.

அருணகிரி உமது பெருமை தெரியாது நீ பிறந்தது அருணையிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டதும் அருணையிலே நம்மிடம் ஒன்றாகக்க கலந்து முத்தியடைவதும் அருணையில் தான் எனவே நீ அருணையில் அருள் மலையாக இருக்க வேண்டும். என்பது எனது அவா.

அப்பா அருணகிரி இந்தக்கணமே கிளிருபமாக தமது வலது தோளில் அமர்ந்து கொண்டு எமது அனுபூதியாகிய கந்தர் அனுபூதியை தமிழ் மொழியும், வேதமொழியும் கலந்த வண்ணமாக வானொவப் பாடுவாயாக என்று அருளினார்.

உடனே முருகன் ஆணையை ஏற்று உயர் குரலில் அருணகிரிநாதர் கந்தர் அனுபூதியை " ஆடும் பரிவேல்" என்று தொடங்கிப் பாடினார். அண்ணாமலை எங்கும் அனுபூதி வானொவ நிறைந்து நிற்கின்றது. இப்படியாகக் கந்தர் அனுபூதி உலகத்திற்கு அளிக்கப்பட்டு ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிறைந்து நிற்கின்றது. முருகப்பெருமானின் வலது தோளில் கிளி ரூபத்தில் அருணகிரிநாதர் இப்பொழுதும் கந்தர் அனுபூதி பாடிக் கொண்டிருக்கிறார். முருகப்பெருமானும் அளவிலா அன்பினாலும் மகிழ்ச்சியினாலும் அனுபூதியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அருணகிரிநாதரையும் முருகனையும் பிரிக்கவே முடியாது.

இதனை நினைவூட்டவே, இப்பொழுதும் திருவிழாக் காலங்களில் முருகனின் வலத்தோளில் கிளியை வைத்து அலங்கரிக்கின்றார்கள்.

ஆனிமாதம் பௌர்ணமி மூல நட்சத்திரத்தில் அருணகிரிநாதர் இறைவனுடன் இரண்டறக் கலந்தார். ஆனிமாதம் பௌர்ணமி மூல நட்சத்திரத்தில் அவதரித்தவர் அதே நாளில் அத்துவித முத்தி பெற்றார். அவதரித்ததும் முத்தி பெற்றதும் ஒரு நாள் என்பதை உணர்க.

## வாழ்க்கைப் பயன்பாட்டில் திருப்புகழ்

முருகப்பெருமானிடம் குருவாக உபதேசம் பெற்றவர்கள் மூவரே. சிவபெருமான், அகத்திய முனிவர், அருணகிரிநாதர். தேவசிரேஷ்ட்டர் சிவபெருமான் முனிசிரேஷ்ட்டர் அகத்தியர். நரசிரேஷ்ட்டர், அருணகிரிநாதர். முருகன் தனக்கு உபதேசித்த கருணைத் திறத்தை அருணகிரிநாதர் பல பாடல்களில் உள்ளம் உருகி உரைக்கின்றார். அருணகிரிநாதர் எந்த நேரம் எங்கே அழைத்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வருவாராம். "எங்கே நினைப்பினும் அங்கே, என்முன் வந்து எதிர் நிற்பனே." தனியே வரமாட்டாராம். எம்பிராட்டி வள்ளிநாயகியுடன் வருவாராம்.

"நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்
எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்."

இதனால் முருகனின் கருணையின் எளிமையும், அருணகிரியாரின் தவத்தின் அருமையும் நன்கு புலனாகின்றன. அருணகிரிநாதர் பதினாறாயிரம் திருப்புகழ் பாடல்கள் பாடியருளினார். அவ்வளவும் அரிய சந்தங்கள் நிறைந்தவை. சங்கீதகாரர் சொல்லும் "மர்மம் நிறைந்த " பல்லவிப் பாடலிலும் எத்தனையோ படிகள் உயர்ந்த ரீதியில் தாளநடைகட்கு இலக்கியமாகத் திகழ்வது திருப்புகழ். பொதுவாக சொன்னால் கருநாடக சங்கீதத்தில் காணமுடியாத விபரிக்க முடியாத தாளமர்ம விரிவுகளைக் கொண்டதே திருப்புகழ். சந்தம் வேதசாரமாக தத்துவ இரத்தினங்கள் நிறைந்ததாக, மந்திரமயமாக விளங்குவன.

வேதம் வேண்டாம் சகலவித்தை வேண்டாம் நாத
கீதம் வேண்டாம் ஞான நூல் வேண்டாம் – ஆதி
குருப் புகழை மேவுகின்ற கொற்றவன் தாள்போற்றும்
திருப் புகழைக் கேளீர் தினம்.

திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்மயில், சேவல் விருத்தங்கள் என்னும் ஆறு வகையான நூல்களை நமக்கு வழங்கி அருளினார்.

திருப்புகழைத் தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களின் இறுதியிற் சேர்த்து இறைவழி பாட்டின் போது அடியார்கள் ஓதி வருகின்றனர். கந்தரநுபூதி முதலியவற்றை நித்திய பாராயணம் செய்து வருகின்றனர். தோத்திர லக்ஷணம் ஆறுவகை.

1) நமஸ்கார ரூபத்தோத்திரம் (வணக்கம்)
2) வாழ்த்து ரூபத்தோத்திரம் (வாழ்க)
3) மறுக்க முடியாத முடிபான உண்மைகளைக் கூறும் ஸ்துதி
4) பதியின் வீர பராக்கிரம நிக்கிரகங்களைக் கூறும் ஸ்துதி
5) அநந்த கல்யாண குண மகிமைகளைக் கூறும் ஸ்துதி
6) வேண்டும் வரங்களை வேண்டிக் கொள்ளும் ஸ்துதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆறுவகை தோத்திரங்களும் திருப்புகழில் அமைந்துள்ளது. அத்துடன் காலையில் நீறு இடும் பொழுது, உண்பதற்கு முன், படுப்பதற்கு முன், காவல், துணைவேண்டிய பொழுது, நோய்க்கும், நோய்வராமல் இருப்பதற்கும் மனசஞ்சலம் தீருவதற்கும், திருமணம் நடைபெறுவதற்கு காரியசித்தி பெறவும், புகழ் பெறவும், இம்மை, மறுமை சுகம் பெறவும் என்று பலவாறு எங்கள் தேவைகளுக்கேற்ப திருப்புகழ் உண்டு. அதனைத் தேர்ந்து எடுத்து வாழ்க்கைத்தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

திருப்புகழ்:– இதுவே இவர் செய்த நூல்களின் முதன்மையானது. முருகனின் திருப்புகழைப்பற்றி சொல்லுவதால் இ·து இப்பெயர் பெற்றது. இதன் தொகை பதினாறாயிரம் என்று மார்க்கச் சகாயத்தவரும் பிறரும் கூறுவர். ஆனால் இப்பொழுது கிடைத்துள்ள பாடல்கள் ஆயிரத்திமுன்நூற்றிபதின் ஒன்று என்கின்றார்கள். சற்றுக்கூடிக் குறையலாக அத்தனையும் முத்துக்கள். வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான பல திறப்பட்ட பாடல்கள் உண்டு.

கந்தரந்தாதி:–

இது பக்திரசம் பொருந்திய அரிய நூல் இதில் தான் தகரவர்க்கத் தாலாகிய பாட்டு அமைந்துள்ளது.

கந்தரநுபூதி:–

ஞானம் மிகுந்ததும், பலராலும் பாராட்டப்படுவதும் இதுவே

கந்தரலங்காரம்

இது ஒரு சிறந்த பாராயண நூலாகும். பக்திரசம் நிரம்பியது.

முருகப் பெருமானுடைய அவதாரமே திருஞான சம்பந்தர் என்பது இவரின் கொள்கை. அநுமான் ருத்திர மூர்த்தி அம்சமென்று கூறி இருக்கிறார். முப்பத்தாறு தத்துவங்களை ஒப்புக் கொண்டுள்ளார். மயிலை, மந்திரருபநிலை என்று உணர்த்தியிருக்கிறார். திருப்புகழ் முழுவதும் தாள அமைதி பொருந்தப் பாடப்பட்டவை. இசை சம்பந்தமான சகல சந்தங்களும் அமைந்தவை. ஏழு தாளங்களுக்கும், ஐந்து ஜாதியொடு சேர்ந்து முப்பத்தைந்து தாளங்கட்கும் இன்னும் கதிபேதங்களால்வரும் நூற்றி எழுபத்தைந்து தாளங்கட்கும் லட்சியமாகக் காணப்படுவது திருப்புகழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோசை சொல்திறன், தாள சந்தங்கள் யாவும் நிரம்பி உள்ளன. இசைப் பிரவாகங்களைத் தாள அங்க சங்க சந்தங்களோடு பாடக்கருவியாய் அமைவது திருப்புகழ். திருப்புகழின் சந்தச் சிறப்பும் தாள நுட்ப விவகார அமைப்பும் திருப்புகழை ஒரு சங்கீத நூல் என்று கூற வைக்கின்றது.

சைவ நூல்களில் திருமுறைக்கு இணையான வேறு நூல் தோன்ற முடியாது. வைணவ நூல்களுள் திவ்வியப் பிரபந்தத்திற்கு நிகராக வேறு நூல் ஏற்பட முடியாது. எத்தகைய புலவரேனும் அவர் பாடும் பாட்டுக்கள் எல்லாம் இந் நூல்களுக்கு கீழ் பட்டனவே. ஆனால் புலவர்கள் சிவன், திருமால் விநாயகர், சுப்பிரமணியர் முதலியோரை தலைவர்களாக அமைந்து அந்தாதி, கலம்பகம், கோவை முதலிய பிரபந்தங்களைப் பாடியும் தல புராணங்களையும் இயற்றி உள்ளார்கள் இவற்றை திருமுறைகளுடன் ஒப்பிட முடியாது.

நம் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் ஓர் புத்தம் புது சுவையை தமிழில் பிறப்பித்துள்ளது. ஐம்புலன்களும், மனமென்றும் ஆறாவது புலனோடு ஒருமையும்படி அருமை ஒலிகளைப் பெற்று மிளிர்கின்றது. திருப்புகழ் பாடும் பொது அதன் சந்தம், தாளம், ராகம் அறிந்து பாடலே முறைமையானது. பாடும் போது, பொருள் உணர்ந்து முருகன் புகழைப் பக்தர்கள் அனைவரும் கேட்டின் புறச் செவிக்கமைவாகப் பாடுவதவசியம். சந்தங்கட்கு இசைய நிறுத்து மிடங்களில் நிறுத்தியும் பாடுதல் அவசியம். ஓதும்போது உணர்ச்சியுடன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடவேண்டும். பாடினால் எப்படி அருணகிரிநாதருக்கு கூப்பிட்ட நேரம் எல்லாம் முருகன் காட்சி கொடுத்தாரோ, அதே போல எங்களுக்கும், முருகன் காட்சி மட்டுமல்லாது அருளும் கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை அன்றாடம் தேவைப்படும் சில திருப்புகழ்களையாவது பாராயணம் செய்து விரும்பியதைப் பெற்றிடுவீர்.

பாராயணத் திருப்புகழ்

நூற்சிறப்பு

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ — பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ காமயில் வீரன்
திருப் புகழைக் கேட்குஞ் செவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கவுரை:-

கல் என்று கூறியவுடன், மாணிக்கக்கல் சாதாரண கல்லுக்கு ஒப்பிட முடியுமா? புகழ் என்று கூறும் பொழுது சாதாரண மனிதனுக்கு ஏற்படுகின்ற புகழுக்கும் முருகப்பெருமானுடைய "திருப்புகழ்" நூலுக்கு இணையாக கூற முடியுமா? இல்லை

## நூற்பயன்

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம் பெறலாம் - மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேயிக் கூறு.

விளக்கவுரை :-

பிள்ளையாருடைய தம்பியாருடைய புகழைக் கூறினால் எல்லா நன்மைகளும் பெறலாம்.

## கலி விருத்தம்

பொருப்பது பொடிப்பட விடுத்திடு கைவேலா
இருப்பிட முளக்கெது எனக்கரு ளியம்பாய்
உருக்கநல் விழுக்குல மொழுக்க மிலரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி லிருப்பாம்.

திருப்புகழைப்படிப்பவர் மனதில் மிகுந்த மகிழ்ச்சியுடன் முருகன் வந்து இருந்து விடுவார்.

## வெண்பா

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தம் செபிக்கத் - திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றை வென்று
கெர்ச்சிக்க லாமே கெடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழைப் படிப்போர் முருகப் பெருமானது திருவருளைப் பெற்று மனோபல முடையவராய் விளங்குவர். இயமனையும் வெல்லுவார்கள். இம்மை மறுமை இன்பங்களைப்பெற்று இறைவன் பாதங்களை அடைவார்கள்.

## திருநீறு இடும் பொழுது

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தந்ததான

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி

ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள் பதமேதுணையை தென்றுநாளும்

ஏறுமயில் வாகனகு காசரவணுவெனது
ஈசவென மானமுற என்றுமோதும்

ஏழை கள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
எவர்புகழ்வார் மறையும் என் சொல்லாதோ

நீறுபடு மாழைபொரு மேனியவ வேலவணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே

நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும் டங்கல்வேலா

சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடம்

சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே.

## அருள்வேண்டல்

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொருபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீதகிண்கிணி பாதா நமோநம
தீர சம்பரம வீரா நமோநம கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈதலும் பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால் விளை
சோழ மண்டல மீதேம நோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரிமீதேறி மாகயி லையிலேகி

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நனாடதில்
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

புகழ்பெற, பகையற

---

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகச்

சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்

நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக முரைக்குஞ் செயல்தாராய்

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தகுந் தனபேரி

தடுட்டரு டுடுட்டுன் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்

சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா

தினைக்கிரி குறப்பெண் தனத்தினிற் சுகித்தென்
திருத்தணி யிருக்கும் பெருமாளே

உடல் ஊனம் ஒழிய

---

திமிர வுததி யனைய நகர
செனன மதனில் விடுவாயேல்

செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியு மணுகாதே

அமரர் வடிவு மதிக குலமு
மறிவு நிறையும் வரவேநின்

அருள தருளி யெனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்

சமர முகவெ லசுரர் தமது
தலைகளுருள மிகவேநீள்

சலதி யலற நெடிய பதலை
தகர அயிலை விடுவோனே

வெமர வணையி லினிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே

மிடறு கரியர் குமர பழநி
விரவு மமரர் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யமபயம் ஒழிய

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா

பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா

காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே

கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே

ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா

ஆடுமயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே

சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே

சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமானே

திருப்புகழ்

## யம பயம் ஒழிய

காலனிடத் தணுகாதே ; காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான ; தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே ; மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே ; நாககிரிப் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் காட்சி கொடுத்தது!

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

திருப்புகழ்

## யம பயம் ஒழிய

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே
உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனெ னாசைப்பாடைத் தவிரேனோ
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக்காரப் பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக்காரப் பெருமாளே

## முக்தி வாய்க்க

இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக் கலவாதே
முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடி யேனுக் கருள்வாயே
தத்துவமெய்ஞ்ஞானக் குருநாதா
சத்தசொரு பாபுத் தமுதோனே
நித்தியக்ரு தாநற் பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையாமை உணர

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

## கழல் பெற

நீதானெத் தனையாலும் — நீடுழிக் க்ருபையாகி
மாதானத் தனமாக — மாஞானக் கழல்தாராய்
வேதாமைத் துனவேளே — வீராசற் குணசீலா
ஆதாரத் தொளியானே — ஆரூரிற் பெருமாளே.

## திருவடி பெற

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே
விழுதிக ழுழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவடி பெற

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
· மேலை வெளியி லொளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவ ரெவராலும்

ஓதவரிய துரியங் கடந்தது
போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங் கலந்தது சிவஞானம்

சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூலநிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர்சொ னவியோமஞ்

சாரு மனுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ

வால குமர குககந்த குன்றெறி
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே

வாசகளப வரதுங்க மங்கல
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா

ஞால முதல்வி யிமயம் பயந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனியெங்க ளம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி யகிலம் பரந்தவ
ளாலி னுதர முளைபைங் கரும்புவெ
ணாவ லரசு மனைவஞ்சி தந்தருள் பெருமாளே.

## வினைகெட

குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகான

குழக சிவசுத சிவய நமவென
குரவ னருள்குரு மணியேயென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமுத இமையவர் திமிர்த மிடுகட
லதென அநுதின முனையோதும்

அமலை அடியவர் கொடிய வினைகொடு
மபய மிடுகுர லறியாயோ

திமிர எழுகட லுலக முறிபட
திசைகள் பொடிபட வருசூரர்

சிகர முடியுடல் புவியில் விழவுயிர்
திறைகொ டமர்பொரு மயில்வீரா

நமனை யுயிர்கொளு மழலி னிணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா

நளின குருமலை மருவி யமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே.

## உடல் தளர்ந்த வேளை

வால வயதாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவினை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகி மட கூடமொடு பொருள்தேடி
வாசபுழு கோடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவரா சைதனி லேசுழல சிலநாள்போய்த்

தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி யுறுநாளிற்
சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற முலகசு மாலமென நாறியுட லழிவேனோ

நாலுமுக னாதியரி யோமென அதாரமுறை
யாதபிர மாவைவிழ மோதிபொரு னோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மிளையோனே
நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா

ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக னோடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவண குழாமமரில் பொடியாக
ஓகை தழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பணரி கேசன்மரு காஎனவே
யோதமறை ராமெசுர மேவுகும ராவமரர் பெருமாளே

## இடர் தொலைய

அதிருங் கழல்ப ணிந்து னடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கி லுமைபாலா
பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன் றிலுமமர்ந்த பெருமாளே.

## இடர் தொலைய

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

## திருவருள் கிடைக்க

இரவுபகற் பலகாலும் ; இயலிசைமுத் தமிழ்கூறித்
திரமதனைத் தெளிவாகத் ; திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே ; பரசிவதத் துவஞானா
அரனருள்சற் புதல்வோனே ; அருணகிரிப் பெருமாளே

## முருகன் காட்சி தர

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி
அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி
வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி
வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும்
வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம
முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு
மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு
பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் காட்சி தர

சுடரனைய திருமேனி யுடையழகு முதுஞான
சொருபகிரி யிடமேவு முகமாறும்
சுரர்தெரிய லளிபாட மழலைகதி நறைபாய
துகிரிதழின் மொழிவேத மணம்வீச
அடர்பவள வொளிபாய அரியபரி புரமாட
அயில்கரமொ டெழில்தோகை மயிலேறி
அடியவிரு வினைநீறு படஅமர ரிதுபூரை
அதிசயமெ னருள்பாட வரவேணும்
விடைபரவி அயன்மாலொ டமரர்முனி கணமோட
மிடறடைய விடம்வாரி யருள்நாதன்
மினலனைய இடைமாது இடமருவு குருநாதன்
மிகமகிழ அநுபூதி யருள்வோனே
இடர்கலிகள் பிணியோட எனையுமருள் குறமாதி
னிணையிளநிர் முலைமார்பி னணைமார்பா
இனியமுது புலிபாத னுடனரவு சதகோடி
யிருடியர்கள் புகழ்ஞான பெருமாளே.

## முருகன் காட்சி தர

வந்து வந்துவித் தூறி யென்றனுடல்
வெந்து வெந்துவிட் டோட நொந்துயிரும்
வஞ்சி னங்களிற் காடு கொண்டவடி வங்களாலே

மங்கி மங்கிவிட் டேனை யுன்றனது
சிந்தை சந்தொஷித் தாளு கொண்டருள
வந்து சிந்துரத் தேறி யண்டரொடு தொண்டர்சூழ

எந்தன் வஞ்சனைக்காடு சிந்திவிழ
சந்த ரண்டிசைத் தேவ ரம்பையர்க
ளிந்து பந்தடித் தாடல் கொண்டுவர மந்திமேவும்

எண்கடம் பணித் தோளு மம்பொன்முடி
சுந்த ரந்திருப் பாத பங்கயமும்
என்றன் முந்துறத் தோணியுன்றனது சிந்தைதாராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ரந்திகைத் தோட விஞ்சையர்கள்
சிந்தை மந்திரத் தோட கெந்தருவ
ரம்பு யன்சலித் தோடஎண்டிசையை யுண்டமாயோன

அஞ்சி யுன்பதச் சேவை தந்திடென
வந்த வெஞ்சினர்க் காடெ ரிந்துவிழ
அங்கி யின்குணக் கோலை யுந்திவிடு செங்கைவேலா

சிந்து ரம்பணைக் கோடு கொங்கைகுற
மங்கை யின்புறத் தோள ணைந்துருக
சிந்து ரந்தனைச் சீரம ணம்புணர்நல் கந்தவேளே

சிந்தி முன்புரக் காடு மங்கநகை
கொண்ட செந்தழற் கோல ரண்டர்புகழ்
செம்பொ னம்பலத் தாடு மம்பலவர் தம்பிரானே.

## உள்ளொளி பெருக

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

## முருகன் காட்சிதர

அதல சேட னாராட அகிலமேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை விடாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறுகாலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்த்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

## அடியார் இணக்கம் வாய்க்க

கரையற வுருகுதல் தருகயல் விழியினர்
கண்டான செஞ்சொல் மடமாதர்
கலவியில் முழுகிய நெறியினி லறிவுக
லங்காம யங்கும் வினையேனும்
உரையையு மறிவையும் உயிரையு முணர்வையும்
உன்பாத கஞ்ச மலர்மீதே
உரவொடு புனைதர நினைதரு மடியரொ
டொன்றாக என்று பெறுவேனோ
வரையிரு துணிபட வளைபடு சுரர் குடி
வந்தேற இந்த்ர புரிவாழ
மதவித கஜரத துரகத பததியின்
வன்சேனை மங்க முதுமீன
திரைமலி சலநிதி முறையிட நிசிசரர்
திண்டாட வென்ற கதிர்வேலா
ஜெகதல மிடிகெட விளைவன வயலணி
செங்கோட மர்ந்த பெருமாளே.

## 'யான்' எனது அற

தேனியல்சொற் கனிமாதர்
சேவைதனைக் கருதாதே
யானெனதற் றிடுபோதம்
யானறிதற் கருள்வாயே
வானவருக் கரசான
வாசவனுக் கினியோனே
ஆனைமுகற் கிளையோனே
ஆறுமுகப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோக நிலை சேர

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
 நாடண்டி நமசிவாய வரையேறி

நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய
 நாதங்க ளொடுது லாவி விளையாடி

ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவிலாம
 லோமங்கி யுருவ மாகி யிருவோரும்

ஓரந்த மருவி ஞான மாவிந்தை முதுகிலேறி
 லோகங்கள் வலம தாட அருள்தாராய்

தேனங்கொ ளிதழி தாகி தாரிந்து சலில வேணி
 சீரங்க னொது தாதை ஒருமாது

சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மஷன ஜோதி
 சேர்பங்கி ஹமல நாத னருள்பாலா

கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடியநீல
 காடந்த மயிலி லேறு முருகோனே
காமன்கை மலர்கள் நாண வேடம்பெ ணமளிசேர்வை
 காணெங்கள் பழநி மேவு பெருமாளே.

## பற்றுக்கள் விலக

அருத்தி வாழ்வொடு தனகிய மனைவியு முறவோரும்
 அடுத்த பேர்களுமித முறு மகவொடு வளநாடும்
தரித்த வூருமெ யெனமன நினைவது நினையாதுன்
 தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது தருவாயே
எருத்திலேறிய இறையவர் செவிபுக வுபதேசம்
 இசைத்த நாவின இதலுறு குறமக ளிருபாதம்
பரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை
 பதிக் கொளாறிரு புயபழ நியிலுறை பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓங்காரத்தின் மேல் அன்பு மேலிட

காமியத் தழுந்தி யிளையாதே
காலர்கைப்படிந்து மடியாதே
ஓமெ முத்தி லன்பு மிகவூறி
ஓவியத்திலந்த மருள்வாயே
தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக்கடிந்த கதிர்வேலா
ஏமவெற்புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

## அநுபூதி பெற

கருப்பற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற்பாதத் தநுபூதி
சிறக்கப்பாலித் தருள்வாயே
பரப்பற்றாருக் குரியோனே
பரத்துப்பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற்சோதிப் பெருமாளே.

## முருகன் தரிசனம் தர

எந்தத் திகையினு மலையினு முவரியி
னெந்தப் படியினு முகடினு முளபல
எந்தச சடலமு முயிரியை பிறிவியி னுழலாதே
இந்தச் சடமுட னுயிர்நிலை பெறநளி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின் முறையோடே.

சந்தித் தரஹர சிவசிவ சரணென
கும்பிட் டிணையடி யவையென தலைமிசை
தங்கப் புளகித மெழ இரு விழிபுனல் குதிபாயச்
சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை யுவரியுமறுகச லரிபேரி
துன்றச்சிலைமணி கலகல கலினென
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தர
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடு
மயில்வேலா
கந்தச் சடைமுடி கனல்வடி வடலணி
யெந்தைக் குயிரெனு மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி யுமையரு ளிளையோனே
கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில் திகழ் குருமலை மருவிய
பெருமாளே.

## முருகன் தரிசனம் தர

காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
காலினார் தந்துடன் கொடுபோகக்
காதலார் மைந்தருந் தாயரா ருஞ்சுடுங்
கானமே பின்தொடர்ந் தலறாமுன்
சூலம் வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்புந்
தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்
ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுந்
தேவர்வா ழுன்றுகந் தமுதீயும்
ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் மருகோனே
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே
தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்ப்பொருள் வைக்க

அம்பு ராசியிற் கெண்டை சேலொளித்
தஞ்ச வேமணிக் குழைவீசும்

அங்க ணாரிடத் தின்ப சாகரத்
தங்கி மூழ்குமிச் சையினாலே

எம்பி ராஜனைச் சிந்தி யாதொழித்
திந்த்ர சாலஇப் ப்ரமைதீர

இங்கு வாவெனப் பண்பி னாலழைத்
தெங்கு மான மெய்ப் பொருள்தாராய்

கொம்பு போலிடைத் தொண்டை போலிதழ்க்
கொண்டல் போல் குழற் கனமேருக்

குன்றுபோல் முலைப் பைங்கி ராதியைக்
கொண்ட கோலசற் குணவேலா

சம்ப ராரியைக் கொன்ற தீவிழிச்
சம்பு போதகக் குருநாதா
சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத்
தஞ்சை மாநகர்ப் பெருமாளே.

## முருகன் தரிசனம் தர

முந்து தமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே

முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தாநு முனைமீதே

திந்தி திமி தோதி தீதித் தீதி
தந்தன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத்தோடு நடமாடுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்க அநு கூல பார்வைதீர
செம்பொன் மயில் மீதி லேயெப் போது வருவாயே

அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ் சொல் பாவின் மாலைக்கார
அண்டருபகார சேவற் கார முடிமேலே

அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார
குன்றுருவ ஏவும் வேலைக்கார
அந்தம் வெகுவான ரூபக்கார
எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான

செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்திநகர் வாழு மாண்மைக் கார பெருமாளே.

## நற்கதிபெற

நிடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் புதமான
செயலிலி மெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க் கமுமீதே
இடமிலிகைக் கொடையிலி சொற்கியல்பி லிநற்றமிழ்பாட
இருபதமுற் றிருவினையற் றியல் கதியைப் பெற
வேணும்
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப் பொரும்வேலா
கிரணகுறைப் பிறையறுகக் கிதழ்மலர்கொக்
கிறகோடே
படர்சடையிற் புனை நடனப்பரமர்தமக் கொருபாலா
பலவயலிற் றரளநிறைப்பழநிமலைப் பெருமாளே.

## இகபர நலங்கள் வாய்க்க

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுயராற்றி லுழலாதே
இசைபயில் சடாசஷ ரமதாலே
இகபரசௌ பாக்ய மருள்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுபதிசி வாக்ய முணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

## வாக்கு வன்மை பெற

புமியதனிற் ப்ரபுவான புகலி யில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக்கருள்வாயே
சமரிலெதிர்த் தசுர்மாள தனியயில்விட் டெறிவோனே
நமசிவயப் பொருளானே ரசதகிரிப் பெருமாளே.

## திருவடியைப்பாடும் ஆற்றல்

அஞ்சுவித பூத முங்கரண நாலு
மந்திபகல் யாது மறியாத
அந்தநடு வாதி யொன்றுமில தானே
அந்தவொரு வீடு பெறுமாறு
மஞ்சுதவழ் சார லஞ்சயிலவேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்தசரணார விந்தமது பாட
வண்டமிழ் விநோத மருள்வாயே

குஞ்சரக லாப வஞ்சியபி ராம
குங்குமபடீர வதிரேகக்
கும்பதன மீது சென்றணையு மார்ப
குன்று தடுமாற இகல்கோப
வெஞ்சமர சூர னெஞ்சுபக வீர
வென்றிவடி வேலை விடுவோனே
விம்பமதில் சூழு நிம்பபுர வாண
விண்டலமெ கீர் பெருமாளே.

## செந்தமிழால் முருகனைப்பாட

பரவு நெடுகதி ருலகில் விரும்பிய
பவனி வரும்படி யதனாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகர வளங்களு நிகர விளங்கிய
இருளை விடிந்தது நிலவாலே

வரையினி லெங்கணு முலவி நிறைந்தது
வரிசைதரும்பத மதுபாடி

வளமொரு செந்தமி முரைசெய அன்பரு
மகிழவ ரங்களு மருள்வாயே

அரஹர சுந்தர ஆறுமுக என்றுனி
அடியர்ப ணிந்திட மகிழ்வோனே

அசலநெடுங்கொடி அமையுமை தன்சுத
குறமக ளிங்கித மணவாளா

கருதரு திண்புய சரவணகுங்கும
களபமணிந்திடு மணிமார்பா

கனகமி கும்பதி மதுரைவ ளம்பதி
யதனில் வளர்ந்தருள் பெருமாளே.

## அறிவால் இறைவனை அறிய

சுருதி மறைகளிருநாலு திசையி லதிபர் முனிவோர்கள்
துகளி லிருடி யெழுபேர்கள் சுடர்மூவர்
சொலவில் முடிவில் முகியாத பகுதி புருடர் நவநாதர்
தொலைவி லுடுவி னுலகோர்கள் மறையோகள்
அரிய சமய மொருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியு மயனு மொருகோடி யிவர்கூடி
அறிய அறிய அறியாத அடிக ளறிய அடியேனும்
அறிவு ளறியு மறிவூற அருள்வாயே
வரைகள் தவிடு பொடியாக நிருதர் பதியுமழிவாக
மகர சலதி அளறாக முதுசூரும்
மடிய அலகை நடமாட விஜய வனிதை மகிழ்வாக
மலிவு சிதறி இரைதேடி வருநாய்கள்
நரிகள் கொடிகள் பசியாற உதிர நதிகளலைமோத
நமனும் வெருவி யடிபேண மயிலேறி
நளின வுபய கரவேலை முடுகு முருக வடமேரு
நகரி யுறையு மிமையோர்கள் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞான ஒளி காண

காவி யுடுத்துந் தாழ் சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொடி றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சிவ னொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சிதள பத்மந் தருவாயே
பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா
தூவிகள் நிற்குஞ்சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும் புலியூரா
சூரர் மிகக் கொண்டாட நடிக்குந்
தோகை நடத்தும் பெருமாளே.

## மெய்ஞான உபதேசம் வேண்டுதல்

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப்பேசொணாதது நெஞ்சினாலே

மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குத் தோணொ ணாதது
மாயைக்குச் சூழொணாதது விந்துநாத

ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதியானது கண்டுநாயேன்

யோகத்தைச் சேரு மாறு மெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடிடாதும யங்கலாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்பட் டேனல் காவல் செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப் பொற் பாதமேபணி கந்தவேளே

ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா

நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொணாதென நின்றநாதா

நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்சிராமலை
நாதர்க்குச் சாமியேசுரர் தம்பிரானே

**இம்மை, மறுமை இரண்டிலும் சுகம் பெற**

உறவின்முறை யோர்க்கு முறுதுயரம் வாய்த்தும்
உளமுருகு தீர்த்த உடலூடே

உடலைமுடி வாக்கு நெடியதொரு காட்டி
லுயர்கனலை மூட்டி விடவாவி

மறலிமற மார்த்த கயிறுதனை நீக்கி
வலியினொடு தாக்கி வளையாமுன்

மனமுமுனி வேட்கை மிகவுமுன தாட்கள்
மகிழ்வியல் கொ டேத்த மதிதாராய்

பிறை நுதலி சேற்க ணமையரிவை வேட்கும்
வரையில்மற வோர்க்கு மகவாகப்

பிறிதுருவில் வாய்த்து நிறைதினைகள் காத்த
பிடியினடி போற்று மணவாளா

அறுகுபிறை யாத்தி அலைசலமு மார்த்த
அடர்சடையி னார்க்கும் அறிவீவாய்

அடரவரு போர்க்கை அசுரகிளை மாய்த்தும்
அமரர் சிறை மீட்ட பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மை, மறுமை இரண்டிலும் சுகம்பெற

தனதனன தாத்த தனதனன தாத்த
தனதனன தாத்த தனதான

இருவினைக ளீட்டு மிழிவுபடு கூட்டை
எடுமெடென வீட்டில் அனைவோரும்

இறுதியிடு காட்டி லழுதுதலை மாட்டி
லெரியவெரி மூட்டி இடுமாறு

கரியவிரு கோட்டு முரணெருமை மோட்டர்
கயிறிறுக மாட்டி அழையாமுன்

கனகமணி வாட்ட மருவுகழல் பூட்டு
கழலிணைகள் காட்டி அருள்வாயே

பருவமலை நாட்டு மருவுகிளி யோட்டு
பழையகுற வாட்டி மணவாளா

பகைஞர்படை வீட்டில் முதியகன லூட்டு
பகருநுதல் நாட்ட குமரேசா

அருமறைகள் கூட்டி உரை செய்தமிழ் பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே

அலைகடலி லீட்ட அவுணர்தமை யோட்டி
அமரர் சிறை மீட்ட பெருமாளே.

## திருமணம் நடைபெற

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரு சிறப்பாக வளர

மதியால்வித் தகனாகி மனதாலுத் தமனாகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே
நிதியேநித் தியமேயென் நினைவேநற் பொருளாயோய்
கதியேசொற் பரவேளே கருவூரிற் பெருமாளே

## முருகன் திருவடி சேர

அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அலைவிய மலமொழுக அகலாதே
அனையுமனை யருகிலுறவெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே

செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே
சிவனைநிகர் பொதியவரை முநிவனக மகிழஇரு
செவிகுளிர இனிய தமிழ் பகர்வோனே.

நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நிலவுமறை யவனிவர்களலைய அரசுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே

மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரு மிளையோனே
மதலைதவ முத்தியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் கரையிலுறை பெருமாளே.

## உயிர்போகும்பொழுது

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளைய இதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர்நகையாடி

தொண்டு கிழவ னிவனா ரென இருமல்
கிண்கி ணெனமுனுரையே குளறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பிணியு மதிலே மிடையு மொரு
பண்டிதனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி

மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்
மிசைவரவேணும்

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதாருயிர்வருக அபிராம

இங்கு வருக அரசே வருக முலை
யுண்க வருக மலர்சூடிவருக
என்று பரிவி னொடு கோசலைபுகல வருமாயன்

சிந்தை மகிழு மருகா குறவரின
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா

திங்களரவு நதி சூடியபரமர்
தந்த குமர அலையே கரை பொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் பெருமாளே.

## உயிர் போகும்பொழுது

தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முதுகுதட வியதாயார்
தம்பி பணிவிடை செய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி ரெனவேசார்
மைந்தர் மனைவியர்கடும்பு கடனுதவு
மந்த வரிசை மொழி பகர்கேடா
வந்து தலைநவிர வீழ்ந்து தரைபுகம
யங்க வொருமகிட மிசையேறி

அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனமை
தன்பனென மொழிய வருவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு மயில்வீரா
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
செந்தி னகரிலுறை பெருமாளே.

## இறுதி வேளையில் முருகன் பெயர் சொல்ல

சூதினுண வாசைதனி லேசுழலு மீனதென
தூசுவழ காணவடி வதனாலே
சூதுமுட னேருமென மாதர் நசைதேடு பொரு
ளாசைதமி லேசுழல வருகாலன்
ஆதிவிதி யோடுபிற ழாத வகை தேடியென
தாவிதனை யேகுறுகி வருபோது
ஆதிமுருகாதி முருகாதி முருகா எனவு
மாதி முருகா நினைவு தருவாயே
ஓதமுகிலொடுகிரி யேறுபட வாழுசுரர்
ஓலமிட வேயயில்கொ டமராடீ
ஓநமசிவாய குருபாத மதிலே பணியும்
யோகமயிலா வமலை மகிழ்பாலா
நாதரகு ராம அரிமாயன் மருகாபுவன
நாடுமடியார்கள்மன துறைவோனே
ஞானசுரவானை கணவா முருக னேயமரர்
நாடு பெற வாழவருள் பெருமாளே.

## மரணம் நெருங்கும் போது

உறவின் முறை கதறியழ ஊராரு மாசையுற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
உலகிலுள பலரரிசி வாய்மீதிலே சொரியு
மந்தநாளில்

உனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரள்புயமு மெழில் பணி கொள்வார்காது
நீள்விழியு
முபயபத மிசைகுலவு சிரேறு நூபுரமும்
அந்தமார்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையமறைய அமரர்தரு பூமாரியே சொரிய
மதுவொழுகு தரவிஸ்மணி மீதேமு நூலொளிர
மயிலின்மிசை யழகுபொலி யாளாய்மு னாரடியர்
வந்துகூட

மறமிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனை யாளஇநுன்
வந்திடாயோ

பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
அதிரஎழு புவியுலக மீரேழு மோலமிட
பிடிகளிறி னடல்நிரைகள் பாழாகவே திசையில்
நின்றநாகம்

பிரிய நெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமு முணவு செய்து பேயோடு
மாடல்செய்வென்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட
கரடிபுலி திரிகடிய கானில்மிகு
குளிர்கனியி னிளமரம தேயாகி நீடியுயர்
குன்றுலாவி

கொடியதொரு முயலகனின் மீதாடுவாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெறா வருள்செய்
குமரகு ருபர அமரர் வானாடர்பேண அருள்
தம்பிரானே.

## மரணம் நெருங்கும் போது

எழுவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகாவென வோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
மதுசூ ரரமேல் விடும்வேலா
திருமால் பிரமா வறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில் சேரழகார் பொழில்சூழ்
திருவீழி யில்வாழ பெருமாளே.

## முருக நாமங்கள் ஓதும் போது

இருவினை யஞ்ச வருவினை கெஞ்ச
இருள் பிணி துஞ்ச மலமாய
எனதிடர் மங்க வுனதருள் பொங்க
இசைகொடு துங்க புகழ்கூறித்
திருமுக சந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த குகவேல
சிவசிவ என்று தெளிவுறு நெஞ்ச
திகழுந டஞ்செய் கழல்தாராய்
மருதொடு கஞ்ச னுயிர்பலி கொண்டு
மகழரி விண்டு மருகோனே
வதைபுரிகின்ற நிசிசரர் குன்ற
வலம்வரு செம்பொன் மயில்வீரா
அருகுறுமங்கை யொடுவிடை யுந்து
மமலனுகந்த முருகோனே
அருள்செறி பந்த ணையிலிரு மங்கை
அமளிந லங்கொள் பெருமாளே.

## முருக நாமங்கள் ஓதும் பேறு கோர

மாலைதனில் வந்து வீதி தனில் நின்று
வாசமலர் சிந்து குழல்கோதி
வாரிருத னங்கள் பூணொடு குலுங்க
மால் பெருகி நின்ற மடவாரைச்
சாலைவழி வந்து போமவர்க ணின்று
தாழ் குழல்கள் கண்டு தடுமாறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகமயல் கொண்டு மாலிருள முந்தி
சாலமிக நொந்து தவியாமற்
காலையிலெழுந்து னாமமே மொழிந்து
காதலுமை மைந்த எனவோதிக்
காலமுமுணர்ந்து ஞானவொளி கண்கள்
காண அருளென்று பெறுவேனோ
கோலமுட னன்று சூர்படையின் முன்பு
கோபமுட னின்ற குமரேசா
கோதையிரு பங்கின் மேவவளர் கும்ப
கோண நகர் வந்த பெருமாளே.

## பிறவி வேறு

அப்படி யேழு மேழும்வ குத்துவ ழூது போதினி
லக்ரம்வி யோம கோளகை மிசைவாழும்
அசஷரதேவி கோவின் விதிப்படி மாறிமாறிய
லைந்துரு வாய காயம தடைவேகொண்
டிப்படியோனி வாய் தொறு முற்பவியாவிழாவுல
கிற்றடு மாறி யேதிரி தருகாலம்
எத்தனை யூழி காலமெனத்தெரியாது வாழியி
லிப்பிற வாது நீயருள் புரிவாயே
கற்பகவேழ மேய்வன பச்சிள ஏனல் மீதுறை
கற்புடை மாது தோய்தரு மபிராம
கற்புர தூளி லேபன மற்புய பாக சாதன
கற்பக லோக தாரண கிரிசால
விப்ரச மூக வேதன பச்சிம பூமி காவல
வெட்சியு நீப மாலையு மணிவோனே
மெத்திய ஆழி சேறெழ வெற்பொடு சூரனீறெழ
விக்ரம வேலை யேவிய பெருமாளே.

## பிறவி வேறு

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பலபேசி யதனூடே

நெடுநாளு முழைப்புள தாகி
பெரியோர்க ளிடைக்கரவாகி
நினைவால்நி னடித்தொழில்பேணி துதியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையான வுடற்பிணி யூறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்தியமாகி தடுமாறித்

தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திட வேநி னருள்தாராய்

கலியாண சுபுத்திரனாக
குறமாது தனக்குவி நோத
குவிணாரு புயத்திலுலாவி விளையாடிக்

களிகூரு முனைத்துணை தேடு
மடியேனை சுகப்பட வேவை
கடனாகு மிதுக்கனமாகு முருகோனே

பலகாலு முனைத் தொழுவோர்கள்
மறவாமல் திருப்புகழ்கூறி
படிமீது துதித்துடன்வாழ அருள்வேளே

பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வைத்தியநாத பெருமாளே.

## ஆபத்துக்கள் வரினும், பயணம் புறப்படும் பொழுதும்

நானென் செய்யும் வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ்சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

கந்தரலங்காரம்

## தனிவழி நடக்கும் பொழுது

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

கந்தரலங்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலையும் மாலையும்

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

கந்தரலங்காரம்

## உண்பதற்கு முன்

பொருபிடி யுங்களிறும் விளையாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினையோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.

கந்தரலங்காரம்

*

## மயில் விருத்தம்

சக்ரப்ரசண்ட கிரிமுட்டக் கிழிந்து வெளி
பட்டுக்கரவுஞ்ச சயிலந்
தகரப்பெரங்கனக சிகரச்சிலம்பு மெழு
தனிவெற்புமம் புவியுமெண்
மக்குத் தடங்குவடு மொக்கக் குலுங்க வரு
சித்தப் பதம் பெயரவே
சேடன் முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர்
திடுக்கிட நடக்கு மயிலாம்
பக்கத்திலொன்றுபடு பச்சைப் பசுங்கவரி
பத்மப் பதம் கமழ் தரும்
பாகீரதிச் சடில யோகீசுரர்க்குரிய
பரமவுபதேச மறிவிக்
கைக்குச் செழுஞ்சரவணத்திற பிறந்தவொரு
கந்தசுவாமி தனிகைக்
கல்லாரா கிரியுருக வருகிரண மரகத
கலாபத் திலகு மயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாளபாதாளம் பெயரவடிபெயரமு
தண்டமுகடது பெயரவே
யாடரவ முடிபெயர எண்திசைகள் பெயர வெறி
கவுட்கிரி சரம் பெயரவே
வேதாள தானங்களுக்குக் கிசைய ஆடுவார்.
மிக்குப்ரியப்பட விடா
விஸி பவுரி கவுரி கண்டுளமகிள விளையாடும்
விஸ்தாரநிர்த்தம் மயிலாம்
மாதாநுபங்கியெறு மாவது சகோதரி
மகிதரி கிராத குலிமா
மறைமு நிகுமாரிசாரங்கனந் தனில்வந்த
வள்ளி மணி நூபுர மலர்ப்
பாதாரவிந்த சேகரனே யமலருமுற்
பலகிரி யமர்ந்த பெருமாள்
படைநிருதர் கடகமுடை படநடவு பச்சைப்
பசுந்தோகை வாகை மயிலே.

சேக்ஷத்திரக் கோவை

-------------

கும்ப கோண மொடாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கோன்றை வேணியர் மாயூரமம் பெறு — சிவகாசி
கொந்துலாவிய ராமேசுரந் தனி
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி — தனில்வாழ்வே
செம்புகேசுர மாடானை யின்புறு
செந்தி வேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ — செகநாதன்
செஞ்சலேரக மாவாவினன்குடி
குன்று தோறுடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் — வருதேவே
கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்புலாவிய காவேரி சங்கமு
கஞ்சிராமலை வாழ்தேவ தந்திர — வயலூரா
கந்தமேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயா யகம்படு
கண்டியூர்வரு சாமீ கடம்பணி — மணிமார்பா
எம்பிரானொடு வாதாடு மங்கைய
ரும்பர் வாணிபொனீள் மால் சவுந்தரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாள் தொறு மேர்பாக நின்றுறு துதியோதும்
இந்திராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய் மணந்துல
கேங்கு மேவிய தேவாலயந்தொறு பெருமாளே.

வேலும்மயிலும் துணை.

❄

## வேல் வகுப்பு

01) பருத்தமுலை சிறுத்த இடை வெழுத்தநகை கறுத்தக்குழல் சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்கு நிகராகும்.
02) பனைக்கை முக படக்கரடமதக்கவள கசக்கடவுள் பதத்திடு நிகழத்துமுளை தெறிக்க வரமாகும்.
03) பழுத்தமுது தமிழ்பலகை இருக்கும் ஒருகவிப்புலவன் இசைக் குருகிவரைக்குகையை இடித்துவழிகாணும்.
04) பசித்த அலகை முசித்தழுது முறைப்படுதல் ஒழித்து அவுணர் உரத்து உதிரம் நிணத்தசைகள் புசிக்க அருள்நேரும்.
05) சுரர்க்கும் முனிவருக்கும் மகபதிக்கும் விதிதனக்கும் அரிதனக்கும் நரர்தமக்கும் உறும் இடுக்கண் வினைசாடும்.
06) சுடர்ப்பரிதி ஒளிப்ப நிலவுக்கும் மதி ஒளிப்ப அலை அடக்கு தழல் ஒளிபஒளிர் ஒளிப்பிரபை வீசும்.
07) துதிக்கும் அடி அவர்க்கு ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர் குலத்தை எனக்கொர்துணையாகும்.
08) சொலர்க்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கி எழும் அறத்தை நிலைகாணும்.
09) தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி படைத்த விறவல் படைத்தஇறை கழற்கு நிகராகும்.
10) தலத்தில் உள கணத்தொகுதிகளிப்பின் உணவு அழைப்பதென மலர்க்கமலவிதிர்க்கவளை வாகும்.
11) தனித்துவழி தடக்கும் என திடத்தும் ஒரு வலத்தும் இரு புறதிதும் மருகி அடுத்த இரவு பகல் துணையதாகும்.
12) சலத்துவரும் அரக்கர் உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர் சிவத்ததொடையெனச்சிகையில் விருப்பமொடு சூடும்.
13) திரைகடலை உடைத்து நிறைபுனற்கடிது குடித்து உடையும் உடைப்பு அடை அடைத்து உதிர நிறைத்து விளையாடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) திசைக்கிரியை முதற்குவிசன் அறுத்த சிறை முளைத்ததென முகட்டினிடைபறக்க அற விசைத்து அதிரவோடும்.
15) சினத்து அவுணர் எதிர்த்தரணகளத்தில்வெகு குறைத்தலைகள் சிரித்து எயிறு கடித்துவிழி விழித்து அலறமோதும்.
16) திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தமலை விருத்தன் எனது உளத்திலுறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே.

1. தெளிவுரை.

திருத்தணிகை முருகன்வேல் பருத்திருக்கும் முலைகளையும் சின்ன சிறியதாகச் சிறுத்திருக்கும் இடையினையும் வெளுத்திருக்கும் பற்களையும் கறுத்திருக்கும் கூந்தலையும்இ சிவத்திருக்கும் வாயிதழ்களையும் உடைய வீரக்குலமாம் வேடர் குலச் சிறுமியாகிய வள்ளியம்மையின் கண்ணுக்கு ஒப்பாகும்.

2. பனைமரம்போன்ற துதிக்கையையும் முகத்தே அணிந்த துணியினையும் மதம் ஒழுகுவதற்குரிய வழியினின்று பெருகும் மதத்தினையுமுடைய வெள்ளையானையின் கடவுளாகிய இந்திரனுடைய கால்களில் கட்டப்பெற்றிருந்த விலங்கினுடைய இணைப்புப் பகுதிகள் இற்று விழுவதற்கு ஒத்த வலிமையும் மேன்மையும் உடையதாகும். அவ்வேல்.

3. முழுமையாய் நிறைவுபெற்றது பழமையானதுமான தமிழ்ச் சங்கப்பலகையில் வீற்றிருக்கும் தகுதியை உடையவனும். ஒப்பற்ற அருட்கவியைப் பாடும் புலவனும் ஆகிய நக்கீரனாரின் இசை தழுவிய பாடலாகிய திருமுருகாற்றுப்படைக்கு மனம் உருகி அவருக்கும் அவரோடு அடைபட்டுக்கிடந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பேருக்கும் விடுதலை நல்கியதோடு, அவர்கள் நற்கதியை அடையவும் வழியமைத்துக் கொடுத்ததாகும்.

4. பசியினால் வருந்திய பேய்க்கூட்டங்கள் விக்கி விக்கி அழுது உணவுவேண்டும் என்று முறையிட்டழுகின்றன. அவைகள் அவ்வாறு முறையிட்டழாதவாறு செய்யமுற்பட்டு, அசுரர்களுடைய மார்பினின்றும் ஒழுகும் வலிமை வாய்ந்த இரத்தம், கொழுப்பு, தசைகள் ஆகியவைகளை அப்பேய்க்கூட்டங்கள் உண்ணுமாறு அருள் வழங்கியதாகும் அவ்வேல்.

5. தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் இந்திரனுக்கும், பிரமனுக்கும், திருமாலுக்கும் , மனிதர்களுக்கும் யாவராலும் தடுத்தற்கரிய நிலையில் வந்து தாக்கித்துன்பம் விளைவிக்கும் ஆற்றல் வாய்ந்த முன்வினைகளை முன்கூட்டியே சென்று தாக்கி அழிக்கும் அவ்வேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஒளி இருக்கின்ற சூரியனும் , தோற்றோடிமறைய குளிர்ந்த ஒளிக்கற்றைகளை முறையாக வெளிப்படுத்தும் சந்திரனும் தோற்றோடிமறைய கடலின் பேராற்றலை உள்நின்று ஈர்த்து அடக்கும் ஆற்றல்வாய்ந்த வடவைமுக நெருப்பும் தோன்றி மறைய அம்மூன்றொளிகளின் பண்புகளும் முழுமையாக அமைந்து விளங்கும் ஒளித்தொகுதியை எல்லையின்றிப் பொழியும் அவ்வேல்.

7. துதித்து வணங்கும் அடியவர்களுக்கு அழிவை உண்டாக் கவோ, துன்பம் உண்டாக்கவோ யாரேனும் நினைத்தால் நினைத்த அவரைமட்டுமன்றி அவருடைய குலம் முழுவதையும் ( பகைக்குலம் ) வேருடன் அற்று ஒழியுமாறு செய்யும். எளியவனுக்கு என்றும் ஒப்பற்ற துணையாக அமையும் அவ்வேல்.

8. முழுமையாகச் சொல்லப்பெற்று விட்டது என்றுகூறுவதற்கு இயலாத வகையில் எல்லையற்ற பெருமையுடைய திருப்புகழை எடுத்துச் சொன்னவர்களுக்கு — பொருளுணர ாமலேயும் சொன்னவர்களுக்கு , அவர்களை வந்து அண்டிய பகையினை வேருடன் களைந்து வீசியெறிவதற்காகவோ பங்கு கொண்டெழும் , அறநெறியானது அழியாது நிலைபெற்று நிற்பதற்குரிய வழிமுறைகளை உண்டாக்கிச் செயற்படுத்தி அறத்தை நிலைநிறுத்தும்.

9. விரைந்து செயற்படுத்தும் ஊக்கத்துடன் புறப்பட்டுவந்து தாக்கி அழிக்க இயமன் வருவானாயின் வெள்ளெருக்கினை யும், பிறைச்சந்திரனையும் தம் திருமுடியில் உண்டாக அமைத்துக்கொண்டிருப்பவனும் பேராற்றலை உண்டாக்கப் பெற்றவனுமாகிய இறைவனாம் சிவபெருமானுடைய திருவடி களை ஒப்பாக நிற்கும் அவ்வேல் ஒரு திருவடியானது இயமன் வருகையை விலக்கும் ஏனைத்திருவடி அழியா இன்பத்தைக் கொடுக்கும் இவ்விரண்டையும் ஒப்பச்செய்யும் அவ்வேல்.

10. உடல் என்னும் இடத்தைப் பொருந்தியிருக்கும் நிலையில் உண்டு என்று கருதுதற்கு ஒத்த உயிர்க்கூட்டங்களின் தொகுதி முழுவதும் மிக்க மகிழ்வை அடைவதற்குக் காரணமாக அமைந்த இனிய உணவை அழைப்புக்கும் செயல்: இதுதான் என உணருமாறு, தாமரை மலரனைய திருக்கை நுனியால் (வேலை) அசைக்க, அவ்வசைப்பைப் பெற்ற மாத்திரத்திலேயே உண்பதற்கேற்ற வகையில் அவ்வுணவினை அமைத்துக் கொடுத்துவிடும் அவ்வேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தணிகை முருகன் வேல் தனக்கென அமைத்துக்கொண்ட தனிவழியையுடையது ; பிறரைச் சாராத தனித்த நடையுடையது ஆகும். அத்தகைய தனிமையும் கொண்ட அது என்னுடன் இணைந்து என்னுரிமையில் யான் நடக்கத்துணை புரியும், என் உரிமையில் நடக்கும் போதும் என் வெற்றியை அளிக்க வலப்பக்கத்ததாகும். என் இருபுறங்களிலும் இணைந்து நிற்பதையே மேற்கொண்டு இரவு பகல் என உணரப்பெறும் எக்காலத்தும் எனக்குத்துணை யாகும் அவ்வேல்.

12. வஞ்சனை செய்வதையே தொழிலாகக் கொண்டு அதனையே செயல்படுத்திவரும் அரக்கர்களின் உடலில் கொழுத்தும் வளர்ச்சியால் பெருத்தும் இருக்கின்ற குடர்களை பிடுங்கிச் சிவந்த நிறத்தையுடைய மாலையாகத் தன் முடியில் விருப்பமுடன் சூட்டிக்கொள்ளும் அவ்வேல்.

13. அலைகளோடு கூடிய பெருங்கடல் ; அது பொங்கி எழாதவாறு — விரிந்தும், விரைந்தும் சென்று உலகை அழிக்காதவாறு அதனைப் பேராற்றல் வாய்ந்த ஒன்று கட்டுக்கோப்புடன் நிறுத்திவருகிறது. அக்கட்டுக்கோப்பினை உடைத்து ; அங்கே நிறைந்திருக்கும், தண்ணீரை விரைவில் குடித்துஎதுவும் இல்லை என்ற நிலையை உண்டாக்கும் பின்னா தன்னால் உடைத்ததால் உடையும் ஓட்டைக் கட்டுக்கோப்பினை எத்தகைய பேராற்றலும் உடைக்க முடியாதவாறு ; பொருத்தமுற அடைக்கும். அடைத்த அவ்விடத்தே அவ்வுணர்வுகளின் இரத்தத்தை நிறையுமாறு செய்யும். இவ்வாறு திருவிளையாடல் செய்யும் அவ்வேல்.

14. எட்டுத்திக்குகளிலும் உள்ள மலையின் சிறகுகளை முன்பு இந்திரன் தன் குலிசாயுதத்தால் அறுத்தனாக, அறுக்கப்பெற்ற சிறகுகள் மீளவும் முளைத்து மலைகளெல்லாம் பறக்கின்றன போலும், என்று கருதும்படி ஆகாயத்திலே பறப்பதற்கென மிகுந்த வேகத்தை உண்டாக்கிக் கொண்டு அனைத்தும் அதிர்ச்சியடையுமாறு ஓடும் அவ்வேல்.

15 இயல்பாகவெ சினம் மெற்கொண்டு எழும் அசுரர்கள் விரும்பிவந்து ; எதிர்த்த போர்க்களத்தில் அவர்களுடைய தலைகள் வெட்டப்பெற்றுப் பலவாகக் கிடக்கின்றன. உயிருள்ளவை எனக்கருதுவதற்குரிய முழுமைச் செயல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமையாலும் உயிரற்றவை எனக்கருதுவதற்குரிய ; செயலின்மை இல்லாமையாலும் இருநிலையிலும் சேராதவகையில் குறைத்தலைகளாக உள்ள தலைகள் சில இருக்கின்றன. சில பற்களைக் கடிக்கின்றன. சில கண்களை அகல விரிக்கின்றன. ஆனால் அவையனைத்தும் ஒருமிக்க அலறியழுமாறு சென்று மோதும் அவ்வேல்.

15. திருத்தணிகையில் பலரும் தன்னை எளிதிற் காணுமாறு தோற்றுவித்துக் கொண்டு அனைவருக்கும் அருள் வழங்கும் ஒன்றாய் நின்றவன் ; ஒப்பற்றவன் மலையுடன் தொடர்பு கொண்ட கடவுளர் எல்லோருள்ளும் பழமையானவன். என் உள்ளத்தில் தங்கியிருக்க வேண்டும் என்ற கருத்தினையுடையவன் திருத்தணியில் காட்சிப் பொருளா யிருப்பவன். என் உள்ளத்தில் என் அனுபவத்துக் கொத்த கருத்துப் பொருளாக உறைந்துளன் அழகிய மயிலை நடத்தும் ஆற்றலுடையவன் ; குகன். அவனது வேல்.

வேல்வகுப்புத் தெளிவுரை முற்றும்.

## திருப்புகழ் பொதுப்பாட்டு

நாகாங்க ரோமங்காட்டி வாரேந்து நாகங்காட்டி
நாமேந்து பாலங்காட்டி யபிராம
நானாங்க ராகங்காட்டி நாகேந்த்ர நீலங்காட்டி
நாயேன் ப்ரகாசங்காட்டி மடலூர
மேகாங்க கேசங்காட்டி வாயாம்பல் வாசங்காட்டி
மீதூர்ந்த போகங்காட்டி உயிரீர்வார்
மேல் வீழ்ந்து தோயுந்தூர்த்தன் மோகாந்த காரம் தீர்த்த
வேதாந்த தீபம் காட்டி யருள்வாயே
ஏகாந்த வீரம் போற்றி நீலாங் கயானம் போற்றி
யேடார்ந்த நீபம் போற்றி முகில்தாவி
ஏறேங்க லேழுஞ் சாய்த்து நான்மூன்று தோளும் போற்றி
யார்வேண்டினாலுங் கேட்ட பொருளீயும்
த்யாகாங்க சீலம் போற்றி வாயோய்ந்திடாதன்றார்த்து
தேசாங்க சூரன் தோற்க மயிலேறிச்
சேவேந்தி தேசம் பார்க்க வேலேந்தி மீனம் பூத்த
தேவேந்த்ரலோகங் காத்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதகலாதிகள் கொண்டு யோகமுமாக மகிழ்ந்து
பூசைகள் யாது நிகழ்ந்து பிழைகோடி
போம்வழியேது தெரிந்து ஆதியனாதியிரண்டு
பூரணி காரணி விந்து வெளியான
நாத பராபரமென்ற யோகியுலாசமறிந்து
ஞான சுவாசமுணர்ந்து வெளிகாண
நாடியோராயிரம் வந்த தாமரை மீதிலமர்ந்த
நாயகர் பாதமிரண்டு மடைவேனோ
மாதுசர்வேஸ்வரி வஞ்சி காளி பிடாரி விபஞ்சி
வாணி வராகி மடந்தை யபிராமி
வாழ் சிவகாமசவுந்தரி யாலமெலா முகபஞ்ச
வாலைபுராரியிடந்த குமையாயி
தேவபுராணம் விளம்பி நீலமுராரியர் தங்கை
மேலொடு **கீழுலகங்கள்** தருபேதை
வேடமெலா முகசங்க பாடலோடாடல் பயின்ற
வேணியர் நாயகி தந்த பெருமாளே.

குருதி சலந்தோலுங் குடலுடனென்பாலுங்
குலவியெழுங்கோலங் தனில்மாயக்
கொடுமையுடன் கோபங் கடுவிரகஞ்சேருங்
குணவுயிர் கொண்டேகும்படிகாலன்
சுரதிநெடும் பாசங் கொடுவர நின்றாயுங்
கதறமறந்தே னென் றகலாமுன்
கமல மலர்ந் தேறுங் குகனெனவும் போதுன்
கருணைமகிழ்ந்தோதுங் கலைதாராய்
நிருதர் தளஞ்சூழும் பெரிய நெடுஞ்சூரன்
நினைவு மகிழ்ந்தோடும் படிவேலால்
நிகரிலதம் பாரொன்றிமையவர் நெஞ்சால் நின்
நிலைதொழ நின்றேமுனை பொருவிரா
பருதியுடன் டெழுபாரும்
பயமறநின்றாடும் பரமருளங்கூறும்
பழமறை யன்றோதும் பெருமாளே.

மூலா நிலமதின் மேலே மனதுறு
மோகாடவி சுடர் தனைநாடி
மோனாநிலைதனை நானாவகையிலு
மோதா நெறிமுறை முதல்கூறும்
லீலா விதமுனதாலே கதிபெற
நேமாரகசிய வுபதேசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடூழிதனிலை வாடாமணியொளி
நீதாபலமது தருவாயே
நாலாருசியமுதாவே திருமறை
நாலாயது செப மணிமாலை
நாடாய் தவரிடர் தேடாவரிகரி
நாராயணார் திரு மருகோனே
சூலாதிபர் சிவஞானார் யமனுதை
காலார்தரவரு குருநாதா
தோதீ திகுதிகு தீதீ செகசெக
சோதிநடமிடு பெருமாளே.

## துணை நூல்கள்


01) அருணகிரிநாத அடிகள் புராணம்
வண்ணச்சரபம், திருப்புகழ் அடிகள், முருகதாச அடிகள் என வழங்கும் அருள்மிகு தண்டபாணி அடிகள்
விளக்கவுரை தவத்திரு தி.செ.முருகதாச அடிகள்.
திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1/140 பிரகாசம்சாலை சென்னை.

02) கந்தர் அநுபூதி
அருணகிரிஹ்ருதயம்
விரிவுரை தாராகாடு கிருஷ்ணய்யர்
ஸ்ரீ.பத்மநாபன்
கார்த்திகேயன் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

03) முருகதரிசனம்
ஆசிரியர் எஸ்.நடராஜன்
பிரதிபா பிரசுரம், 25 ஆடம்தெரு, மயிலாப்பூர் சென்னை.

04) கந்தரநுபூதி விரிவுரை
உரையாசிரியர் கிருபானந்தவாரி
திருப்புகழமிர்தம்
சிந்தாரிப்பேட்டை, சென்னை.

05) அருணகிரிநாதர்
600ஆம் ஆண்டு பெருவிழா மலர்
யாழ் இந்து இளைஞர் மன்றம், யாழ்ப்பாணம்.

06) ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த திருப்புகழ்
வானதி பதிப்பகம், 13.தீனதயாளுதெரு ,திநகர், சென்னை – 17.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

பக்கம்

| | |
|---|---|
| 14 | விநாயகர்துதி – தொத்திர → தொப்பண |
| 22 | 14ம் வரி முருகர் |
| 67 | பொருப்பது... 2ம் வரி முனக்கெது. |
| 68 | ஆறுமுகம் 4ம் வரி துணையை , 6ம் வரி ஈசனை மானமுனை |
| 70 | சினத்தவர் 11ம் வரி தடுட்டுடு |
| 87 | சுருதி , புமி |
| 90 | நிலை |
| 100 | வேல்வகுப்பு 11ம் பகுதி 2ம் வரி → புறத்தும் , மருகு அடுத்து |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org